# மருந்தாகித் தப்பா மரஇனப் பெயர்கள்

மரப்பெயர் - இரண்டாம் பாகம்



புலவர் சுந்தர சண்முகனார்

252
76

# மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள்

ஆசிரியர்:
புதுப்படைப்புக் கலைஞர் – ஆராய்ச்சி அறிஞர்
முனைவர் **சுந்தர சண்முகனார்**
தமிழ் – அகராதித் துறைப் பேராசிரியர் (ஓய்வு)
புதுச்சேரி – 11.

கிடைக்கும் இடம்:
**சுந்தர சண்முகனார்**
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்
38–இரண்டாம் தெரு, வேங்கட நகர்
புதுச்சேரி – 605 011.

முதல் பதிப்பு: 1989
உரிமை ஆசிரியர்க்கே.

விலை: ரூ. 20-00

## அறிமுகம்

[ஒரு குறளுக்குப் புதிய உரை, நூல் நடுவே சொல்லப் பட்டிருக்கும். பல ஆய்வுகளும் உள்ளன. நூல் முழுதும் படித்துப் பாருங்கள்.] இது அறிமுகம்.

**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பக வெளியீடு**
புதுச்சேரி

அச்சகம்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்
73-A, கீழ ரத வீதி
சிதம்பரம்-1.

# காணிக்கை

மூளைக் கட்டிப் பிணி—பிட்யூட்டரி சுரப்பி தொடர்பான பிணி—நரம்புத் தளர்ச்சி—தலை வலி-மயக்கம்-ஆகிய பிணிகளால் சாகக்கிடந்த எனக்கு மருத்துவம் செய்து நலப்படுத்திப் பல அரிய பெரிய நூல்களை எழுதச் செய்த வரும் அனைத்துலகப் புகழ் பெற்ற மூளை—நரம்பியல் மருத்துவ மாமேதையும் ஆகிய சென்னை—உயர்பெருந்திரு டாக்டர். பா. இராம மூர்த்தி அவர்கட்கு நன்றியறிதலாக, ஓரளவு மருத்துவத் தொடர்புள்ள இந்த நூலைக் காணிக்கை யாக்குகின்றேன்.

சுந்தர சண்முகன்

# குறுக்க வடிவ விளக்கம்
## (Abbreviation)

அ. கு. பா. — அகத்தியர் குண பாடம்

இ. சா. – இலக்கியச் சான்று

சங் — அக — சங்கத்து அகராதி

சா. சி. பி. அ. — சாம்பசிவம் பிள்ளையின் தமிழ்—ஆங்கில அகர முதலி

சி. வை. அ. — சித்த வைத்திய அகராதி

த. பே. அ. — சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி

தே. கு. பா. — தேரையர் குண பாடம்

தே. வெண்பா — தேரையர் வெண்பா

தை. வ. ச. — தைல. தைல வருக்கச் சருக்கம்

பொ. ப. நூ. — முருகேச முதலியாரின் பொருட் பண்பு நூல்

மூ. வை. அ. — மூலிகை வைத்திய அகராதி

யாழ். அ. — யாழ்ப்பாணத்து மானிப்பா யகராதி.

வை. ம. அ. — மலை – வைத்திய மலை அகராதி

ஜூபிலி; ஜூ. த. அ. — ஜூபிலி தமிழ்ப் பேரகராதி

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| முன்னுரைத் தோற்றுவாய் | ... | 6 |
| வசம்பின் பெயர்கள் | ... | 9 |
| கடுக்காயின் பெயர்கள் | ... | 11 |
| கோதுமையின் பெயர்கள் | ... | 14 |
| சாம்பசிவம் பிள்ளையின் அகர முதலியில் உள்ள பல்வேறு பெயர்கள் | ... | 18 |
| சித்த வைத்திய அகராதியில் உள்ளவை | ... | 93 |
| மூலிகை வைத்திய அகராதிப் பெயர்கள் | ... | 105 |
| நெல்லை சங்கரலிங்க முதலியாரின் 'ஜூபிலி' தமிழ்ப் பேரகராதியில் உள்ளவை | ... | 112 |
| பல்வேறு நூல்களிலிருந்து | ... | 136 |
| ஒப்புமையால் பெற்ற பெயர்கள் சில | ... | 162 |
| பொன் மாற்றுக் கலைப் பெயர்கள் | ... | 167 |
| கருத்து வழங்கிய கருவூலங்கள் | ... | 171 |
| அனைத்துப் பெயர்களின் அகர வரிசை | ... | 177 |

# முன்னுரைத் தோற்றுவாய்

**நூல்பெயர்:**

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்" (217)

என்பது திருக்குறள். உயர்ந்த பண்பாளன் கையில் உள்ள செல்வம், உடல் நோய்கட்கும் பசி நோய்க்கும் மருந்தாகித் தவறாமல் பயன் கொடுக்கும் மரங்கள்போல் பலர்க்கும் பயனளிக்கும் — என்பது கருத்து. ஈண்டு அத்தகைய மரங்கள் சிலவற்றின் — மரங்களின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்கள் காரண விளக்கங்களுடன் தரப்பெற்றுள்ளன.

தமிழ் நிகண்டுகளில், தாவரம் என்பது, 'மரப்பெயர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனினும், வடமொழிச் சொல்லாகிய தாவரம் என்பதை, 'மர இனம், என்னும் பெயரால் தமிழில் குறிப்பிடலாம். எனவேதான், இந் நூலுக்கு 'மருந்தாகித் தப்பா மர இனப் பெயர்கள்' என்னும் பெயர் தரப்பெற்றுள்ளது.

**நூல் பொருள்:**

இந்த நூலின் தொடக்கத்தில், வசம்பு, கடுக்காய், கோதுமை என்னும் மூன்று மர இனங்களைக் குறிக்கும் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அடுத்து, சாம்பசிவம் பிள்ளையின் தமிழ்—ஆங்கில அகர முதலி, சித்த வைத்திய அகராதி, மூலிகை வைத்திய அகராதி, ஜூபிலி தமிழ்ப் பேரகராதி ஆகிய தலைப்புகளின் கீழ் நூற்றுக்கணக்கான மர இனப் பெயர்களும், இவற்றையும் அடுத்து, பல்வேறு அகர முதலி நூல்களில் உள்ள பல மர இனப் பெயர்களும் பெயர்க் காரண விளக்கம் செய்யப்பெற்றுள்ளன.

**மறு ஆய்வு:**

பல மர இனப் பெயர்கள் புதுமையாகவும் கவர்ச்சி யாகவும் சுவையாகவும் மறைபொருள் உடையனவாகவும் சித்தர்களாலும் அறிஞர்களாலும் சூட்டப்பெற்றுள்ளன. இவற்றுள் பலவற்றின் பெயர்க் காரணங்களை, தக்க அகச்

சான்றுகளுடனும் இலக்கிய மேற்கோள்களுடனும் விளக்கியுள்ளேன். சிலவற்றின் பெயர்க் காரணங்களை நெடுநேரம் எண்ணிப் (சிந்தித்துப்) பார்த்து, என் உய்த்துணர்வாலும் சொந்தக் கற்பனையாலும் சொந்தப் பட்டறிவாலும் விளக்கியுள்ளேன். இது சார்பாகச் சிலருக்குக் கருத்து வேற்றுமை ஏற்படலாம். சில பெயர்க் காரணங்கள் வலிந்து கூறப்பட்டிருப்பதாகத் தோன்றலாம். யான் கூறியனவே முடிந்த முடிபாக மாட்டா. சில செய்திகள் பொருந்தாதன போல் தோன்றின், ஆராய்ச்சியாளர்கள் மேலும் மறு ஆய்வு செய்து கருத்து வெளியிடலாம்.

**வடமொழிப் பெயர்கள்**

தமிழ் நூல்களில் வடமொழிப் பெயர்கள் மிகுதியாகக் கலந்திருப்பதால், அப்பெயர்களின் பொருள் புரிந்தால்தான் நூல்களை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியுமாதலின், இவ்வெளியீட்டில் வடமொழிப் பெயர்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன.

**தொடர்பு:**

இந்நூலில் இடம் பெற்றுள்ள மர இனப் பொருள்கட்கு, சார்பு, பண்பு, பயன், உடற்கூறு, வடிவம், நிறம், வண்ணம், செயல், மொழி பெயர்ப்பு, சொல் விளையாட்டு, ஒப்புமை முதலிய பல தொடர்புகளால் புனை பெயர்கள் வைக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பெயர்க் காரண விளக்கத்தின் இறுதியிலும், இந்தத் தொடர்புகளுள் அதற்குரியது குறிப்பிடப்பட்டிருக்கும்.

**நூல் பயன்**

இந்த நூலில் உள்ள பெரும்பாலான பெயர்கள் தமிழ் – சித்த மருத்துவத் தொடர்பு உடையவை. பெயர் விளக்கங்களில், உடலுக்கு உண்டாகும் பயன்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. மருத்துவப் பயன்களை யானாகக் குறிப்பிடவில்லை. சித்தர்களும் மருத்துவ அறிஞர்களும் அறிவித்துள்ள பயன்களையே யான் குறிப்பிட்டுள்ளேன். சில பெயர்கள் இயற்கையாகவே – தம்மில் தாமே மருத்து

வப் பயன்களைத் தெரிவிக்கின்றன. இந்நூலைப் படித்துப் பின்பற்றப்படும் மருத்துவத்திற்கு நம் முன்னோர்களே பொறுப்பாவார்கள்.

அடியேனுக்குத் தமிழ் மருத்துவம் அவ்வளவாகப் போதாதெனினும், என் அப்பாவும் அம்மாவும் சிறந்த தமிழ் மருத்துவர்களாகத் திகழ்ந்தனர். என் தாயின் அண்ணனும் அப்பாவும் தலை சிறந்த-வழி வழி (பரம்பரை) மருத்துவர்கள். அதனால், என் அன்னைக்குத் தமிழ் மருத்துவம் தெரியும். என் தந்தையாரும் சிறந்த தமிழ் மருத்துவர்; எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பல மூலிகை களை வளர்த்து வந்தார்கள். என் பெற்றோர்களின் ஏவலின்படி, யான் மூலிகைகளைப் பறித்துக் கொண்டு வந்து, கியாழம் வைப்பதற்காகப் 'பிணியாளர்க்குத் தருவேன். கியாழ மருத்துவமே மிகுதியாயிருக்கும். செய்து கொடுக்கும் மருந்து மருத்துவம் அதனினும் குறைவாகவே இருக்கும். இதற்கு மட்டும் ஒரு சிறிது பணம் பெறப்படும். இந்தத் தொடர்பினால் அடியேன் இந்நூலை எழுதத் துணிந்தேன்.

**தன்னினம் முடித்தல்**

இந்நூலில் சிறுபான்மைப் பெயர்கள் மருத்துவத் தொடர்பு இல்லாதனவாகும். இருப்பினும், 'ஒன்றினம் முடித்தல்—தன்னினம் முடித்தல்' என்ற இலக்கண முறையில், மருத்துவத் தொடர்புள்ள பெரும்பான்மையான வற்றுடன் அந்தத் தொடர்பில்லாத சிறுபான்மையனவும் பெயர்க் காரண விளக்கம் செய்யப்பெற்றுள்ளன.

இந்நூல், படிப்பவர்க்கு ஓரளவேனும் கைம் மருத்துவமாகப் பயன்படும் என்பதில் ஐயம் இல்லை. இந்த நூலுக்குத் தக்க ஆதரவு அளிக்கும்படி அனைவரையும் வேண்டுகிறேன்.

இந்நூலை நன் முறையில் அச்சிட்டு உதவிய சிதம்பரம் சபாநாயகம் அச்சகத்தாருக்கு மிக்க நன்றி செலுத்துகிறேன்.

சுந்தர சண்முகன்,
29—9—1989.

# வசம்பின் பெயர்கள்

**வசம்பின் பெயர்கள்**

1. பெயர் சொல்லாதது (சி.வை.அ.), பெயர் சொல்லா மருந்து (ஜ•), பெயர் சொல்லான் (சா.சி.பி.) என்னும் பெயர்கள் வசம்புக்குத் தரப்பட்டுள்ளன. சில இன்றியமை யாப் பொருள்களின் பெயரைச் சொன்னால், அவற்றால் விளையக்கூடிய நன்மை கைகூடாது - பலிக்காது என்ற எண்ணத்தால் மக்கள் அவற்றின் பெயர்களைச் சொல்வ தில்லை. அவை உப்பு, கடுக்காய் முதலியனவாகும். உப்பு என்று சொல்லாமல், சாப்பாட்டுக்குப் போட்டுக்கொள்வது என்பர். அதேபோல், வசம்பைப் பேர் சொல்லாதது என்பர். இஃது ஒருவகை (மூட) நம்பிக்கை. இவை சார்பினால் வந்த பெயர்கள்.

2. பேதியைக் கட்டு மூலிகை (சி.வை.அ.), கிராணித் திரவியம் (சி.வை.அ.) என்னும் பெயர்கள் இதற்குண்டு. பேதி, கிராணி என்பன வயிற்றுக் கழிச்சல் நோயாகும். வசம்பைச் சுட்டுக் கரியாக்கித் தேனில் குழைத்துக் கொடுத் தால் கழிச்சல் நின்றுவிடும். இவை பயனால் வந்த பெயர்கள்.

3. பிள்ளை மருந்து (ஜ•), பிள்ளை வளர்த்தி (பொ.ப. நா.), பிள்ளை வளர்ப்பான் (த.பே.அ.) என்னும் பெயர் களும் உண்டு. குழந்தைகள் உள்ள வீட்டில் வசம்பு எப்போதும் கைவசம் இருக்கும். குழந்தைக்குக் கழிச்சல் ஏற்படின், வசம்பைச் சுட்டுக் கரியாக்கித் தேனில் குழைத்

துக் குழந்தையின் நாக்கில் தடவுவார்கள் - கழிச்சல் குண மாகும். இவையும் பயனால் பெற்ற பெயர்கள்.

4. வேசி (பரத்தை) மயக்கிக் காம இன்பம் தருதல் போல், வசம்பு வயிற்றை ஒழுங்கு செய்து பசியுண்டாக்கி உணவு (ஆகாரம்) கொள்ளச் செய்வதால் இதற்கு 'ஆகார வேசி' (சா.சி.பி.) என்னும் பெயரும் உண்டு. இஃதும் பயனால் வந்த பெயரே.

5. வசம்பு நல்ல மணம் (வாசனை) உடையதாதலின் 'வெகுவாசம் உடையோகி' (சா.சி.பி.) என்ற பெயர் இதற்கு உண்டு. இது பண்பினால் வந்த பெயர்.

6. வசம்பைச்சுட்டுத் தண்ணீரிலோ அல்லது தேனிலோ உரைத்துக் (இழைத்துக்) கொடுப்பதால் 'சுடுவான்', 'உரைப்பான்' என்னும் பெயர்களும் (பொ.ப.நூ.) உண்டு. இவை சார்பினால் வந்த பெயர்கள்.

7. வசம்பு, பாம்புகடி முதலிய நஞ்சைப் போக்குவதாலும், புழு-பூச்சிகளைக் கொல்லுவதாலும் இதற்குப் 'பூச்சி கொல்லி' என்ற பெயர் பயனால் வந்தது. இ.சா. தேரையர் குணபாடப் பாடல்:

"பாம்பாதி நஞ்சற் புதப்பூண்வலி விடபாகம் குன்மம்...
தாம்பாம்கிருமி யிவையேகும் ஆசி வசம்பினையே"

தாம்பாம் கிருமி = தாம்பு (கயிறு) போல் நீளமாயிருக்கும் நாடாப்புழு. இப்புழுக்களையும் வசம்பு கொல்லுமாம். த.பே.அ.

# கடுக்காயின் பெயர்கள்

**கடுக்காயின் பெயர்கள்**

1. **பொதுப் பண்பு:** கடுக்காய் தாயினும் சிறந்தது; தாய் சுவையான உணவு ஊட்டி உடலை வளர்ப்பாள்; கடுக்காயோ, பிணிகளைப் போக்கி உடலைத் தேற்றி உயிரை நீட்டிக்கச் செய்யும். அகத்தியர் குணபாடப் பாடல்:

> "கடுக்காயும் தாயும் கருதில் ஒன்றென்றாலும்
> கடுக்காய் தாய்க்கதிகம் காண்நீ - கடுக்காய் நோய்
> ஓட்டி உடல்தேற்றும்; உற்ற அன்னையோ சுவைகள்
> ஊட்டியுடல் தேற்றும் உவந்து"—

2. நோய் போக்குவதால் 'உரோகிப் பண்டிதன்' என்பதும், குழந்தைகளை வளர்ப்பதால் 'குழவித்தாய்' என்பதும், உயிரை வளர்ப்பதால் 'பிராணதாது' என்பதும் கடுக்காயின் பெயர்களாகக் (சா.சி.பி.) கூறப்பட்டுள்ளன.

உரோகி = நோயாளி; பண்டிதன் = மருத்துவன்;
பிராணன் = உயிர்.

3. வாழ்க்கையில் உடலைத் தேற்றி நல்ல செயல்கள் செய்வித்து வெற்றியுண்டாக்குதலால் 'விசயன்' என்னும் பெயரும், அச்சம் அகற்றி நல்வாழ்வுக்கு உறுதியளிப்பதால் 'அபயன்' என்னும் பெயரும், தெய்வ அமிழ்தம் போல் உயிரை நீட்டிப்பதால் அமிர்தம் (அமுதம்) என்னும் பெயரும் (சா.சி.பி.) தரப்பட்டுள்ளன. கடுக்காய் வகைகள் பல. அவற்றுள் விசயன் கடுக்காய், அபயன் கடுக்காய், அமிர்தக்

கடுக்காய் என்னும் வகைகளும் உண்டு. இம் மூவகைக் கடுக்காய்களைப் பற்றிக் கூறும் அ.கு.பா. பாடல்கள் வருமாறு:

**விசயன் கடுக்காய்:**

"விசயன் எனுங் கடுக்காய் வீரியத்தைச் சொல்வோம்
நிசமதுதான் வாதத்தை நீக்கும் - மிசையுரைக்கப்
பேய்ச்சுரைக்காய் போலிருக்கும் பேரவந்தி யாதேசம்
வாய்ச்சிருக்கும் அக்காயை வாழ்த்து"—

**அபயன் கடுக்காய்:**

"அபயன் எனுங்கடுக்காய் அங்கநோ யெல்லாம்
அபயம் இட்டோட அடிக்கும் - அபயற்கு
அதிக நிறங்கறுப்ப தாகும் விளைபூமி
பொதிய மலையாம் புகல்"—

**அமிர்தக் கடுக்காய்:**

"அமிர்தம் எனுங் கடுக்காய் அம்புவியி லுள்ள
திமிர்த சிலேட்டுமத்தைத் தீர்க்கும் - விமிதச்
சதைப்பற் றுண்டாயிருக்கும் சாற்றிலதன் தேசம்
கதிக்கொத்த காசியென்பர் காண்"—

4. கடுக்காய் நாட்பட்ட பழைய மலத்தை வெளியாக்கி உடலுக்கு நன்மை பயப்பதால் 'மலத்தை அறுப்போன்', 'அமலன்' என்னும் பெயர்கள் (சா.சி.பி.) தரப்பட்டுள்ளன. மலன் என்றால், மலத்தை வைத்திருப்பவன்; அமலன் என்றால், மலத்தை இருக்கச் செய்யாமல் அகற்றுபவன் - என்பது பொருளாம். மக்களின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை (மூன்று உலகச் சார்புக் கட்டுகளை) அகற்றுவதால் கடவுளுக்கும் 'அமலன்' என்ற பெயர் தரப்பட்டுள்ளமை ஈண்டு ஒப்புநோக்கற்பாற்று.

"பழமலத்தைப் போக்கும்; பகரில் உடலுக்கு
அழகுதரும்; புத்தி யளிக்கும்"—

என்பது அ.கு.பா. பாடல் பகுதி. மேற்கூறப்பட்ட பெயர்கள் பயனால் வந்தவை.

5. தமிழ்நாட்டில் விளைவதன்றி, வேறு நாடுகளிலிருந்தும் சிலவகைக் கடுக்காய் தருவிக்கப்படுதலால், இதற்குப் 'பிறதேசி' (வேற்று நாட்டான்) என்னும் பெயரும் (சா.சி.பி.) உண்டு. சூரத்துக் கடுக்காய், காசிக் கடுக்காய், அவந்திக் கடுக்காய், காபூலிக் கடுக்காய், அரபிக் கடுக்காய், கப்பல் கடுக்காய் என்ற வகைகள் அவ்வப் பகுதிகளிலிருந்து வந்தனவாம். எனவே, பிற தேசி என்னும் பெயர் இதற்குப் பொருந்தும். இஃது இடத்தால் பெற்ற பெயராகும்.

**சிவ சத்தி:**

செந்நிறம் காரணமாகவும் வெப்பம் காரணமாகவும் சில மர இனங்கட்குச் சிவன் பெயர்கள் ஒப்புமையால் சூட்டப்பட்டுள்ளன. சிவசத்தி என்பது சிவனைக் குறிக்காமல், சிவனுடைய சத்தி (மனைவி) யாகிய உமையையே குறிக்கும். உமையம்மை உலகுக்கெல்லாம் தாயல்லவா? கடுக்காய் 'குழவித்தாய்' என்னும் பெயர் பெற்றிருப்பதன்றி, "கடுக்காய் தாய்க்கு அதிகம் காண்" என அகத்தியச் சித்தரால் பாடப்பட்டும் இருத்தலின், உலகத் தாயாகிய சிவசத்தியின் பெயர் (சா.சி.பி.) கடுக்காய்க்குச் சூட்டப்பட்டுள்ளது ஒப்புமை.

# கோதுமையின் பெயர்கள்

**பலசாலி அரிசி**

1. பலசாலி அரிசி (சி.வை.அ.), மிகுபல அரிசி (சி.வை. அ.), மிகுபலம் (சா.சி.பி.) ஆகிய பெயர்கள் கோதுமைக்குத் தரப்பட்டுள்ளன. நெல்லரிசி, கம்பரிசி, தினையரிசி, வரகரிசி, மூங்கிலரிசி முதலியனபோல் கோதுமையும் அரிசி எனப் படுகிறது.

மற்ற அரிசிகளினும், கோதுமை, மிகுந்த வலிமையை - ஆற்றலைத் தருவதால், இதற்கு இப்பெயர்கள் ஏற்பட்டுள்ளன. கோதுமையில் பொதுவாக 86.7% பகுதி வலிமை தருவதாகும் எனச் சொல்லப்படுகிறது. சிறப்பாக நோக்கின், 8 முதல் 17 விழுக்காடு புரோட்டீனும், 2 முதல் 3% சர்க்கரை ஆற்றலும், 1.5-2% தாதுப் பொருள்களும் உள்ளன வாம். தாதுப்பொருள் ஆற்றலில் கால்சியம், பாசுவரம், இரும்பு முதலியன உள்ளனவாம். மற்றும் (ஊட்ட ஆற்றல்) வைட்டமின் B1, B2, C முதலானவையும் காரட்டீனும் (Carotene = ஏ - உணவூட்டப் படிவங்களின் முற்பட்ட காலப்பெயர்) இருக்கின்றன. கோதுமையின் முளைக் கருவி லுள்ள எண்ணெய்க் கூறுதான் வைட்டமின் Eக்கு இன்றி யமையாத அடிப்படையாம். 100 கிராம் கோதுமை, 345.4 காலரி வெப்பம் அளிக்குமாம். எனவே, மிகு பலசாலி அரிசி என்பது பொருந்தும். இவை பயனால் பெற்ற பெயர்களாம்.

2. இதற்கு, மிலேச்ச அரிசி (சி.வை.அ.), மிலேச்ச சாகம் (மூ.வை.அ.), மிலேச்சாசம் - மிலேச்சை (சா.சி பி,)

என்னும் பெயர்களும் உண்டு. மிலேச்சர் உண்ணும் அரிசி யாதலின் இப்பெயர்கள் பெற்றது. சாகம் என்பது மரக்கறி உணவைக் குறிக்கிறது. மிலேச்சர் என்றால், நாகரிகமற்ற பிற நாட்டினர், திருத்தமின்றி மொழி பேசுபவர் என்னும் பொருட் குறிப்பு சீவக சிந்தாமணியில் உள்ளது:-

''கொன்னுனைக் குந்தமும் சிலையும் கூர்நுதி
மின்னிலை வாளொடு மிலேச்சர் ஏறலின்
பொன்னரிப் புட்டிலும் தாரும் பொங்குபு
முன்னுருத் தார்த்தெழப் புரவி மொய்த்தவே''-
— (2216)

ஈண்டு மிலேச்சர் என்பது, நாகரிகம் அற்ற பிற நாட்டு முரடர் என்னும் பொருளில் உள்ளது.

''இட்டவெண் ணிலப்படா வகையின் ஈண்டிய
முட்டிலா மூவறு பாடை மாக்களால்
புட்பயில் பழுமரப் பொலிவிற் றாகிய
மட்டிலா வளநகர் வண்ணம் இன்னதே''- (93)

என்னும் சீவகசிந்தாமணிப் பாடலில் உள்ள 'மாக்கள்' என்னும் சொல்லுக்கு, ''மிலேச்ச ராதலின் ஐயறிவிற்கு உரிய 'மாக்கள்' என்னும் பெயரால் கூறினார்'' என நச்சினார்க்கினியரும், 'மிலேச்சர்' என்பதற்கு, ''இலக்கணத் திருத்தம் இல்லாத சொற்களைச் சொல்லுவோர்'' - என உ. வே. சாமிநாத ஐயரும், பொருள் வரைந்துள்ளனர்.

திவாகர நிகண்டு ஆரியரை மிலேச்சர் எனக் கூறுகிறது.
''மிலேச்சர் ஆரியர்'' — நூற்பா - 2-31.

பிற்காலத்தில் எழுந்த சூடாமணி நிகண்டு ஆரியர் அல்லாதவர் மிலைச்சர்-மிலேச்சர் ஆவார் எனத் திவாகரத் திற்கு மாறாகக் கூறியுள்ளது:-

"மிலைச்சரே அநாரியர்க்காம் மிலேச்சரும்
விதித்த பேரே" — (2-31)

அநாரியர் என்றால், ஆரியர் அல்லாதவர்.

ஒரு தோற்றம் எட்டாம் நூற்றாண்டினது எனப்படும் திவாகர நிகண்டிற்கும், தோற்றம் - பதினாறாம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் சூடாமணி நிகண்டிற்கும் இடையே யுள்ள இம் மாறுபட்ட கருத்தால் அறியப்பட வேண்டிய தாவது:- தொடக்கத்தில் நாகரிகம் அற்றிருந்த ஆரியர், நாளடைவில் நாகரிகம் உற்றவராயினர் என்பதாயிருக்கலாம்.

வட இந்தியாவிலும் மேலை நாடுகளிலும் உண்ணப்படுவது கோதுமை. அதை உண்பவர்கள் ஆரியர் எனப்படுவர் போலும். இவர்கள் பேசும் மொழிகள், ஆரியக் குடும்பத்தைச் சேர்ந்தன என்னும் செய்தியும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாற்று. இந்த ஆரியரை, திவாகர நிகண்டின் மிலேச்சராகக் கொள்வதா அல்லது சூடாமணி நிகண்டின் மிலேச்சராகக் கொள்வதா என்பது, ஆராய்ச்சியாளர்கள் முடிவுகட்ட வேண்டிய ஒன்றாகும். மிலேச்சர் தொடர்பான பெயர்கள் சார்பினால் வந்தவை.

3. கங்கையாறு பாயும் வட இந்தியாவில் விளைவதால் இதற்குக் 'கங்கை நிருபம்' (சா.சி.பி.) என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. நிருபம் என்பதற்கு, இங்கே, தலைமை - தலையாயது எனப் பொருள் கொளல் வேண்டும். கோதுமை தலையாய தானியமாகும். இடத்தால் பெற்ற பெயர் இது. சார்பு என்றும் கூறலாம்.

4. குதிரைகளும் விரும்பி யுண்பதால், இதற்குத் 'துரங்கப் பிரியம்' என்னும் பெயரும் உண்டு. துரங்கம் = குதிரை. இஃதும் சார்பினால் வந்த பெயரே.

கோதுமையால் உடல் வலிமை (திடம்) உண்டாகும்; விந்து பெருகும்; காம உணர்வு மிகும் - முதலிய செய்திகளைக் கூறும் அ.கு.பா. பாடல்கள் வருமாறு:-

"கோதுமையின் நற்குணந்தான் கோதில் பலங்கொடுக்கும்;
தாதுவிர்த்தி யாக்கும்; தனிவாய்வைச் — சேதிக்கும்;
பித்தம் அளிக்கும்; பிரமேகத்தைக் கெடுக்கும்;
உத்தமமாம் என்றே உரை" —

"கோதுமைக் கஞ்சி கொடுஞ்சுரம் நீரேற்றம்இவை
காதுமைக்கும் சந்நிக்குங் காதரமே — போத
உடலும் திடமாம் ஒலிவண்டும் கூற்றும்
கடலும் பணிவிழியே காண்" —

"தேகம் பலக்கும்; அதிதீபனமும் உண்டாகும்; நிறை
மோகம் பெருகும்; ஐயமூர்க்கமறும் — கோகமிக
ஓதி யடையும்; உயர்கொங்கை மாதரசே
கோதி யடையைக் கொடு"-
(கோதி அடை = கோதுமை அடை)

இப்பாடல்களாலும் கோதுமையின் வலிமைச் சிறப்பு விளங்கும்.

5. கறுப்பு வாற் கோதுமை 'கிருட்டிண நயனம்' (சா.சி.பி.) என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. கிருட்டிணம் = கறுப்பு, நயனம் = கண். கோதுமை அரிசிமணி, பார்ப்பதற்கு, ஒருவகையில் கண்போன்ற தோற்றம் உடையதாயிருத்தலின் கறுப்பு வாற் கோதுமை இப்பெயர் பெற்றது போலும். ஆங்கிலத்தில் இது (Black Barley) எனப்படும். இது நிறத்தால் பெற்ற பெயராம்.

சிற்சிலர், கோதுமையை, கோதமை — கோதும்பை — கோதம்பை — கோதும, கோதூமம், கோதம்ப, கோதி என்றெல்லாம் வழங்குகின்றனர்.

# சாம்பசிவம் பிள்ளையின் அகரமுதலியில் உள்ள பல்வேறு வகைப் பெயர்கள்

**அகண்ட பூண்டு**

கண்டம் என்பது பிரிக்கப்பட்ட இடப்பகுதி; அகண்டம் என்பது எல்லா இடத்தையும் குறிக்கும். வல்லாரை, நீர்க் கரை — தோட்டம் முதலிய பல இடங்களிலும் இருக்கக் கூடியதாதலால் அகண்ட பூண்டு எனப்பட்டது. வெளியிடங் களில் இருந்தால் போதாது; வீட்டிலும் வல்லாரையை வளர்க்க வேண்டும் — எனத் தேரையர் குண பாடநூல் கூறுகிறது.

> " எல்லாரையும் அருந்தென் றேயுரைத்து நன்மனையுள்
> வல்லாரையை வளர்த்து வை"-

என்பது பாடல் பகுதி. இடத்தால் — சார்பால் பெற்ற பெயர் இது.

**அக்கினிச் சருமன்**

சருமம் = மேல்தோல்; மஞ்சளின் மேல்தோல் அக்கினி (நெருப்பு) போன்ற நிறத்துடன் இருக்குமாதலின், மஞ்சள் அக்கினிச் சருமன் எனப்பட்டது. இது வடிவால் வந்த பெயர்.

**அக்கினி சாந்தம்**

ஓமம், உடம்பின் வெப்பத்தைச் சாந்தப்படுத்திச் சம நிலையில் வைத்திருக்குமாதலின் அக்கினி சாந்தம் எனப் பயன் காரணமான பெயர் பெற்றுள்ளது.

### அக்கினி சிகை

குங்குமப்பூ, அக்கினிச் சிகைபோல் (நெருப்புக் கொழுந்து போல்) தோற்றத்தில் காணப்படுவதாலும், அக்கினிபோல் செம்மஞ்சள் நிறம் உடைமையாலும் 'அக்கினி சிகை' எனப் பெயர் பெற்றது. வடிவால் பெற்ற பெயர். குங்குமப் பூண்டின் மலர்களில் உள்ள மகரந்தத் தாள்களே குங்குமப் பூ எனப்படும்.

### அர்ச்சனை யாதி (சா)

கடவுளுக்கு அர்ச்சனை செய்ய உதவுவதால் வில்வத்திற்கு 'அர்ச்சனை யாதி' என்ற பெயர் பயன் காரணமாக வந்தது.

### அனாதி (சா)

கோழி முதலா — முட்டை முதலா? விதை முதலா — மரம் முதலா? என்ற வினாவிற்கு விடையிறுப்பது அரிது. ஆனால் விதைக்கு (வித்துக்கு) அனாதி என்னும் பெயர் தரப்பட்டுள்ளது. ஆதி என்றால் முதல்; அனாதி என்றால் முதல் இல்லாதது — என்று பொருளாம். இப்பெயர் மரத்தினும் வித்தே முதல் என்று சொல்வதுபோல் தோன்றுகிறது. இது தலைமையால் — முதன்மையால் பெற்ற பெயர்.

### அன்னதானக் குருவை (சா)

மூன்று திங்களில் விளையும் இந்நெல் வகை, அன்ன தானம் — இலவச உணவு அளிப்பதற்குப் பயன்பட்டு வந்ததால் இப்பெயர் பெற்றது போலும்: பயன்.

### அரன்பூசனை மரம் (சா)

சிவன் பூசனைக்குச் செம்மந்தாரை மலர் பயன்படுவதால், அரன்பூசை மரம் எனப் பெயர் பெற்றது: பயன்.

**அத்தன் பாதம்**

இறைவன் திருவடிபோல் உள்ளதால், அத்தன் பாதம், அத்தன் புள்ளடி என்னும் பெயர்கள் செருப் படைக்கு ஏற்பட்டன: வடிவம்.மற்றும், செருப்பு அடியில் போடுவ தல்லவா?

**அமங்கலம்**

திருமணத்திற்குப் பொருள்கள் வாங்கப் பட்டியல் போடுபவர்கள் முதலில் மஞ்சள், பூ — என்று தொடங்கு வார்கள்; எண்ணெயை யாரும் தொடங்கமாட்டார்கள். எண்ணெய் அமங்கலப் பொருளாம். ஆதலின் விளக் கெண்ணெயைக் குறிக்கும் ஆமணக்கு, சார்பினால் அமங்கலம் என்னும் பெயர் பெற்றுள்ளது. வீட்டிலிருந்து யாராவது வெளியூருக்குப் புறப்பட்டுச் சென்றபின், அன்றைக்கு, வீட்டில் உள்ள வேறு யாரும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கமாட்டார்கள். அவ்வாறு குளித்தால், வெளியில் சென்றவர் செத்துவிட்டதாகவும் அதற்காக எண்ணெய் தேய்த்து அவரைத் தலைமுழுகுவதாகவும் பொருள்படும் என்றெண்ணி அவ்வாறு செய்யார்.

**அமல இனங்கள்**

அமலம் என்பது புளிப்பைக் குறிக்கும். புளிப்புச்சுவை உடைமையால், புளியாரைக் கீரை 'அமல நாயகம்' எனவும், புளியமரம் 'அமல பலம்' எனவும், நாரத்தை முதலியன 'அமல வர்க்கம்' எனவும் பெயர் பெற்றன. பெயர்க் காரணம் — பண்பு.

**அமிர்த பலம்**

அமிர்தம் என்னும் வடமொழிச் சொல்லின் பொருள் சாவா மருந்து. அமிர்தம் உண்டவர் சாகமாட்டார்களாம்.

ஔவை நீண்டநாள் உயிர் வாழ்வதற்காக அதியமான் நெல்லிக்கனி அளித்த வரலாறு அறிந்ததே! எனவே, நெல்லிக்கு 'அமிர்தபலம்' எனும் பெயர் தரப்பட்டுளது; பயன்.

**அழகான கருப்பி**

நீலஞ் சோதி மரத் தோற்றம் அழகுடன் கருப்பாயிருப்பதால் 'அழகான கருப்பி' எனப்படலாயிற்று. நிறம்.

**அழகியாள்**

செவ்வகத்தி அழகாயிருப்பதால், அழகியாள், அழகு சிவப்பி என்னும் பெயர்கள் வந்தன. பண்பு.

**அகண்ட மாரீசன்**

பூசனிக்கு 'அகண்ட மாரீசன்' எனும் பெயருண்டு. அகண்டம் = விரிந்தது, பெரியது. மாரீசம் = மாயம். இதன் தோற்றம் கருதி இப்பெயர் தரப்பட்டது. வடிவு.

**அணி முலை மாது**

மற்ற கொடிகளைப் போல் இல்லாமல், பூசனிக்கு அழகிய முலை போன்ற பெரிய காய் இருப்பதால், இதற்கு அணி முலை மாது என்னும் பெயரும் உண்டு. வடிவு.

**அதிக சுர சாந்தினி**

வல்லாரை பற்றிப் பொருட் பண்பு நூலில் உள்ளது வருமாறு:- "எல்லாச் சுரங்களுக்கும், வல்லாரை இலை— துளசி இலை — மிளகு — இவற்றை ஒரளவாகத் தூக்கி அரைத்து, குன்றி யெடை மாத்திரை செய்து காலை மாலை இரண்டு வேளையும் கொடுத்துவர, அவைகள் தணியும்" — இதன்படி, அதிக சுரத்தையும் (மிக்க காய்ச்சலையும்) சாந்தி

(தணிவு) செய்வதால், இதற்கு 'அதிக சுர சாந்தினி' எனும் பெயர் அளிக்கப்பட்டது. பயன்.

**அதிசாரம் போக்கி**

'அதிசாரம் போக்கி' எனும் பெயர் ஒதியமரத்திற்கு உள்ளது. அதிசாரம் = ஒருவகைப் பேதி நோய். இரத்தப் போக்காகிய பெரும்பாடு நோய்க்கும் ஒதி நல்லதாம்.

" புண்புரை கிராணி ரத்தப்போக்கு அதிசாரம் கடுப்பும்
திண்பெறு தாகம் சோபம் சீதளமும் — நண்பில்
அதிவிரைவாய்த் தாண்டும் அணங்கே! பருத்த
ஒதிமரத்தின் வேருக்கு ஒதுங்கி "-

என்பது அ.கு.பா.பாடல். எனவே, இதற்கு 'அதிசாரம் போக்கி' எனும் பெயர் பயனால் வந்தது.

**அரிப் பிரியை**

அரிக்கு — விட்டுணுவுக்கு உகந்ததாதலின், துளசி, அரிப் பிரியை, விட்டுணுப் பிரியை என்னும் பெயர்களைச் சார்பினால் பெற்றது.

**ஆகாச கத்தரி (வெண்டை)**

வெண்டைக்கு 'ஆகாச கத்தரி' எனும் பெயர் உளது. கத்தரிக்காய், நுனி நிலத்தை நோக்குமளவில் கீழ்நோக்கித் தொங்கும். வெண்டைக்காயோ, நுனி விண்ணை (ஆகாசத்தை) நோக்குமளவில் மேல்நோக்கி நிற்கும்; அதனால் ஆகாச கத்தரி எனப்பட்டது. வடிவம்.

**ஆசைக்கு உரியான்**

மருகு என்பது நறுமணம் அளிக்கும் ஒரு பூண்டு வகை; அதனால் இது ஆசைக்கு உரியது; ஆதலின், இது ஆசைக்கு உரியான் எனப்பட்டது. சார்பு.

**ஆடைக்கு ஆதி**

ஆடைக்கு (துணிக்கு) ஆதியாக - முதல் காரணமாக இருப்பது நூல்; நூலுக்கு முதல் காரணமாக இருப்பது பருத்தி; அதனால் பருத்தி 'ஆடைக்கு ஆதி' என்னும் பெயர் பெற்றது. பயன்.

**ஆண் உறுப்பு**

பூவின் பெண் பாகத்தில், ஆண் உறுப்பாகிய பூந்தாது-மகரந்தப் பொடி (Pollen) சேர்ந்தால்தான் பூ கருவுற்றுக் காய்க்கும். இதனால், பூந்தாது என்னும் மகரந்தப் பொடிக்கு 'ஆணுறுப்பு' என்னும் பெயர் அளிக்கப்பட்டுள்ளது. வடிவம்.

**ஆதி**

மர இனத்தில் முதலில் (ஆதியில்) வேர் பாய்வதால், வேருக்கு 'ஆதி' எனும் பெயர் உண்டு. தலைமை.

**ஆதி மருந்து**

இக்காலத்தில் பலவகையான மருத்துவ முறைகள் உள்ளன. ஆனால் பண்டு நம் நாட்டில், சுக்கு - மிளகு - திப்பிலி என்னும் மூன்று மருந்துகள் பயன்படுத்தப்பட்டன; இன்றும் பயன்படுத்தப்படுகின்றன. இம்மூன்றின் தொகுப்புப் பெயராக, திரிகடுகம்-முக்கடுகம் எனக் கூறுவதுண்டு. இம் மூன்றின் தொகுப்புக்கும் பொதுவாக 'ஆதி மருந்து' எனும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தலைமை.

**ஆயிரங்கண்ணி**

பலாப்பழத்தில் கண் போல் மிகப் பல முள் உறுப்பு உள்ளதால், பலா 'ஆயிரங்கண்ணி' எனப்பட்டது. வடிவம்.

**ஆரோக்கியக்காரி**

சிறுகீரை உடம்புக்கு வலிமைதந்து நலம் (ஆரோக்கியம்) பயப்பதால் 'ஆரோக்கியக்காரி' எனப்பட்டது. பயன்.

**ஆரோக்கியமாதர்**

அகத்தியும் ஆரோக்கியம் (நலம்)தருதலால், ஆரோக்கிய மாதர் எனப்பட்டது. பயன்.

**அவசியம்**

சோம்பு என்னும் பெருஞ்சீரகம், வாயுவைப் போக்கி, வயிற்று வலியை நீக்கி, பசியை உண்டாக்கி உடலுக்கு நலம் பயப்பதால், அது ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் (கட்டாயம்) இருக்க வேண்டியது. 'அல்சர்' என்னும் (ஒரு வகை வயிற்றுப்புண்) நோய்க்கு இது மிகவும் ஏற்றது. (வீட்டில் இருப்பதென்ன? இது எப்போதும் என் கைப் பைக்குள் இருக்கும்). இது மிகவும் அவசியம் ஆனதால் 'அவசியம்' எனப் பெயர் பெற்றது. பயன்.

**ஆனைக்கண்ணன்**

அத்திக்காய் ஆனைக்கண் போன்றிருப்பதால் அத்தி 'ஆனைக் கண்ணன்' எனப்பட்டது. வடிவம். ஆனைக்கு அத்தி என்ற பெயரும் உண்டு.

**இரசகந்தம்**

இரசம் = சாறு = நீர். தேங்காய் இளநீர் சுவையாக (ரசமாக) இருத்தலின் தென்னை இரச கந்தம் எனப் பட்டது. பயன்.

**இரத்த நதி**

தடாகத்தில் அடர்ந்திருக்கும் செங்கழுநீர் மலர்களை நோக்கின், இரத்த ஆறுபோல் தோன்றுவதால், செங்கழு நீர் இரத்த நதி எனப்பட்டது. நிறம் - வடிவம். ஈண்டு

முத்தொள்ளாயிரம் என்னும் நூல் பாடல் ஒன்று ஒப்பு நோக்கத்தக்கது:

சேரனது நாட்டில் பொய்கை முழுவதும் அடர்த்தியாக அரக்காம்பல்-அதாவது-சிவந்த ஆம்பல் பூக்கள் மலர்ந்திருந்ததால், தண்ணீர் தீப்பற்றி எரிகிறது என்று பறவையினங்கள் அஞ்சித் தம் கையாகிய சிறகால் (கை போன்ற சிறகுகளால்) தம் குஞ்சுகளை அடக்கிக் கொண்டு கூக்குரல் எழுப்பினவாம். பாடல்:

"அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாய்அவிழ
வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினங்கள்
கைச்சிறகால் பார்ப்புஒடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு"

என்பது பாடல். 'இரத்த நதி' என்பதோடு, 'வெள்ளம் தீப்பட்டது' என்பது ஒப்புநோக்கற் பாலது.

**இருகுரங்கின் கை**

இப்பெயர் 'முசுமுசுக்கை' எனும் கொடிக்கு உரியது. முசு என்றால் குரங்கு. இருமுறை 'முசு' என்னும் சொல் வந்து, பக்கத்தில் 'கை' என்பதையும் பெற்றிருப்பதால், முசுமுசுக்கை சொல் விளையாட்டாக 'இருகுரங்கின் கை' என்னும் பெயர் பெற்றது.

**இருதய கந்தம்**

இருதயத்துக்கு நலம் பயப்பதால், கொத்துமல்லி 'இருதய கந்தம்' எனப்பட்டது. பயன்.

**இறைவர் மலர்**

சிவனுக்குக் 'கொன்றை வேந்தன்' என்னும் பெயர் உண்மையை,

"கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே"-

என்னும் அவ்வையின் கொன்றை வேந்தன் - காப்புச் செய்யுளால் அறியலாம். சிவனுக்கு உரியதாதலின், கொன்றை, 'இறைவர் மலர்', 'ஈசனார் அணி' என்னும் பெயர்களைச் சார்பினால் பெற்றுள்ளது.

இலை முலை மாது: இது தூதுவளை. தூதுவளைக் கொடியில் இலை உண்டு; ஆனால், முலை போன்ற உறுப்பு ஒன்றும் இல்லை. அப்படியிருந்தும் 'இலை முலை மாது' எனும் பெயர் தரப்பட்டுள்ளது. இலையையே முலையாக உருவகித்து, இலையாகிய முலையையுடைய மாது தூதுவளை என்று பொருள் செய்வதைத் தவிர வேறு வழியின்று. இதற்குத் துணை செய்யும் செய்திகளும் உண்டு.

(1) 'முலை மூக்கு அரிவாள்' என்னும் தொடருக்கு, 'இலை மூக்கு அரி கத்தி' என நாம தீப நிகண்டு (421) பொருள் கூறியுள்ளது. எனவே, இலை, முலை போலக் கருதப்படுவ துண்டென அறியலாம்.

(2) முலைக்குக் கூரிய யானைத்தந்தத்தை ஒப்புமையாகக் கூறுவதுண்டு. முருகன் தன்னை மணக்கும்படி வள்ளியிடம் கூற, அவள் மறுக்க, முருகன் உடனே அண்ணன் பிள்ளையாரை நினைத்து வேண்ட, பிள்ளையார் யானையாக வர, வள்ளி முருகன் பின்னின்று அவனைக் கட்டிக்கொள்ள, யானையின் தந்தம் முன்னால் முருகனின் மார்பைக் குத்துங்கால், வள்ளியின் கூரிய முலைகளாகிய தந்தங்கள் முருகனின் முதுகைக் குத்தினவாம். கந்த புராணம் – வள்ளியம்மை திருமணப் படலத்தில் உள்ள பாடல் (113) வருமாறு:-

"அன்னதொரு காலை அறுமா முகக்கடவுள்
முன்னொரு சார்வந்து முதுகளிற்றின் கோடொற்றப்
பின்னொரு சார்வந்து பிடியின் மருப்பூன்ற
இந்நடுவே நின்றான் எறுழ்வயிரத் தூணேபோல்" –

(பிடியின் மருப்பு = பிடிபோன்ற வள்ளியின் முலைகளாகிய தந்தங்கள்; முதுகளிற்றின் கோடு: பிள்ளையாராகிய யானையின் தந்தம்) என்பது பாடல். எந்த இலையிலும் இல்லாத முள், தூதுவளை இலையில் இருக்கக் காணலாம். தந்தம்போல் கூரிய முலைக்கண் போல், கூரிய முள்ளை யுடைய இலையைக் கொண்டிருப்பதால், தூதுவளை 'இலை முலை மாது' எனப்பட்டது என்று கூறலாமோ? வடிவம்.

**எண்ணெய் போக்கி**

தலைமுழுகத் தேய்த்துக்கொள்ளும் எண்ணெயைப் போக்குவதால், சிகைக்காய் (சீயக்காய்) 'எண்ணெய் போக்கி' எனப்பட்டது. பயன். இதற்கு வேறு பெயர்க் காரணம் கூறுபவரும் உளர்.

**எமநாசம்**

ஓமம் உடலுக்குப் பல நன்மைகள் செய்து உயிரைக் காப்பாற்றுவதன் வாயிலாக, எமனைத் துரத்தியடிக்கிறது; அதனால் 'எமநாசம்' எனப்பட்டது. பயன்.

**எல்லி நாயகி**

எல்லி என்பதற்கு இரவு என்றும், எல்லி நாதன் என்பதற்குத் திங்கள் (சந்திரன்) என்றும் பொருள் உண்டு. சூரியனை நோக்கும் சூரிய காந்தியைப் போல், சந்திரனை நோக்கும் சந்திரகாந்தி மலர் "எல்லி நாயகி' எனப் பட்டது. சார்பு.

**உதிரும் பழம்**

இலந்தைப் பழம் எளிதில் உதிரக்கூடியதாதலின் உதிரும் பழம் எனப்பட்டது. செயல்.

**உத்தமாதி**

முந்திரி மிகவும் உத்தமமான - சிறப்பான பயனைத் தருவதால் 'உத்தமாதி' எனப்பட்டது. முந்திரியைப் பணப் பயிர் என்பர். முந்திரிக் கொட்டைப் பயிரின் சிறப்பு அறிந்ததே. பெயர் தலைமையால் வந்தது.

**உமிழ்நீர் பெருக்கி**

உட்கொள்வோர்க்கு உமிழ்நீரைப் பெருக்குவதால், கொடிவேலிச் செடி உமிழ்நீர் பெருக்கி எனப்பட்டது. பயன்.

**உயர் வண்ணத்தி**

கைகளிலும், கால்களிலும், கைவிரல்களிலும், கால் விரல்களிலும் செந்நிறம் ஏற்றுவதற்குப் பெண்கள் மருதாணி இலையை அரைத்து அப்புவது வழக்கம். உயர்ந்த—அழகிய வண்ணத்தைக் (நிறத்தைக்) கொடுப்பதால் மருதாணி உயர் வண்ணத்தியாயிற்று. பயன்.

மருதாணிக்கு 'உருத்திர கோபம்' என்னும் பெயரும் உண்டு. உருத்திரன் = சிவன். சிவன் சினந்தால் செந்தீ எழும். மருதாணியும் செந்நிறமாயிருப்பதால் உருத்திர கோபம் எனப்பட்டது. ஒப்புமை-நிறம்.

**உயிர் காத்தி**

சஞ்சீவி மூலிகை உயிரைக் காப்பாற்றுவதால் உயிர் காத்தி—உயிர் காப்பாற்றி என்னும் பெயர் பெற்றது. சஞ்சீவி மூலிகையால் இறந்தவரும் உயிர்பெற்றெழுந்ததான

செய்தியை இராமாயணம் முதலியவற்றால் அறியலாம். பயனால் பெயர் பெற்றது.

**உரக கன்னி**

உரகம் என்பதற்கு நாகம் என்னும் பொருள் உண்டு. எனவே, சொல் விளையாட்டாக, நாக மல்லிகை 'உரக கன்னி' எனப்பட்டது.

**உருமாம்பழம்**

மாதுளை உருவத்தால் மாம்பழம் போல் உருண்டு திரண்டு இருப்பதாலும் ஓரளவு நிறமும் ஒத்திருப்பதாலும் 'உருமாம்பழம்' எனப்பட்டது வடிவம்.

**உருமாறி மூலி**

தொட்டால் வாடி, தொட்டால் சுருங்கி, தொட்டால் சிணுங்கி என இடத்திற்கு ஏற்பப் பல விதமாகப் பெயர் சொல்லப்படும் தொட்டால் சிணுங்கி தொட்டதும் பழைய உருவம் மாறி இலைகள் சுருங்கி மூடிக் கொள்வதால் 'உருமாறி மூலி' எனப்பட்டது வடிவம்.

**உலக மாதா**

மணத் தக்காளி (சிவப்பு) உலகத்து மக்கட்கெல்லாம் நலம் பயப்பதால், உலக மாதா எனப்பட்டது. தலைமை.

**உலக்கைக் கனி**

உலக்கை போன்ற நீண்ட தென்னை மரத்தின் உச்சியில் கனி (காய்) இருப்பதால், தேங்காய் உலக்கைக் கனி எனப்பட்டது. வடிவம்.

**உலர்ந்த இஞ்சி**

காய வைத்து உலர்ந்த இஞ்சியே சுக்கு எனப்படுகிறது. அதனால் சுக்கு 'உலர்ந்த இஞ்சி' எனப்பட்டது. வடிவம்.

**ஐமுகி**

முத்துக் கொட்டை எனப்படும் ஆமணக்கின் பூவில் ஐந்து புல்லிகள் (இதழ்கள்) இருப்பதால், ஆமணக்கு 'ஐமுகி' எனப்பட்டது. வடிவம்.

**ஒடியல் கிழங்கு**

பெரும்பாலும் கிழங்கு வகைகளை எளிதில் ஒடிக்க முடியாது. ஆனால், மெல்லியதாகவும் நீண்டதாகவும் இருக்கும் பனங்கிழங்கை எளிதில் ஒடித்து விடலாம். அதனால் பனங்கிழங்கு ஒடியல் கிழங்கு எனப்பட்டது. வடிவம்.

**ஒட்டுக் கண்ணாள்**

பெரு வெண்டையின் பூ இதழ்கள் அடியில் சிறிதளவு ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருப்பதுபோல் தோன்றும். கேசரக் குழாய் அக இதழ்களோடு ஒட்டிக்கொண்டிருக்கும். சூலகத்தில் உள்ள சூல்களும் ஒட்டு முறையில் இருக்கும். இதனால் பெருவெண்டை 'ஒட்டுக் கண்ணாள்' ஆயிற்று. வடிவம்.

**ஒண்டிப் பார்ப்பான்**

ஆதொண்டையின் இலைகள் தனித்தனியாக இருக்கும்; அதனால் ஆதொண்டை ஒண்டிப் பார்ப்பான் எனப்பட்டது. ஆதொண்டைக் கனி சிறிது நீண்டு உருண்டிருக்கும். கனி ஒவ்வொரு முலைபோல் காணப்படுவதால், ஆதொண்டைக்கு 'ஒரு முலை மாதர்' என்ற பெயரும் உண்டு, வடிவம்.

**ஒன்றல் காரி**

ஒன்றல் காரி — ஓரிடத்தில் ஒன்றியிருந்து (ஒண்டியிருந்து) வஞ்சிப்பவள். ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரி

யைத் துரத்திற்றாம், என்பது பழமொழி. வஞ்சி என்பது ஒரு கொடி. வஞ்சிப்பவளும் வஞ்சி. எனவே, வஞ்சி 'ஒன்றல் காரி' என்னும் பெயரை ஒரு சொல் விளையாட்டாகப் பெற்றுள்ளது.

**ஓலைச் சக்கரம்**

விசிறிபோல் இருக்கும் தாளிப்பனையை நோக்கின், அதன் மட்டை, ஓலையால் ஆன ஆழி (சக்கரம்) போல் இருப்பது புலனாகும். அதனால் இது 'ஓலைச் சக்கரம்' எனப்பட்டது. வடிவம்.

**கங்குல் சிறை**

கங்குல் = இரவு. சிறை = சிறை வைக்கப்பட்ட அழகிய பெண். சந்திர காந்தி, திங்கள் ஒளி வீசும் இரவில் மலர்ந் திருப்பதாதலால், 'கங்குல் சிறை' என்னும் பெயர் பெற்றது, சார்பு.

**கசங்கு கண்ணி**

தொட்டால் சிணுங்கி, தொட்டதுமே கசங்கிவிடுமாத லின் 'கசங்கு கண்ணி' எனப்பட்டது வடிவம்.

**கசப்பு**

வல்லாரை, வேம்பு முதலியன கசப்புச் சுவையுடைமை யால், பண்பாகு பெயராகக் 'கசப்பு' என்னும் பெயர் பெற் றுள்ளன. பண்பு.

**கடின பலம்**

பலம் = பழம். விளாம்பழம் கடினமான ஓடு உடைமை யால் 'கடின பலம்' எனப்பட்டது. வடிவம்.

**கண்டால் மயங்கி**

கண்டாலேயே மயங்கச் செய்யும் ஒருவகைப் பூடு இப் பெயர் பெற்றுள்ளது. செயல்.

**கண்ணழகுக் கொடி**

கேந்திர வள்ளி என்னும் கொடி, கண்ணுக்கு அழகாக இருக்கு மாதலின் இப்பெயர் பெற்றது. வடிவம்.

**கண்ணனிட மூலி**

கண்ணனாகிய திருமாலுக்கு உகந்த மூலிகையாகிய துளசி இப்பெயர் பெற்றது. சார்பு.

**கண்ணாடிக் கள்ளி**

ஒருவகைக் கற்றாழை, காண்பதற்குக் கண்ணாடி போல் பளபளப்பாக இருப்பதால் இப்பெயர் பெற்றது. வடிவம்.

**கண்ணோவுப் பூண்டு**

காந்தளுக்குக் கண்ணோவுப் பூண்டு என்னும் பெயர் பொருட்பண்பு நூலில் தரப்பட்டுள்ளது. இது கண்ணோ வைப் போக்கும் போலும். தோல் நோய்க்கு நல்லதிது. காந்தளுக்குப் பல பெயர்கள் உண்டு. கார்த்திகைத் திங்களில் மலர்வதால் 'கார்த்திகைப்பூ'; அழகாகத் தோன்றுவதால் 'தோன்றி'; பூநெருப்பு நிறமாயிருப்பதால் 'அக்கினிச்சலம்'; கிழங்கு கலப்பை வடிவாயிருத்தலின் 'கலப்பை'; இலையின் முனை சுருண்டிருப்பதால் 'தலைச்சுருளி'; அந்தச் சுருளால் வேலி முதலியவற்றைப் பற்றி ஏறுவதால் 'பற்றை'; ஏறிப் படர்வதற்கு எதையாவது பற்றிக்கொள்வதால் (கோடலால்) 'கோடல்-கோடை' என்னும் பெயர்கள் காந்தளுக்கு உண்டு. கண்ணோவுப் பூண்டு என்னும் பெயர் தவிர, மற்றவை தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் கூறப்பட்டுள்ளன.

**கண்வலி போக்கி**

கண் வறட்சியாயிருந்தால், நந்தியாவட்டைப் பூவைப் பிழிந்து கண்ணில் இரண்டொரு சொட்டு விடுவார்கள்.

கண்வலியைப் போக்குவதால், நந்தியாவட்டை, 'கண்வலி போக்கி' எனப்பட்டது. பயன்.

**கதலிதனம்**

கதலி = வாழை. தனம் (முலை) போல, வாழைக்குலைப் பூ இருப்பதால், கதலிதனம் எனப்பட்டது. வடிவம்.

**கதிரவன்**

கதிரவன் = ஞாயிறு. எருக்கு வெப்பம் தரும் பொருள் ஆதலால் கதிரவன் எனப்பட்டது. ஞாயிறு என்னும் பொரு ளுடைய அருக்கன் என்னும் பெயரும் எருக்குக்கு உண்டு.

"மன்னனையுங் கையெடுக்க வைத்தெயிற்றி னோயகற்றி
உன்னு பிணிப்பணியை ஓட்டுதலால் - சொன்னேன்
எருக்கெனவே பூமி யினிலே விளங்கும்
அருக்கம் அருக்கன் எனலாம்" —

என்பது தேரையர் வெண்பாப் பாடல்.

**கந்தகுடம்**

ஆப்பிள் பழம் குடம் போன்றிருப்பதால் இப்பெயர் வந்தது. வடிவம்.

**கபமகற்றி**

பாவட்டைச்செடி ஐயத்தைப் (கபத்தைப்) போக்கு மாதலின் கபமகற்றி எனப்பட்டது. பயன்.

கபவாதநாசனி = கபவாதத்தைப் போக்கும் அரத்தைக் குரியது இப்பெயர். சிற்றரத்தையைக் குடும்ப மருத்துவ மாகப் பெண்கள் பயன்படுத்துவதைக் காணலாம். பயன்.

கபவாதம் அறியான் = கொடுக்காய்ப்புளி கபவாதத் தைப் போக்குமாம். பயன்.

கபாலபாணியோன்-கபாலி = சிவனார் வேம்புச்செடி வெப்பம் தருவது; சிவன் பெயரைத் தன் பெயரின் முன்னே கொண்டுள்ளது. வெப்பப் பயன் காரணமாகவும் சொல் விளையாட்டாகவும், இதற்குக் கபாலபாணியோன், கபாலி என்னும் சிவன் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. கபாலம் = மண்டையோடு; பாணி = கை. சிவன் மண்டை ஓட்டைக் கையில் உடையவனாதலின் கபாலி, கபாலியோன் என்று அழைக்கப்படுகிறார்.

சிவன் காலனை (எமனை) உதைத்து வென்றவனாத லின், காலனை உதைத்தோன், காலனை வென்றோன் என்ற பெயரும் உண்டு. இப்பெயர்களும் சிவனார் வேம்புக்கு உண்டு.

**கரபத்திரம்**

கரம் = கை. பத்திரம் என்பதற்கு படைக்கலம்=வாள் என்னும் பொருள் உண்டு. எனவே, கரபத்திரம் என்றால், கைவாள் - கைப்படை என்பது பொருளாகும். சுக்குக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. அதாவது, கைவாளைப் போல் சுக்கு எப்போதும் கையில் (கைவசம்) இருக்க வேண்டிய பொருளாகும். 'சுக்குக்கு மிஞ்சின மருத்துவம் இல்லை - சுப்பிரமணியருக்கு மிஞ்சின தெய்வம் இல்லை' என்பது ஒரு பழமொழி. இதனால் சுக்கின் இன்றியமையாச் சிறப்பு அறியவரும். காய்ந்த இஞ்சியாகிய சுக்கு, பலவகை நோய்கட்கும் பயன்படும். அதனுடன் சேர்க்கப்படும் மிளகு, திப்பிலி, பறங்கிப்பட்டை, அரத்தை, தேன் முதலிய (அனுமானப்) பொருள்கட்கு ஏற்பச் சுக்கு பல நோய்கட்குப் பயன்படும். இதை "All Round Master" எனலாம். சுக்கின் பயனைச் சொல்லிக்கொண்டு வந்த தேரையர், பாடலின் இறுதியில், 'சுக்கு இதற்குப் பயன்படும் — இதற்குப் பயன்

படாது — என்று சொல்ல முடியாதபடி எல்லா நோய்கட்கும் பயன்படும்' என்று பாடலை முடித்துள்ளார்.

"ஈதுக்கு உதவும் ஈதுக்கு உதவாது
எனும் விதியிலை நவசுறு குணமுனவே"

என்பது சுக்கு பற்றிய தேரையர் குண பாடப் பாடல் ஒன்றின் இறுதிப் பகுதியாகும். சுக்காகிய இஞ்சி, செடியின் அடியில் உள்ள வேர்க்கொம்புக் கிழங்கு, ஆதலின், சுக்குக்கு 'வேர்க்கொம்பு' என்னும் பெயரும் உண்டு. மற்ற கிழங்குகள் போல் இன்றி, மானின் கொம்புபோல் பல பிரிவினதாகியிருப்பதால் 'கொம்பு' எனப்பட்டது. இவ் வேர்க்கொம்பு என்னும் பெயரை,

"நன்றான வேர்க்கொம்பும் நற்சாரடை வேரும்
ஒன்றாய்க் கியாழமிட்டு உண்டுவிடில் - அன்றேதான்
ஓடுமே மந்தம் ஒளியாமல் நாடகன்று
காடுதனில் போகிவிடுங் காண்"

என்னும் தேரையர் வெண்பாப் பாடலால் அறியலாம். எனவே, இவ்வளவு இன்றியமையாத சுக்கு, கையில் இருக்க வேண்டிய படைக்கலம் போன்றது என்னும் பொருளில் 'கர பத்திரம்' என்னும் பெயர் பெற்றிருப்பது பொருத்தமே. ஒப்புமை.

இதற்கு இன்னொரு வகையான பெயர்க் காரணமும் கூறலாம். கரம் = கை; பத்திரம் = இலை — (இலையுடைய பூடு). முழுச்சுக்கு, கைவிரல்கள் நீட்டிக் கொண்டிருப்பது போல் தோற்றமளிப்பதால், கை(கரம்) போன்ற வடிவமுடைய பத்திரம் என்னும் பொருளில் இப்பெயர்த்தாயிற்று என்றும் கூறலாமே! வடிவம் — ஒப்புமை.

**கரித்தோல்**

அத்தி என்பதற்கு யானை யென்னும் ஒரு பொருள் உண்டு. கரி என்பதற்கும் யானை எனும் பொருளுண்டு.

தோல் = மேற்பகுதி. எனவே, சொல் விளையாட்டாக, அத்திமரப்பட்டை 'கரித்தோல்' எனப்பட்டது.

கரிய மணி = கரிய மணிபோன்றிருப்பதால் கருஞ்சீரகம் இப்பெயர் பெற்றது. வடிவம்.

கருநிற மலச்சி = சிவந்த குண்டு (குன்றி)மணி, கரிய நிற மூக்கு உடைமையால் கருநிற மலச்சி எனப்பட்டது. வடிவம் — நிறம்.

**கரு நேத்திரத் தார் மாலை**

நேத்திரம் என்பதற்கு வேர் என்னும் பொருளும் உண்டு. பனைவேர் கருமையாயிருக்கும்; பனம்பூ மாலை சேரர்க்கு உண்டு. மாலையாகப் பயன்படுவதும் கரிய வேரை உடையதுமாகிய பனை, கருநேத்திரத் தார் மாலை எனப் பட்டது. நிறம் — பயன்.

கர்ப்ப பாதகம் = செம் முருங்கையால் கருச்சிதைவு உண்டாகுமாதலின் இப்பெயர் வந்தது. பயன்.

கர்ப்பாக்கினி: கர்ப்ப + அக்கினி = கர்ப்பாக்கினி. பப்பாளிப்பழம் உண்டால் கரு உண்டாகாதாம் — வயிற்றில் உண்டான கருவும் சிதைந்துவிடுமாம். பிள்ளைப்பேற்றை விரும்பாதவர் பப்பாளிப்பழம் உண்பதைப் பார்த்திருக்க லாம். கர்ப்பத்தை அக்கினிபோல் எரித்துச் சிதைத்து விடுவதால், பப்பாளி 'கர்ப்பாக்கினி' எனப்பட்டது. பயன்.

கனிந்த பழம்: வாழை கனிந்தால் சுவை மிகுதியாதலின் வாழைப்பழத்திற்கு இப்பெயராயிற்று. பண்பு.

காசிக்கிருஷ்ணன்: கிருஷ்ணன் = கறுப்பு. கருஞ்சீரகம் இப்பெயர் பெற்றது. நிறம்.

காட்டெரி = பாலைவனக் காட்டில் எரியக் கூடிய கள்ளி 'காட்டெரி' எனப்பட்டது. சார்பு. ஈண்டு.,

“ பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற்கு இயைந்தனளே,”

என்னும் பொய்யாமொழிப் புலவரின் பாடல் காண்க.

**காமாலை அத்திசுர நாசினி**

மஞ்சள் காமாலையையும், உள் காய்ச்சலையும் போக்கும் திருநாமப் பாலை இப்பெயர் பெற்றது. அத்தி= எலும்பு; அத்தி சுரம்=எலும்புக்குள் சுரம். உள் காய்ச்சலை அத்தி சுரம் என நாட்டு மருத்துவர் கூறுவர். இவ்விரு நோய்களையும் போக்குவதால் திருநாமப் பாலை என்னும் பூடு இப்பெயர் பெற்றது. பயன்.

**காமாலை நிவர்த்தி**

மஞ்சள் காமாலையைப் போக்குவதில் சிறந்த கீழா நெல்லி இப்பெயர் பெற்றது. பயன்.

காயின் பனை = ஆண் பனை காய்க்காது; பெண் பனையே காய்க்கும் எனவே, பெண்பனை ‘காயின் பனை’ எனப்பட்டது. வடிவம்.

கார் காய்: கார்காலமாகிய கார்த்திகைத் திங்களில் காய்க்கும் ஒருவகை மாங்காய் இப்பெயர் பெற்றது. காலம்.

**கானகத்துக்கு அதிபதி**

தூதுவளையில் முள் இருப்பதால், அதை யாரும் எதுவும் அணுக முடியாமையால், அது காட்டுக்குத் தலைவன்போல் தொல்லையின்றி உள்ளது. அதனால் இப் பெயர் பெற்றது. இது சார்பு. தூதுவளைக்குச் ‘சந்து நடந் தான்’ என்னும் பெயரும் உண்டு. சந்து என்பதற்குத் தூது என்னும் பொருள் உண்டு. தூது என்பது இக்கொடிப் பெயரின் முன் உள்ளது. எனவே, இது, சொல் விளையாட் டாகச் ‘சந்து நடந்தான்’ எனப்பட்டது.

கானக விருத்தி: தினை கானகத்தில் விளைவதாலும் கானகத்தாரை வளர்ப்பதாலும் இப்பெயர் பெற்றது. சார்பு.

கானக் குதிரை மேல்தோல் = கானக் குதிரை என்றால் மாமரம். மேல்தோல் என்பது மாமரத்தின் மேலுள்ள பட்டையைக் குறிக்கிறது. வடிவம்.

கிருஷ்ணப் பிரியம் = கறுப்புக் கொடிமுந்திரி பிரியமானது - விருப்பமானது. கிருஷ்ணம் = கறுப்பு, எனவே இதற்கு இப்பெயர் நிறத்தாலும் பயனாலும் வந்தது.

கிருஷ்ண மாது = கருந்துளசி. நிறம். துளசிக்குக் கிருஷ்ணா என்ற பெயரும் உண்டு. கிருஷ்ணனாகிய திருமாலுக்கு உரியதன்றோ. இது சார்பு.

குகன் = குகன் முருகன். முருகனுக்கு வேலன் என்ற பெயரும் உண்டு. எனவே, வேல மரத்துக்குச் சொல் விளையாட்டாகக் 'குகன்' என்னும் பெயர் தரப்பட்டுள்ளது.

குஞ்சரி = முருகன் மனைவியாகிய தெய்வயானைக்குக் 'குஞ்சரி' என்ற பெயர் உண்டு. குஞ்சரம் = யானை. யானைக்கு அத்தி என்ற பெயரும் உண்டு. எனவே, சொல் விளையாட்டாக அத்தி மரத்துக்குக் 'குஞ்சரி' எனும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அத்தி எனும் பெயர் தெய்வயானைக்கும் சூட்டப்பட்டுள்ளது. அருணகிரிநாதர் பாடியுள்ள திருப்புகழ்ப் பாடல் ஒன்றில்,

"முத்தைத் தரு பத்தித் திருநகை அத்திக்கு இறை" எனத் தெய்வயானை அத்தி எனக் குறிப்பிடப்பட்டிருப்பது காண்க.

பொருள்: முத்தைத் தரு = முத்தின் அழகைத் தருகின்ற - முத்து போன்ற; பத்தி = வரிசையான; திரு

நகை = அழகிய பற்களை உடைய; அத்திக்கு = தெய்வ யானைக்கு; இறை = கணவனாகிய முருகன் - என்பதாம்.

குடபுட்பம் = இலுப்பைப் பூ குடம் போன்றிருப்பதால் இப்பெயர் பெற்றது. வடிவம்.

குடிவருணி: குடித்தல் = பருகல்; வருணம் = நீர். குடிக்கும் நீரையுடைய இளநீர் குடிவருணி எனப்பட்டது. பயன்.

குடைச்சி: சிறு கீரை குப்பையில் குடைபோல் கவிழ்ந்து கொண்டிருப்பதால் வந்தது இப்பெயர்-வடிவம். இதற்குக் குப்பைக் குடையாள் என்னும் பெயரும் உண்டு.

குட்டப்பாண்டு நாசனி: கருமருது, குட்ட நோயையும் பாண்டு நோயையும் போக்கும். பயன்.

குட்டம் போக்கி: வெண்கடுகும் சுரபுன்னையும் குட்ட நோயைப் போக்கும்—பயன்.

குட்ட விரணம் போக்கி = சேங்கொட்டை குட்டப் புண்ணை ஆற்றும் - பயன்.

குணத்தி = வல்லாரை பல பிணிகளைக் குணப்படுத்தும் குணம் (பண்பு) உடையது. பயன்.

குணம் பாழ்: திகைப்பூடு என்னும் பூண்டை மிதித்தவர்கள் குணம் பாழாவர். மதிமயங்குவர். இதனால் குணப்பாழ் என்னும் பெயர் ஏற்பட்டது. திகைப்பூடுக்கு மதிமயக்கிப் பூடு, திகைப்பூண்டு, மன மயக்கிப் பூண்டு என்ற பெயர்களும் உண்டு. பயன்.

குமரகன் பெண்டிர் = குமரகனாகிய முருகனின் மனைவியாகிய வள்ளி என்னும் பெண்டிர். இங்கே சொல் விளையாட்டாக, வள்ளிக் கொடி குமரகன் பெண்டிர் எனப்பட்டுள்ளது.

குமரனுட மனைவிமூலம் = குமரனுடைய மனைவி = வள்ளி; மூலம் = கிழங்கு; வள்ளிக்கிழங்கு 'குமரனுட மனைவி மூலம்' எனப்பட்டது. இஃதும் சொல் விளை யாட்டே. 'குமரனுட' என்பதில் உள்ள 'உட' என்பது, மலையாள மொழியில் 'உடைய' என்னும் ஆறாம் வேற்றுமை உருபுப் பொருளில் வழங்கப்படுகிறது.

குயில் மொழி=அதி மதுரம் குயில் மொழிபோல் இனிப் பானது; தொண்டையில் உள்ள சிக்கல்களைப் போக்குவது. அதன் பெயரே, அதி மதுரம் = மிக்க இனிப்பானது — என இருத்தல் காண்க. அதி மதுரம், காதுக்குக் குயில்மொழி போல் நாக்குக்குத் தித்திக்கும் என்பதற்குச் சான்றாக, தேரையர் பாடலில் உள்ள பாதி அடியை மட்டும் இங்கே காண்போம்:-

" தித்திக்கும் அதிமதுரக் குணத்தை யெடுத்
துரைக்கில்......"

என்ற பாடல் பகுதியாலும், அதிமதுரத்துக்குக் 'குயில் மொழி' என்னும் பெயர் பொருந்தும் என அறியலாம். நாக்குக்குத் தித்திப்பதல்லாமல், தொண்டையை வளப் படுத்துவதால் பாடும் பாடலும் குயில் மொழிபோல் காதுக்குத் தித்திக்கும். ஒப்புமை.

குரங்கிலை: முசு = குரங்கு. முசுமுசுக்கை இலைக்குக் குரங்கிலை என்பது சொல் விளையாட்டாகத் தரப்பட் டுள்ளது.

குரங்கு மூஞ்சிப்பூ = மகிழம்பூ குரங்கு முகம் போன்ற தோற்றம் உடையது. வடிவம்.

குறுக்கன் = கேழ்வரகு மிகவும் குறுகியதாக-சிறியதாக இருத்தலின் இப்பெயர் பெற்றது — வடிவம்.

கூட்டாளி = வெள்ளை வெங்காயம் எனப்படும் பூண்டு, கூட்டாளி (நண்பன்) போல் இருந்து பலவகை நன்மைகளை உடலுக்குச் செய்வது. பயன்.

கூத்தவாதி: தில்லையின் கூத்தாடும் சிவனுக்குக் கூத்தன் எனும் பெயர் உண்டு. கூத்தவாதி எனும் பெயர் சொல் விளையாட்டாகச் சிவனார் வேம்புக்குச் சூட்டப் பட்டது. சிவன் காளியோடு வாதிட்டார்.

கூத்தனம் - கூத்தானம்: சிவன், தில்லையில் - தில்லை மரத்தின் கீழ்க் கூத்தாடுபவன் ஆதலால், கூத்தனம், கூத்தானம் என்னும் பெயர்கள் தில்லை மரத்துக்குத் தரப்பட்டுள்ளன. சார்பு.

கூந்தலழகி = உரோம மரம் (ரோம விருட்சம்) அழகிய கூந்தல் போன்ற பகுதியை உடையது. வடிவம்.

கூவு சுணங்கன்: சுணங்கன் = நாய். நாய்க்குட்டி மரம் இப்பெயரைச் சொல் விளையாட்டாகப் பெற்றுள்ளது. கூவுவது — குலைப்பது நாயின் இயல்பு. இம்மரம் கூவாது.

கூரிய சேகரம்: இது தென்னைமரம். சேகரம் = தலை, உச்சி. மற்ற மரங்களின் உச்சி அகன்று பரந்து விரிந்திருக்கக் காணலாம். ஆனால் தென்னையின் உச்சி கூராக இருக்கும். அதாவது, புது மட்டைகள் வானை நோக்கிக் கூராக நின்று கொண்டிருக்கும். இதனை மணிமேகலையில் உள்ள

"ஓங்கிருந் தெங்கின் உயர்மடல் ஏற" — (5-126)

என்னும் பகுதியாலும் அறியலாம். உயர் மடல் என்பது கூரிய சேகரமாகும். எனவே, தென்னை கூரிய சேகரம் எனப்பட்டது. வடிவம்.

கூனி: கைகேயின் காவல் தோழி கூனி என்பாள். அவளுக்கு மந்தரை — மந்தாரை என்ற பெயர் உண்டு,

எனவே, மந்தாரை என்னும் பூச்செடி, சொல் விளையாட்டாகக் கூனி எனும் பெயர் பெற்றுள்ளது.

கெருடாதிபதி: கெருடன் = கருடப் பறவை. இதனை ஊர்தியாக உடைய அதிபதி (தலைவன்) விஷ்ணுவாகிய திருமால். எனவே, விஷ்ணுகாந்தி என்னும் பூண்டு, சொல் விளையாட்டாகக் 'கெருடாதிபதி' எனப்பட்டது.

கேரளி: கேரளம் = மலையாள நாடு. மலையாளத்தில் விளையும் ஒருவகை நெல் கேரளி எனப்பட்டது. இடம்.

கபம் அறுக்கும் குடோரி = யானைத் திப்பிலி கபத்தை அறுக்கக்கூடியது. பயன். குடோரி= அறுப்பது.

குடிகேடன்: கெட்டுப் போனவரின் குடியில் - வீட்டில் எருக்கு பூக்கும். ஔவையாரின் பாடல்:

"வேதாளம் சேருமே; வெள்ளெருக்குப் பூக்குமே;
பாதாள மூலி படருமே; — மூதேவி
சென்றிருந்து வாழ்வளே; சேடன் குடிபுகுமே;
மன்றோரம் சொன்னார் மனை". (நல்வழி-23)

இப்பாடலில், பொய்ச்சான்று கூறியவரின் வீட்டில் நிகழக் கூடியவற்றுள் எருக்கு பூத்தலும் ஒன்று என்று கூறப்பட்டிருப்பது காண்க. எனவே, எருக்குக்குக் குடிகேடன் என்னும் பெயர் பொருந்தும். சார்பு.

**கையில்கனி**: இது நெல்லிக்கனி. ஒன்று தெளிவாகப் புரிவதற்கு ஒப்புமையாகக் 'கையில் உள்ள நெல்லிக்கனி போல' என்று கூறுவது வழக்கம். இது சம்சுகிருதத்தில் 'கரதலாமலகம்' எனப்படும். கரதலம் = கை; ஆமலகம் = நெல்லி. 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்பது, தமிழில் தண்ணீர் பட்ட பாடு. மலை உச்சியில்—மலைப் பிளவில்—மரத்தில்-உள்ள நெல்லிக்கனியினும் கையில் உள்ள நெல்லிக் கனி உறுதியானது-தெளிவானது அன்றோ? சார்பு.

கைப்பாகன்: கைப்புஆகன் = கசப்பு உடம்பு உடையவன். மிகுந்த கசப்புடைய ஒருவகை வேம்பு இப்பெயர்க்கு உரியது. கைப்பு = கசப்பு. பண்பு. (ஆகம் – உடம்பு).

கைப்பான்: பாகலும் கசக்குமாதலின் கைப்பான் எனப்பட்டது. பண்பு.

கையிருப்பு: செங்குவளைக்கு இப்பெயர் தரப்பட்டுள்ளது. குவளை என்பது ஒரு பேரெண். இது பெரிய எண்ணிக்கை கொண்ட செல்வம்–என்னும் பொருள் தரும். கையிருப்பு என்பது கைவசம் உள்ள பெரிய செல்வத்தைக் குறிக்கும். எனவே, செங்குவளைக்குக் கையிருப்பு என்னும் பெயர் பொருந்தும். சொல் விளையாட்டு.

கொக்குக்காலி – கொக்கு மரம் = கொக்கு என்பதற்கு மாமரம் என்னும் பொருள் உண்டு. எனவே, இரு பொருள் அமைந்த சொல் விளையாட்டாக மாமரத்திற்கு இப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. கொக்கு என்னும் பறவையை இங்கே குறிக்காது. சொல் விளையாட்டு.

கொடிக்கால் கீரை: கொடிக்கால் மரமாகிய அகத்தியின் கீரை கொடிக்கால் கீரை எனப்பட்டது. சார்பு.

கொடிக்கால் மரம்: வெற்றிலைக் கொடி படர்வதற்குக் காலாக (கொழுகொம்பாக) இருக்கும் அகத்தி மரம் இப்பெயர் பெற்றது. சார்பு.

கொண்டல்மேனி: கொண்டல் = மேகம், மேனி = வடிவம். மேகம் நீல நிறமானது. நீலமேகம் என்ற பெயர் உண்மை காண்க. நீலத்தாமரை, கொண்டல் நிற மேனியுடன் இருப்பதால் இப்பெயர் பெற்றது. நிறம்-வடிவம்.

கொன்றைசூடி: கொன்றைப்பூ சூடுபவர் சிவன். எனவே, சொல் விளையாட்டாகச் சிவகரந்தை என்னும் பூடு கொன்றைசூடி எனப்பட்டது.

கோகில நயனம்: கோகிலம் = குயில்; நயனம் = கண். முள்ளுக் கத்தரிக்காய் குயிலின் கண்போன்றிருத்தலின் கோகில நயனம் எனப்பட்டது. ஒப்புமை.

கோதை மாதவி: குருக்கத்திக் கொடிக்கு மாதவி என்னும் மற்றொரு பெயரும் உண்டு. எனவே, சொல் விளையாட்டாகக் குருக்கத்தி 'கோதைமாதவி' எனப் பட்டது. சிலப்பதிகார மாதவியையும் குறிக்கும் இது இரு பொருள் நயம் உடையது. கோதை=பெண்.

கோரக்கர் மூலிகை: கோரக்கர் என்னும் சித்தரும் உட்கொண்டதால், கஞ்சா, கோரக்கர் மூலிகையாயிற்று. சார்பு.

சக்களத்தி (சககளத்தி): ஒரு மரஇனம் வளர்வதற்குத் தடையாயுள்ள புல்லுருவிகளும் களைகளும் சக்களத்தி எனப்படுகின்றன. குடும்பத்தில் சக்களத்திகள் சிலர், ஒருவர் வளர்ச்சிக்கு மற்றொருவர் இடையூறாய் இருக்கின்றனர் அல்லவா? ஒப்புமை.

சரசுவதி: இப்பெயர் வல்லாரைக்குத் தரப்பட்டுள்ளது. வல்லாரைப்பூடின் இலையை உண்டால், நினைவாற்றல் பெருகும்; மூளை வலிமை அடையும், அதனால் கல்வி நலம் சிறக்கும். வல்லாரை உண்டவர்கள் கல்லாரைப் போல் கலங்காமல் கற்றாரைப் போல் நலம் பெறுவர். எனவே, கல்விக்கு உரியவளாகிய சரசுவதியின் பெயர் வல்லாரைக்கு வைக்கப்பட்டது. ஒப்புமை.

தேரன் வெண்பா:

" வல்லாரைக் கற்பமுண வல்லாரை யார்நிகர்வர்
கல்லாரைப் போலக் கலங்காமல் — வல்லாரைச்
சாறும் இலவணமும் சாபத் திரியுமுண்ணப்
பேருமடி வல்லைப் பிணி "

எனவே, வல்லாரை சரசுவதியாயிற்று.

சாதக சித்தி - சாதன கற்பமூலி: வல்லாரை உடலுக்குச் சாதகம் உண்டாக்கிச் சித்திபெறச் செய்வதாலும், உடலுக்கு நல்ல சாதனப் பொருளாய் இருப்பதாலும் இப்பெயர்கள் பெற்றது. பயன்.

சிணுங்கி: தொண்டால் சிணுங்கியின் சுருக்கப்பெயரே இது. செயல்.

சிவசிவா மரம்: இது சவுக்கு மரம். இதன் பெயர்க் காரணம் சிக்கலாயுள்ளது. சிவனை, திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், சடையன், சடையாண்டி என்றெல்லாம் சொல்வதுண்டு. சவுக்கு மரமும் சடை போன்ற உறுப்பு உடையது; தலைமயிர் போன்ற பகுதி தனித் தனியாகவும் அடர்ந்தும் இருக்கக் காணலாம். மற்றும், சவுக்குக் காய், சிவனுக்கு உரிய உருத்திராக்க மணிபோல் இருப்பதையும் காணலாம். இவ்விருவகை அமைப்பை உடைமையால், சவுக்கு, சிவசிவா மரம் எனப்பட்டது எனலாம். மற்றொரு வகைப் பெயர்க் காரணமும் கூறலாம்:

வெப்பம் தருவதால், குப்பைமேனி, வெற்றிலை முதலியவை, தீத் (நெருப்புத்) தெய்வமாகிய சிவனுடைய பெயர்களைப் பெற்றுள்ளன. அவ்வாறே, சவுக்கும் வெப்பம் உடைய பொருளாதலின், ‘சிவசிவா’ என்னும் சிவன் பெயரைப் பெற்றதாகக் கூறலாம் அல்லவா? இதனை இன்னும் சிறிது விளக்கலாம்:

விறகுக்குள் தீயும் பாலுக்குள் நெய்யும் மறைந்திருப்பது போல், கடவுள் நம் உடம்புக்குள்ளே மறைந்திருக்கிறார் எனப் பின்வரும் அப்பர் தேவாரப் பாடல் கூறுகிறது.

“ விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான் ”

என்பது பாடல் பகுதி. விறகுக்கும் நெருப்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அப்பரின் திருவானைக்கா தேவாரப்பாடல் ஒன்றிலுள்ள

" செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர் "

என்னும் பகுதியிலும் விறகுத் தீயை அறியலாம். பெரிய விறகாகிய உடம்பைச் சிறிய விறகுத் துண்டுகளால் எரிப்பார்கள்.

விறகு என்றதும், சவுக்கையே முதலிடம் பெறும். சவுக்கு மரம், வீடு கட்டவும், பந்தல் போடவும் உதவும். இறுதியில் விறகாகும். பெரும்பாலும் விறகுக்காகவே சவுக்கு பயிரிடப்படுகிறது. சவுக்கில் நெருப்பு விரைவில் பற்றும்; நன்றாக எரியும்; சவுக்கு எரிக்கும் நெருப்பு மிக்க வெப்பம் தரும்; புகையாது; சாம்பல் சிறிதளவே - எனவே, விறகுப் போட்டியில் சவுக்கு வெற்றி பெறலாம்.

குப்பைமேனி, வெற்றிலை முதலியவற்றினும் வெப்பம் மிக்குடைய சவுக்கு, நெருப்புக் கடவுளாகிய சிவன் பெயரால் குறிப்பிடப்படுவதில் வியப்பில்லையன்றோ? எனவே, சவுக்கு மரம், சிவசிவா மரம் என இரட்டைச் 'சிவம்' பெற்றது. உடற்கூறு.

சிதம்பரம்: சிதம்பரம் என்னும் ஊரின் பெயர் இங்கே தில்லை மரத்தைக் குறிக்கிறது. தில்லைமரம் இருந்ததால் தில்லை என்னும் பெயரை அவ்வூர் முதலில் பெற்றிருந்தது. இரு பெயர்களும் ஒரே ஊரைக் குறிப்பதால் தில்லை 'சிதம்பரம்' எனப்பட்டது. சார்பு.

சிநேகம்: சாதிக்காய் நண்பன்போல் உதவுவதால் சிநேகம் எனப்பட்டது. பயன். சாதி என்னும் சொல்,

உறவு - நட்பைக் குறிப்பதால் சொல்விளையாட்டு எனவும் கூறலாம்.

சுடலைதனில் நிர்த்தன் - சுடலையாடி:- சுடலை = சுடுகாடு. நிர்த்தன் = நடனமாடுபவன். சிவன் ஊழியிறுதியில் சுடுகாட்டில் நடம் புரிவாராதலின் இப்பெயர்கள் பெற்றார். இவை சொல் விளையாட்டாகச் சிவனார் வேம்பைக் குறிக்கலாயின.

சுந்தர நங்கை: அரசமரம் காண்பதற்குச் சுந்தரமாய்- அழகாய் இருப்பதால் இப்பெயர் பெற்றது. வடிவம். நங்கையர் அரசமரம் சுற்றுவர் அல்லவா?

சுரசாந்தினி: வல்லாரை சுரத்தை - காய்ச்சலைச் சாந்தப்படுத்துவதால்-தணிப்பதால், இப்படியும் ஒரு பெயர் பெற்றுள்ளது. பயன்.

சுவாச காசகி - காசநோய் கண்டு மேல்சுவாசம்-மேல் மூச்சு வாங்குவோர்க்குத் தாளிச பத்திரி நலம் பயப்பதால் இப்பெயர் பெற்றது. பயன். வீட்டு மருத்துவத்தில் இது பயன்படுவதுண்டு.

சுவாசம் போக்கி – மேல்மூச்சு - கீழ்மூச்சு வாங்கும் இரைப்பு நோய்க்கு நலம் பயக்கும் தான்றிக் காய்க்கு உரியது இப்பெயர். பயன்.

சுவேதம் ஆடிய கூத்தன் - சுவேதம் = வெள்ளி—மதுரை வெள்ளியம்பலத்தில் சிவன் கூத்தாடுவதால், அவருக்கு உரிய இப்பெயர் தில்லைமரத்துக்காயிற்று. சார்பு.

சூரனுட கனி: சூரபதுமன், முருகனால் வெல்லப் பட்டுக் கடல் நடுவே மாமரமாய் நின்றான். அதனால், மாம்பழம் சூரனுட கனி என்னும் பெயரைச் சார்பினால் பெற்றுள்ளது. 'சூரனுட' என்பதில் உள்ள 'உட' என்பது 'உடைய' என்னும் பொருளுடையது.

செந்நீவண்ணன்: செந்நிற வடிவினனாகிய சிவனுக்கு உரிய இப்பெயரைச் சிவதுளசி பெற்றுள்ளது. சார்பு.

சோகம் நீக்கி: குறிஞ்சிக்கொடி சோர்வைப் போக்குவதால் இப்பெயர் பெற்றது. பயன்.

தலைக்கணை: கடலைகளுள் பெரியது மொச்சைக் கொட்டைக் கடலை. கடலை உரிக்காத நீண்ட காய் தலைக்கணை போல் இருப்பதால் இப்பெயர் பெற்றது. ஒப்புமை.

தலைச்சூடி: சிவன் தலையில் கொன்றை மலரைச் சூடுவதால், கொன்றை 'தலைச் சூடி' எனப்பட்டது. ஈண்டு, சுந்தரரின் திருமழபாடித் தேவாரப் பதிகப்பாடலில் உள்ள

"மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை
அணிந்தவனே"

என்னும் பகுதி நினைவு கூரத்தக்கது. சார்பு.

தலைவலி போக்கி: கிச்சிலிக் கிழங்கும், கத்தூரி மஞ்சளும் தலைவலியைப் போக்குவதால் இப்பெயர் பெற்றன. பயன்.

தளைப்படான்: தளை = விலங்கு, கட்டு. புகையிலையைப் புகைத்தால், புகை எதனாலும் தளைப் படாமல்--கட்டுப்படாமல் செல்லுமாதலின், புகையிலை 'தளைப்படான்' என்னும் பெயர் பெற்றது. பண்பு.

தனைமயக்குமூலி: கஞ்சா உண்டவர்க்கு மயக்கம்–போதை உண்டாவதால், அதற்குத் தனைமயக்கு மூலி எனும் பெயர் ஏற்பட்டது. பயன்.

தாக சாந்தி–தாக சுர வினாசி: இலவங்கம், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, கிராம்பு, கருவாப்பட்டை என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுவன, சிறு சிறு

வேற்றுமையுடன் ஒற்றுமையுடையன. இலவங்கப்பூவாகிய கிராம்பு தாகத்தைப் போக்கும்; காய்ச்சல் (சுரம்) அடிக்கும்போது ஏற்படும் தாக வறட்சியையும் போக்கும். இப்பயன் பற்றிய அ.கு.பா. பாடல் வருமாறு:-

" மேகசுரம் சீதசுரம் வெட்டை சுவாசம் காசம்
தாகபித்தம் வாந்திசர் வாகியநோய் - மேகத்தின்
கட்டியொடு தாதுநட்டம் கைப்பருசி போக்கிவிடும்
இட்ட இலவங்கத் திலை" - பயன்.

தாகநாசனி: விளாம்பழமும் தாகத்தை யடக்குவதால் இப்பெயர் பெற்றுள்ளது. பயன்.

தாதி: வெங்காயம், தாதிபோல் – செவிலிபோல் இருந்து உதவுவதால் தாதி எனப்பட்டது. ஒப்புமை.

தாய்க்கீழ்ப் பிள்ளை: எட்டிமரக்கன்று தாய் மரத்தின் கீழிருப்பதால் 'தாய்க்கீழ்ப்பிள்ளை' எனப்பட்டது. ஒப்புமை.

திருட பலம்: திருடம் = வலிமை; பலம் = காய், கனி. தேங்காய் வலிமையான ஓட்டுடன் இருப்பதால் திருடபலம் எனப்பட்டது. வடிவம்.

திருடி: கள்ளிக்குத் திருடி என ஒரு பெயர் தரப் பட்டுள்ளது. கள்ளத்தனம் (திருட்டுத் தனம்) உடையவள் கள்ளி (திருடி). இது சொல் விளையாட்டுப் பெயராகும். அடவி என்றால் காடு. காட்டில் உள்ள கள்ளியை 'அடவியில் திருடி' என்பர்.

திருடி நாயகன்: திருமாலின் தெய்வப்பிறவி கண்ணன் (கிருஷ்ணன்). அவன் 'வெண்ணெய் திருடி' என்னும் பெயர் பெற்றவன். எனவே, திருடியாகிய நாயகன் - திருடி நாயகன் என்பது, கண்ணனாகிய விஷ்ணுவைக் குறிக்கும். அப்பெயர், சொல் விளையாட்டாக விஷ்ணு கரந்தைக்கு வைக்கப் பட்டுள்ளது.

திருநீல கண்டன்: இது சிவன் பெயர். எனவே, இது சிவகரந்தையைக் குறிக்கலாயிற்று. சொல் விளையாட்டு.

திருமால் மூலிகை: துளசி இது. சார்பு.

தீத்தெய்வம்: வன்னி = தீ. சொல் விளையாட்டாக வன்னி மரம் 'தீத்தெய்வம்' எனப்பட்டது. சிவனுக்கு உரிய தாகிய வன்னி மரத்தை மக்கள் வழிபடுவதும் உண்டு.

துரியோதனன் பூ: துரியோதனனுக்கு நந்தியாவட்டப் பூ உரியதாம். துரியோதனனுக்குச் சுயோதனன் என்ற பெயரும் உண்டு.

"சொன்னநாள் வழுவுறாமல்
சுயோதனன் தோன்றினானே"

(வில்லிபாரதம் - சம்பவ - 78)

இதனால், நந்தியாவட்டப் பூ மாலைக்கு 'சுயோதனன் மாலை' என்னும் பெயர் பொருட் பண்பு நூலில் தரப் பட்டுள்ளது. எனவே, துரியோதனன் பூ என்பது நந்தியா வட்டப் பூவாகும். சார்பு.

துகிலி: துகில் = துணி. துணி நெய்ய நூல் வேண்டும். நூல் நூற்கப் பருத்தி வேண்டும். பருத்தி துணியாகக் காய்க்கா தல்லவா? ஆகத் துணிக்குப் பருத்தி மூல முதற் காரணமாயிருப்பது பற்றிப் பருத்தியிலை துகிலி எனப் பட்டது. பயன்.

துகில் பீசம்: துகில் = துணி. பீசம் = விதை. துணி தரும் பருத்தி விதை துகில் பீசம் எனப்பட்டது. பயன்.

துப்பு நெல்லி: துப்பு = உணவு, வலிமை. குறள் காண்க:

"துப்பார்க்குத் துப்பாய துப்புஆக்கி துப்பார்க்குத்
துப்பு ஆயதூஉம் மழை" — (12)

உணவுக்கு உதவி வலிமை தரும் தோப்பு நெல்லிக்குத் 'துப்பு நெல்லி' என்னும் பெயர் ஏற்றது. பயன். ஒரு நெல்லிக்கனி இரண்டு ஆப்பிள் பழத்தின் ஆற்றலைத் தருமாம்.

தூய்மை: வெள்ளை நிறம் தூய்மையானது. வெள்ளையாய் தூய்மையாய் இருக்கும் பொருளைத் தும்பைப் பூப்போல் உள்ளது என்பர். எனவே, வெண்ணிறத் தும்பை 'தூய்மை' எனப்பட்டது. நிறம் – வடிவம்.

தெட்சணாமூர்த்தி: தெட்சணம்=(தட்சணம்) தெற்கு அகத்தியர் வடக்கேயிருந்து தெற்கே வந்து தென்மலை எனப்படும் பொதிய மலையில் தங்கினார்; தென்தமிழைக் கற்றார்—அதனால் புகழ் பெற்றார்; இவற்றால் 'தென் முனி' எனவும் அழைக்கப்பட்டார். இலக்கியச் சான்றுகள்:-

புறப்பொருள் வெண்பாமாலை:

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலையிருந்த சீர்சால் முனிவரன்"
(சிறப்புப் பாயிரம்—1,2)

கம்பராமாயணம்,

"என்றும் உள தென்தமிழ் இயம்பிஇசைகொண்டான்"
(ஆரணிய காண்டம்—அகத்தியர் படலம்—47–4)

கடம்பவன புராணம்:

"தென்திசை வைகென்று தென்முனிக்குக்
கயிலையின் முன் புகன்ற ஞான்று" —(இலீயா—18)

இங்கே தென்முனி, தெட்சணாமூர்த்தி ஆகிய இரண்டும் ஒன்றே. எனவே, அகத்தியரைக் குறிக்கும் தெட்சணா மூர்த்தி என்னும் பெயர் சொல்விளையாட்டாக அகத்தி மரத்திற்கும் உரியதாயிற்று.

தெண்டபாணி: தெண்டம் = தடி; பாணி = கை; தெண்டபாணி=கையில் உள்ளதடி-கோல். நெல்லி கையில் உள்ளதென நெல்லிக்கும் கைக்கும் முன்னர் தொடர்பு கூறப்பட்டுள்ளது. எனவே, கொடி நெல்லி கைக்கோல் என்னும் பொருளில் தெண்டபாணியாயிற்று. சார்பு.

தேர்வாசம்: அரசர் அந்தக் காலத்தில் தேரில் செல்வது மரபு, அரசின்—அரசரின் வாசமாக-இருப்பிடமாக-ஊர்தியாக உள்ளது தேர். எனவே, அரசு என்னும் மரம், இருபொருள் சொல் விளையாட்டாகத் தேர்வாசம் எனப் பட்டது.

தேவ பூசைப் பூ = கடவுள் பூசனைக்கு உரிய செங் கழுநீர்ப்பூ. பயன்.

தொட்டக்கால் வாடி = தொட்டால் சிணுங்கி. செயல்-இயல்பு.

தோகை முகபூஷணம்: தோகை என்பது, ஈண்டு தோகையையுடைய மயில் போன்ற பெண்ணைக் குறிக் கிறது; தோகை முகம்=பெண் முகம்; பூஷணம் = அணி. பெண் முகத்துக்கு அணி செய்யும் 'பூசு மஞ்சள்' இப்பெயர் பெற்றது. பயன்.

தோப்பி=நெல்லியில் பலவகை உண்டு. அரி நெல்லி, கரு நெல்லி, தோப்பு நெல்லி என்பன வகைகள். இவற்றுள், நெல்லிமரம் நிறைந்த தோப்பில் உள்ள நெல்லி 'தோப்பு நெல்லி' எனப்படும். புதுச்சேரியின் (பாண்டிச்சேரியின்) பக்கத்தில் 'நெல்லித்தோப்பு' என்னும் பெயருடைய ஊர் ஒன்றுளது. இந்தத் தோப்பு நெல்லி ஊறுகாய் போடப் பட்டு உணவுக்கு உதவும். தோப்பில் உள்ள இந்த நெல்லி 'தோப்பி' எனப்பட்டது. இடம்.

தோழி: கற்பூர வள்ளி தோழிபோல் உதவுவதால் தோழியாயிற்று. ஒப்புமை. (வள்ளி பெண்)

தோன்றியடி: செந்நிறத்துடன் கண்ணுக்கு அழகாகத் தோன்றும் காந்தள் மலர் 'தோன்றி' எனப்பட்டது. இ.சா:— சீவக சிந்தாமணி.

"கோட்டினந் தகர்களும் கொய்ம்மலர தோன்றிபோல்
சூட்டுடைய சேவலும்"—(73)

தோன்றி (காந்தள்) மலர்போன்ற சூட்டுடைய (செந்நிறக் கொண்டையுடைய) சேவல் - என்பது கருத்து. தோன்றி அடி=தோன்றிக் கொடியின் அடியிலுள்ள கிழங்கு. காந்தள் கிழங்கு தோன்றியடி எனப்பட்டது. வடிவம்.

நடக்கையறிவாள்: கொடி வேலிச் செடி, தோட்டங் களில் வேலியையடுத்தும் அல்லது வேலியாகவும் அழகுக் காகவும் வைத்து வளர்க்கப்படுவது. நடப்பவர்கள் வேலி யைத்தாண்ட முடியாது; வேலி ஓரத்திலேயே நடப்பர். இவ் வாறு பலரது நடத்தலையும் அறிவதால், இது, நடக்கை யறிவாள் எனப்பட்டது போலும்! சார்பு.

நடமிடுமீசன்: நடம் இடும் ஈசன் = நடனம் ஆடும் சிவன். சிவனுக்கு உரியது சரக்கொன்றை; அதனால் இது 'நடமிடுமீசன்' ஆயிற்று. சார்பு.

நட்சத்திரக் காட்சி: வேங்கை மரத்தின் மலர்கள் பொன்னிறமாக மஞ்சள் நிறமாக இருக்கும். விண்மீன்களும் (நட்சத்திரங்களும்) இவ்வாறே காட்சி தருதலின், வேங்கை, 'நட்சத்திரக் காட்சி' எனப்பட்டது வடிவம்.

நமனை விரட்டி: மார்க்கண்டேயனைப் பிடிக்க வந்த எமனை (நமனை) உதைத்து விரட்டியவர் சிவன். அவர்

இருக்குமிடம் தில்லை. எனவே, தில்லை மரம் 'நமனை விரட்டி' எனப்பட்டது. சார்பு.

நயன சஞ்சீவி: நயனம் = கண். தூதுவளை (தூதளை) கண்ணுக்கு மிகவும் நல்லது. இது பற்றிய அ.கு.பா. பாடலும் அதற்கு முருகேச முதலியார் தம் பொருட் பண்பு நூலில்தந்துள்ள உரையும் வருமாறு:-

" திருக்குளத்தை நன்றாக்கித் தின்னுவையேல் நல்ல
திருக்குளத்தைப் போலே திருந்தும் – திருக்குளத்தை
யெல்லா மிரவுவினை யென்னவரும் தூதுவளை
யெல்லா மிரவு மினி" –

உரை: "தூதுவளைக் கீரை, வேர், காய், வத்தல், ஊறு காய் இவற்றை நாற்பது நாட்கள் புசித்துவரின், கண்ணில் ஏற்பட்ட தீக்குற்ற மிகுதி, மற்ற கண்ணோய்கள் யாவும் நீங்கும்". பாடல் அமைப்பு மறைபொருளாயுள்ளது. எனவே, தூதுவளை 'நயன சஞ்சீவி' எனப்பட்டது. பயன்.

நயனவல்லி: வல்லாரையும் கண்ணுக்கு நல்லது.

" அக்கநோய் மாறும்; அகலும் வயிற்றிழிவு;
தக்க இரத்தக் கடுப்புத் தானேகும் – பக்கத்தில்
எல்லாரையு மருந்தென்றே யுரைத்து நன்மனையுள்
வல்லாரை யைவளர்த்து வை" –

என்பது அ.கு.பா. பாடல். அக்கம் = கண், அக்கநோய் மாறும் என்றால் கண்ணோய் போகும் என்பது கருத்து. எனவே, வல்லாரை 'நயனவல்லி' யாயிற்று'. பயன்.

நரைதிரை மாறப்பண்ணி: இவ்வாறு செய்வது காட்டு மாமரம். பயன்.

நரை நாசனி = விழுதிக் கீரை நரையைப் போக்கும். பயன்.

நவக்கிரகத் தும்பை: இது 'மாறுதும்பை' யாகும். நவக்கிரகம் எனப்படும் ஒன்பது கோள்களும், எப்போதும் நிலையாக ஒரே வீட்டில் இருப்பதில்லை. வீடு மாறிக் கொண்டே யிருப்பார்கள். அதுபோல, தன் வடிவை அடிக்கடி மாற்றும் 'மாறு தும்பை' நவக்கிரகத் தும்பை எனப்பட்டது. வடிவம்.

நற்சேவகன்: கோடாங் கிழங்கு என்னும் ஒரு வகைக் கிழங்கு, நல்ல சேவகன் போல் உதவு மாதலின் ஒப்புமை யால் நற்சேவகன் எனப்பட்டது.

நாக்கறுத்தான்: தர்ப்பைப் புல்லை நாக்கில் இட்டால், அது நாக்கையே அறுத்துப் புண்ணாக்கும் அளவுக்குச் சொர சொரப்பு உடையது. அதனால் இப்பெயர் பெற்றது. செயல்-பண்பு.

நாம தாரி = திருமால் நாம தாரியாவார். திருமா லின் தெய்வப்பிறப்பாகிய கண்ணனுக்கு மூங்கில் குழல் (புல்லாங்குழல்) ஆயிற்று. புல்லாங்குழல் = புல் + ஆம் + குழல்-புல்மர வகையைச் சேர்ந்த மூங்கிலால் ஆன ஊது குழல். மூங்கில் குழலை எண்ணும் போதே நாமதாரியாகிய கண்ணன் நினைவும் வரும். எனவே, மூங்கில் நாமதாரி எனப்பட்டது. இது, குழல் செய்ய உதவும் மூங்கில் வகை யாகும். சார்பு.

நாய்க்கடி போக்கி = நாய்க் கடுகு எண்ணும் ஒரு வகைக் கடுகு நாய்க்கடி நஞ்சைப் போக்குமாம். பயன்.

நாய் வணங்கி: குப்பை மேனிக்குப் பூனை வணங்கி என்னும் பெயர் உண்டு. அதுபோல, நாயுருவிப் பூடுக்கு நாய் வணங்குமாம். அதாவது, நாய் அப்பூண்டில் விழுந்து புரளும் போலும்! இதனால், நாயுருவிப் பூடு, நாய் வணங்கி யாயிற்று. சார்பு. நாய் இதில் உராய்வதுண்டு என்னும் கருத்துப்பட வேலூர் டாக்டர் கண்ணப்பர் எழுதியுள்ளார்.

நிதி நாயகன்: இது வெட்டி வேரின் பெயராகும். வெட்டி வேரின் அடியில் உள்ள வேரை வெட்டிக் கழித்து நடுப்பகுதியை நட்டால் மீண்டும் முளைக்கும். வேரை வெட்டுவதால் மீண்டும் முளைப்பது இந்த இனமாதலின், இதற்கு வெட்டிவேர் எனும் பெயர் தரப்பட்டிருக்கலாம். 'வெட்டுவேர்' என்னும் பெயர் பிங்கல நிகண்டில் கூறப் பட்டுள்ளது. இனி, இதற்கு நிதிநாயகன் என்ற பெயர் வந்தவாற்றைக் காண்போம்:

வெட்டி என்னும் சொல்லுக்குக் காசு (பணம்) என்னும் ஒரு பொருள் உண்டு. பழங்காலத்திய ஒருவகை வரிக்கு 'வெட்டி' என்னும் பெயர் உண்டு. இந்த வரி, வெட்டி வரி, வெட்டி வேதினை, வெட்டிப் பாட்டம்-என்றெல்லாம் சொல்லப்படும். இப்பெயர்களைக் கல்வெட்டுகளினால் அறியலாம்.

"வெட்டிப்பாட்டமும்......எப்பேர்ப்பட்ட
இறைகளும் உட்பட".

என்பது ஒரு கல்வெட்டுப் பகுதி. பாட்டம், இறை என்பன வரி என்னும் பொருளன. அக்காலத்துக் காசு (நாணயம்) பொன்னாலும் வடிக்கப்பட்டிருந்தது என்பதை நினைவு கூரவேண்டும். மண்ணை வெட்டி உழுது பயிரிடுதலே முதல் தொழில் ஆதலின், வருவாய்க்கு வெட்டி என்னும் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது வெட்டுதல் தொழில் முதன்மை பெற்றிருந்தது. இப்போதுகூட, வாளா காலங்கழிப்பவரை நோக்கி, "இவர் ரொம்ப வெட்டறாரே! நீ வெட்டினது போதும்" என்று சொல்லப் படுவது காண்க. காடுவெட்டி நாடாக்கியதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

அக்காலத்தில் வேலை செய்தவர்க்குக் கொடுத்த கூலிப் பணமும் - சம்பளப் பணமும் வெட்டி என்று சொல்லப் பட்டிருக்க வேண்டும். இதற்குச் சான்று:- "அவன் வேலை வெட்டி ஒன்றும் இல்லாமல் சும்மா இருக்கிறான்" என்னும் உலக வழக்குத் தொடராகும். இத்தொடரிலுள்ள 'வெட்டி' என்பது ஊதியத்தைக் குறிக்கின்றதல்லவா? எனவே, வெட்டி என்பது நிதியை - செல்வத்தைக் குறித்ததால் வெட்டி வேருக்கு 'நிதிநாயகன்' என்னும் பெயர் சொல் விளையாட்டாக வைக்கப்பட்டுள்ளது.

அவ்வளவு சிறப்புடைய தன்றாயினும், ஈண்டு வேறொரு கருத்தும் விளம்பலாம். வெட்டி வேரால் செய்யப்பட்ட விசிறியும் மறைப்புத் தட்டியும், மிக்க மணமும் குளிர்ச்சியும் தரும். இத்தகு விசிறியும், தட்டியும், நிதிக்கு நாயகராக உள்ள செல்வர்களின் வீட்டிலேதான் பெரும்பாலும் காணலாம். எனவே, சார்பு பற்றி, வெட்டி வேருக்கு 'நிதி நாயகன்' என்னும் பெயர் வந்ததாகவும் கூறலாமா!

நின்றால் சிணுங்கி: தொட்டால் சிணுங்கியினும் இது மென்மையானது போலும். ஆள் பக்கத்தில் நின்றாலேயே இது சிணுங்கும் போலும் தொட்டால் சிணுங்கி இலை கீழ் நோக்கி மடியும்; நின்றால் சிணுங்கியின் இலை மேல் நோக்கி நின்ற நிலையில் மடியும். வடிவம்.

நின்றால் மேனி: இது ஒரு பூண்டு. இதன் அருகில் மக்கள் நிற்க, அவர்தம் நிழல் இப்பூண்டின்மேல் பட்டால், இது பொன்னிற மேனியாக மாறித் தோன்றுமாம். வடிவம்.

நீர்க்குடத்தி: தண்ணீர் விட்டான் கொடிக்கு இப் பெயராம். இக்கொடி தண்ணீர் ஈரப்பசையுள்ளதாதலின் இப்பெயர் பெற்றது. இதற்கு 'நீர் வாளி' 'நாராயணி' முதலிய பெயர்களும் உண்டு. நாரம் = நீர். நீர் உடையது- நாரம் உடையது நாராயணி. வடிவம்.

நீறணிந்தோன்: திருநீறணிந்தவன் சிவன் ஆதலின் சிவ துளசிக்கு இப்பெயர் சொல் விளையாட்டாகத் தரப் பட்டுள்ளது.

நெடியோன்: நெடியோன்=திருமால். இ.சா:

**சிலப்பதிகாரம்:**

"செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்" (11-51)

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" (8-1)

நெடியோன் குன்றம் = திருப்பதி மலை; தொடியோள் பௌவம்=கன்னியாகுமரி). மகாபலியை அடக்கத் திருமால் மண்ணுக்கும் விண்ணுக்குமாக நெடிய உருவங்கொண்டதனால் நெடியோன் எனப்பட்டார். அவருக்கு உரிய துளசி சார்பினால் நெடியோன் எனப்பட்டது.

நெய்சிக்குப் போக்கி = எண்ணெய் சிக்கைப் போக்குவது சிகைக்காய். பயன்.

நெருப்பு மரம்: இது தில்லை மரம். இது வெப்பம் தருவது. நெருப்பு வண்ணனாகிய சிவனுக்கு உரியது. எனவே, தில்லை, நெருப்பு மரம் எனப்பட்டது. பண்பு, சார்பு.

நெற்றிக் கண்ணன் = நெற்றிக் கண் உடைய சிவன். இது சிவனார் வேம்பைச் சொல் விளையாட்டாகக் குறிக்கிறது.

நோவு போக்கி: நேர் வாளக் கொட்டையைக் கொண்டு பேதி மருந்து செய்வது நாட்டு மருத்துவ முறை. மருத்துவர்கள் நோயாளிக்கு முதலில் பேதி மருந்து கொடுப்பது வழக்கம். இந்த நேர்வாளப் பேதி மருந்து மலத்தை வெளிப்படுத்தி வயிற்றையும் அதன் வாயிலாக

உடம்பையும் தூய்மை செய்யும். பெரும்பாலான நோய் கட்கு மலச் சிக்கல் காரணம் என்பது நாட்டு மருத்துவ முறை. எனவே, நேர் வாளம் பலவகை நோவுகளையும் போக்குவதால் 'நோவு போக்கி' எனப்பட்டது. பயன். பாடல் சான்று:-

தேரன் வெண்பா – வாளம்.

" எந்த வியாதி இனங்களையும் சாடிமல
பந்த வினையைப் பரிபரித்து - வந்த வெப்பை
பாபியென மாட்டுதலால் பாடாண வெம்மையினும்
சோபிமகா சோபியென்று சொல்" -

அகத்தியர் குணபாடம்:

" ஓதில் உதரத் துறுமலம் பன்னோய் விலகும்;
பேதி மருந்திற் பெரிதாகும் - வாதமறும்;
கூர்வாளை ஒத்தவிழிக் கொம்பனையே! பண்டிதர் சொல்
நேர்வாளக் கொட்டைதனை நீ" –

மேலுள்ள பாடல்களில் உள்ள 'எந்த வியாதி இனங்களை யும் சாடி', "பன்னோய் (பலநோய்) விலகும்" - என்னும் பகுதிகளால், நேர்வாளம் நோவு போக்கி என்னும் பெய ருக்கு ஏற்றது என்பது புலனாகும்.

பச்சைபோல் வெள்ளை யாவான்: தாளிப் பனை முதலில் பச்சையாக இருந்து பிறகு வெள்ளையாக மாறுவ தால் இப்பெயர் பெற்றது. வடிவம்.

பஞ்சம் தாங்கி: கேழ்வரகு விலை மலிவு. பஞ்சம் இல்லாக் காலத்திலே கூட ஏழைகள் கேழ்வரகு உணவு கொள்வர். பஞ்ச காலத்திலோ சொல்லவே வேண்டிய தில்லை. வேறு தானியம் கிடைக்காதவர் யாவரும்

கேழ்வரகு உணவு கொள்வர். அதனால் இது 'பஞ்சம் தாங்கி' என்னும் பெயர் பெற்றது. பயன்.

பஞ்ச பாண்டவர் முல்லை: பஞ்ச பாண்டவர் ஐவர். தொகுதியாக உள்ள ஐந்து பொருளைக் குறிக்கக் குழூஉக் குறியாக - குறிப்பாகப் பஞ்சபாண்டவர் எனல் உண்டு. இதன்படி, ஐந்து இதழ்களை உடைய முல்லை - ஐந்திதழ் முல்லை, 'பஞ்ச பாண்டவர் முல்லை' எனப்பட்டது. வடிவம்.

பஞ்சாக்கினி: ஐந்து வகை நெருப்புகள் இருப்பதாகக் கூறுவர். சுருக்கமாகப் பஞ்சாக்கினி என்பர். நெருப்பு எரிக்கும் தன்மையது. சீரகம் வயிற்றில் உள்ள கசடுகளை எரித்துப் பசித் தீயைப் பதிலுக்கு வளர்க்கும். "எவ்வளவு சாப்பிட்டாலும் எரித்து விடுகிறதே" என்று சொல்வது உலக வழக்கு. இதனால் சீரகத்துக்குப் "போசனக் குடாரி" என்னும் பெயரும் உண்டு. போசனக் குடாரி = உணவு கொள்ளச் செய்யும் படைக் கருவி - கோடாரி. பாடல் சான்று:-

தேரன் வெண்பா:

"ராசனையு மீ வென்று நண்பைப் பலப்படுத்தி
போசன குடாரி செயும் போர்" -

"போசன குடாரியைப் புசிக்கில் நோயெல்லாம் அறும்;
காச மிரா தக்காரத்தி லுண்டிட".

தேரையர் குணபாடம்:

"ஆசன குடாரியெனும் அந்தக் கிரகணியும்
போசன குடாரி யுண்ணப் போம்" -

பத்தியம் முரிச்சான்: நாட்டு மருந்து உண்பவர் அகத்திக் கீரை உண்ணார், அது பத்தியத்தைப் பயனின்றி

முரித்து விடுமாம். வேறு மருந்து கொள்ளவேண்டின், அகத்திக் கீரை உண்டு பத்தியத்தை முரித்துக் கொண்டு பின்பே வேறு மருந்துண்பர். எனவே, அகத்தி 'பத்திய முரிச்சான்' - பயன்.

பயித்திய நாசனி: மலைமாங்காய் பைத்தியத்தைப் போக்குமாம்; அதனால் மலைமா இப்பெயர் பெற்றது. பயன்.

பரமானுகூலி: பரம + அனுகூலி = பேருதவி புரிவது அரச மரம். இது தெய்வத் தன்மை உடையதாக மக்கள் மதிப்பதால் கோயில் அருகில் வளர்ப்பதுண்டு. அரச மரத்தடியில் பிள்ளையாரை அமர்த்துவது முண்டு. பிள்ளைப் பேறு இல்லாதவர்கள், பிள்ளையாரையும் சேர்த்து அரச மரத்தைச் சுற்றி வந்து வணங்குவர். இது பற்றிப் பொருட் பண்பு நூலில் உள்ள பகுதிகள்:-

"அரச இலைக் கொழுந்து உடல் வன்மையைப் பெருக்கும்; சுரத்தையும் முக்குற்றத்தையும் போக்கும். அன்றியும், சூலகத் துண்டாம் கோளாறுகளைப் போக்கிச் சூல் (கருப்பம்) அமையச் செய்யும்".

"அரச மரத்தில் வளரும் புல்லுருவியின் இலையை அரைத்துப் பிள்ளைப் பேறு இல்லாப் பெண்கட்கு எலுமிச்சம் பழம் அளவு மூன்று நாள் சூதகத்திற்கு முன்பு கொடுத்துவரச் சூல் அமையும்"

'அரச மரத்தைச் சுற்றி அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாள்' என்பது ஒரு பழமொழி. இது, அரச மரத்தைச் சுற்றினால் அடிவயிற்றில் கருவின்கனம் தெரியும் என்பதைக் குறிப்பாய் உணர்த்துகிறது.

மற்றும், அரசமரத் தடியில் ஊர் அவை (கிராம சபை) கூடுவதுண்டு. அந்த அளவுக்கு நிழல்தரும். இப்படியாகப்

பல வகையிலும் பரம அனுகூலியாக இருப்பதால் அரசு பரமானுகூலி எனப்பட்டது. பயன்.

பல்கேசரம்=பூவில், மகரந்தப் பொடியுள்ள மகரந்தப் பையிருக்கும் ஆண்பாகம் கேசரம் எனப்படும். தென்னையில் பல கேசரங்கள் இருப்பதால், பல் கேசரம் எனப்பட்டது. வடிவம்.

பாணி விருக்கம் பாணி = கை; விருக்கம் = மரம். தென்னையின் மட்டைகளுள் கீழ்நோக்கித் தொங்குபவை தொங்கும் கைகள்போலவும், பக்கவாட்டத்தில் நீண்டிருப் பவை நீட்டிய கைகள் போலவும், மேல் நோக்கியவை உயரே தூக்கிய கைகள் போலவும் இருப்பதால், தென்னை பாணி விருக்கம் எனப்பட்டது. வடிவம்.

மற்றும் ஒரு பெயர்க் காரணம்=பாணி = நீர். இது வடநாட்டுச் சொல்தான். தென்னையில் இளநீர் இருப்ப தாலும், முற்றிய தேங்காயின் இனிய நீரும் பருகப் பயன் படுவதாலும், இம்மரம் 'பாணி விருக்கம்' எனப்பட்டது எனலாம். பயன்.

பாண்டு நாசனி=பாண்டு (சோகை) நோயைப் போக் குவது சிறுவாலுளுவை. பயன்.

பாண்டு போசனம்: பாண்டு (சோவை-சோகை) நோய் உள்ளவர் தினையரிசிக் கஞ்சி குடிக்கின் சோபை (பாண்டு) தொடர்பான நோய்கள் விலகும். அ.கு.பா.பாடல்:

"தினைமா கபவாதம் தீர்க்குமதன் சாதம்
புனைபித்த மாயினுநற் போகம் — தனைக்கொடுத்து
வாதம் போக்கும்; கஞ்சி மாசோபை தோடமிதன்
பேதமெலாம் போக்குமெனப் பேசு"

எனவே, தினை பாண்டு போசனம் எனப்பட்டது. பயன்.

பாப்பாரக் கனி: பார்ப்பனர்கள் புடலங்காயைக் கறி சமைத்து உண்பர். மற்றவரினும் பார்ப்பனர் இதனை மிகுதியாக உண்பதால் பாப்பாரக் கனி எனப்பட்டது. சடங்கு செய்யும் ஐயருக்கு, அரிசி பருப்புடன், புடலங்காய் தருவது ஈண்டு நினைவு கூரற்பாலது. சார்பு.

பாலகனைக் காத்தான்: மணித் தக்காளி, மார்பில் கோழை கட்டுதல், இருமல் முதலிய நோய்களைப் போக்கி உயிர்நீட்டிக்கச் செய்யும். இதற்குப் 'பாலகனைக் காத்தான்' என்னும் பெயர் கொடுத்திருப்பதிலிருந்து, குழந்தைகட்குச் சளி, இருமல் வராமல் காக்கும் என அறியலாம். பயன்.

பாலடி: அடியில் பால் உடையதால் திருகு கள்ளி பாலடி எனப்பட்டது. உடற்கூறு.

பாவநாசனி: வன்னிமரத்திற்குத் 'தீத்தெய்வம்' என்னும் ஒரு பெயர் இருப்பதாக முன்னர்க் கண்டோம். வன்னி சிவனுக்கு உரியதாதலின், மக்கள் வன்னிமரத்தைச் சுற்றி வந்து வணங்கினாலும், வன்னி இலையைக்கொண்டுசிவனை வழிபடினும் பாவம் நீங்குமாம்; ஆதலின்வன்னி பாவநாசனி எனப்பட்டது. பயன்.

பிசாசு போக்கி: காஞ்சிர (எட்டி) மரமும் வேப்ப மரம்போல் பிசாசைப் போக்கும் போலும்; அதனால் பிசாசு போக்கியாயிற்று. சார்பு.

பித்தசமனாக்கி = சிற்றீஞ்சங்காய் பித்தத்தை மிகுக்கா மலும் குறைக்காமலும் சமநிலையில் வைத்திருக்குமாதலின் இப்பெயர் பெற்றது. பயன்.

பித்த சிலேட்டும அக்கினி = பித்தம்தெரியும். சிலேட்டுமம் என்பது கோழை - சளி - இருமல் தொடர்பானது. ஆடா தோடை பித்த சிலேட்டுமத்தை அக்கினிபோல் சுட்டுப் போக்குமாதலின் இப்பெயர் பெற்றது. பயன். ஆடு

தொடா இலை என்பது ஆடாதோடை எனப்படுகிறது. வேலியாக வைத்துள்ள பெரிய இலைகளையுடைய ஆடு தொடா இலைக்கு இந்த மருத்துவப் பயன் கிடையாது. சிறிய இலையுடைய ஆடுதொடா இலைதான் மருத்துவப் பயன் தருவது. (சித்த மருத்துவராகிய என் தந்தையார், சிறிய ஆடுதொடா இலைச் செடியை எங்கள் தோட்டத்தில் வைத்து வளர்த்து வந்தார்)

பித்த சுர நாசனி = கோரைக்கிழங்கும், முசுமுசுக்கையும் பித்தக்காய்ச்சலைப் போக்கும். பயன்.

பித்தசுர சமனி = பெருங்காஞ்சொறி செடி பித்தக் காய்ச்சலைக் குணமாக்கும். பயன்.

பித்த நாசம் = பித்தம் போக்கும் முள்வெள்ளரி. பயன்.

பித்த நாசனி - பித்த பத்திரம் = பித்தம் போக்கும் சீரகத்திற்கு இப்பெயர்கள் உண்டு. பயன்.

பித்தமுறி மாதர் = பித்தத்தை முறிக்கும் எலுமிச்சம் பழம் இது. உள்ளுக்குக் கொடுப்பதல்லாமல், பித்த - பைத்தியக்காரரின் தலையில் எலுமிச்சம் பழம் தேய்ப்பது நினைவுகூரத் தக்கது. பயன்.

பிராமண இஷ்டம் = கொட்டைப் பாக்குச் சீவலைப் பிராமணர்கள் இஷ்டப்பட்டு (விரும்பி) மிகுதியாகப் பயன் படுத்துவர் போலும்! இது பாக்குமரம். சார்பு.

பாஞ்சாலை = இது வாதநாராயணன் மரம். பாஞ்சாலம் என்பது ஒரு நாட்டைக் குறிப்பதன்றி, 'அழகிய தோற்றம்' என்னும் பொருளையும் தரும். திரௌபதியைக் குறிக்கும் பாஞ்சாலி என்பது, அழகிய தோற்றமுடையவள், ஓவியப் பாவை, மரப்பாவை என்னும் பொருள்களையும் தரும். வாத நாராயண மரம் அழகிய தோற்றம் உடையதாதலின்

'பாஞ்சாலை' எனப்பட்டது. இதன் மலர்கள் வெண்மை கலந்த மஞ்சள் நிறத்துடன் காண்பதற்கு அழகாக இருக்கும். மலர்கள் வாடினால் கிச்சிலி நிறம்போல் தோன்றும். எனவே, அழகிய மலர்த்தோற்றம் உடைய இம்மரத்திற்கு இப்பெயர் தகும். வடிவம்.

பிரியை: ஏலக்காய் பலவகையிலும் பிரியமாய்ப் பயன் படுத்தப்படுவதால் பிரியை எனப்பட்டது. சார்பு.

புணைவி: ஆற்றில் விடும் பரிசல் (சிறு ஓடம்) கட்டுவ தற்கு மூங்கில் உதவும். புணை என்பது பரிசலை - தெப்பத்தைக் குறிக்கும். புணையாகிய தெப்பம் செய்ய உதவுதலின் மூங்கில் புணைவி எனப்பட்டது. பயன்.

புண்ணியத் தாரு: இது முல்லைக்குத் தரப்பட்டது. முல்லை என்பதற்கு 'ஈகர மூலி' என்னும் ஒரு பொருள் வைத்திய மலை அகராதியில் தரப்பட்டுள்ளது. முல்லைக்குக் கற்பு என்னும் பெயர் உண்டு. கற்புடை மகளிர் மனையில் முல்லையை வளர்ப்பதும் சூடுவதும் உண்டு. எனவே, முல்லைக்குப் 'புண்ணியத் தாரு' என்னும் பெயர் பொருந்தும். தாரு என்பது மரஇனம். கடவுள், கற்பு ஆகிய தொடர்புடைமையின் புண்ணிய முடையதாயிற்று. சார்பு.

புண்ணியம்: புண்ணியம் என்பதற்குத் தூய்மை (Purity) என்னும் பொருள் உண்டு. புளிநரளை என்னும் கொடி, பொதுவாக உடம்பை, சிறப்பாக ஆண்குறியைத் தூய்மை செய்யுமாம்; செம்பைத் தெளிவாகத் தூய்மை (சுத்தி) செய்து பொன்போலாக்குமாம். அ.கு.பா. பாடல்:

> " புளிநரளை யின்கிழங்கோ பொன்போலச் செம்பைத்
> தெளிவாகச் சுத்தியது செய்யும் — வெளியான
> மூல முளையறுக்கும்; முந்துசுவைக் கேதுவுமாம்;
> கோல மடமயிலே கூறு"

ஆண்குறியைத் தூய்மை செய்வது பற்றித் தேரன்நூலில் கூறப்பட்டுள்ளது. எனவே, புளி நரளை புண்ணியம் எனப் பட்டது. பயன்.

புத்தகம்: புத்தகம் என்பதைப் புது + அகம் எனப் பிரித்துப் புது வீடு எனப் பொருள்கொள்ள வேண்டும். இக் காலத்திலும் கூரை வீடுகள் மிகுதி. முற்காலத்தில் கூரை வீடுகள் மிகப் பல. தென்னங் கீற்றால் வேயப்பட்ட கூரை மேல், வரகு வைக்கோலைக் கட்டு கட்டாகக் கட்டி வேய்வர். இதனால், மழைநீர் ஒழுகாமை, குளிர்ச்சி, அழகு ஆகிய பயன்கள் உண்டு. எனவே, புத்தகம் (புதுஅகம்) கட்ட உதவும் வரகு புத்தகம் எனப்பட்டது. பயன்.

புலி மரம்: வேங்கை என்பது, வேங்கை மரம், புலி என்னும் பொருள்கள் உடையது. எனவே, சொல் விளை யாட்டாக, வேங்கை மரம், புலி மரம் எனப்பட்டது. மற்றும், வேங்கை மலர்கள் உதிர்ந்திருக்கும் கல்முட்டுகள், காண்பதற்குப் புலி படுத்திருப்பது போல் தோன்றும் என இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இக் கருத்தமைந்த குறுந்தொகைப் பாடல் வருமாறு:

" கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை" (47)

(வீ=பூ, இரும்புலிக்குருளை = பெரிய புலிக்குட்டி).

மற்றுமொரு கருத்து: வேங்கை மலரைப் பறிக்கச் சென்றவர்கள், பூத்திருக்கும் வேங்கை மரத்தின் தோற்றத் தையும், கீழே கல் முட்டுமேல் கொட்டிக்கிடக்கும் வேங்கை மலரின் அமைப்பையும் பார்த்து அஞ்சிப் 'புலி-புலி' என்று பெருமுழக்கம் (பூசல்) செய்தனராம். இதனை அகநா னூற்றில் உள்ள

"ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழிப்
புலிபுலி என்னும் பூசல் தோன்ற" – (48-6, 7)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். எனவே, வேங்கை மரம், புலி மரம் எனப்பட்டது.

புழுக்கை = ஈச்சம் பழம் இது. எலி முதலியவற்றின் சிறு புழுக்கைபோல் தோன்றுவதால் இப்பெயர்த்து. வடிவம்.

பொய் சொன்னான்: சிவனது முடியைப் பார்க்க முடியாத நான்முகன் சார்பாக இருந்து, அவன் சிவன் முடியைப் பார்த்ததாகத் தாழை திருமாலிடம் பொய்ச் சான்று கூறியதான ஒருவகைப் புராண வரலாறு பலரும் அறிந்திருக்கலாம். அதனால், தாழை, பொய் சொன்னான் என்னும் பெயர் பெற்றது. சார்பு.

பூப்பனை = காய்க்கும் பனை பெண்பனை; பூ உடைய பனை ஆண்பனை. எனவே, ஆண்பனை பூப்பனையாயிற்று. வடிவம்.

பெண் மூங்கில்: குழாயுள்ள மூங்கில் — குழாய் மூங்கில் இப்பெயர் தரப்பட்டுள்ளது. வடிவம்.

பேய்த்துயர் போக்கி = காஞ்சிரம் என்னும் எட்டிமரத் திற்குப் பிசாசு போக்கி என்னும் பெயர் முன்னர்க் கூறப்பட்டுள்ளது. வேப்பமரம் போல், பேயால் துயர் வராமல் காப்பதால், எட்டி பேய்த் துயர்போக்கி எனப் பட்டது. பயன்.

பைத்தியங்காரி = பித்தத்தை உண்டாக்குவது புகையிலை. பல கேடுகளுள் பித்தமும் ஒன்றாகும். பாடல். அ.கு.பா:

"மருந்தை முறித்துவிடும்; வாய்வறளச் செய்யும்;
திருந்து பலவீனம் சேர்க்கும் — பொருந்து பித்தம்
உண்டாக்கும்; விந்தழிக்கும்; ஓது புகையிலையைக்
கண்டார்க்கும் ஆகாது காண்'

புகையிலையைக் கண்டாலேயே கெடுதியாம். புகைத்தால் - பலவகையில் பயன்படுத்தினால் பெருங்கேடுகள் சூழும். எனவே, புகையிலை பைத்தியங்காரி எனப்பட்டது. பயன். பைத்தியம்காரி = பைத்தியம் உண்டாக்குவது.

போகா நிழலி = நிழல் மரத்திலின்றும் சாயாமல் — வெளியே நிழல் விழாமல் இருப்பதால், சாயாமரம் போகா நிழலி எனப்பட்டது. உடற்கூறு.

போக்கு முலைச்சி = இது சிவகரந்தை. இஃது ஒரு குத்துச் செடியாகும். குத்து முலைபோல் இருப்பதால் இப்பெயர் வந்ததோ! வடிவம். முலைச்சி என்றும் பெயர் உண்டு.

பேசுங் கனி மாதர் = இது எலுமிச்சம் பழம். மந்திர வாதிகள் எலுமிச்சம் பழத்தைப் பேசவைக்க முடியும் என்று சொன்னதை யான் கேட்டிருக்கிறேன். இதை நம்ப முடியாது. மிகவும் அழகாக இருக்கும் அஃறிணைப் பொருளை, "ஏன் என்றால் ஏன் என்று கேட்கும் — அப்படியே பேசும்" என்று புனைந்துரையாகச் சிறப்பித்துச் சொல்வது மக்கள் வழக்கம். எலுமிச்சம் பழம் மிக்க அழகும் கவர்ச்சியும் உடையதாதலின், பேசுங்கனிமாதர் எனப் புனைந்துரைக்கப்பட்டது போலும்! சார்பு.

பேயோடாடி = பேயோடு நடனம் ஆடினவர் சிவன். அதனால் அவர்க்கு உரித்தான 'பேயோடாடி' என்னும் பெயர் சொல்விளையாட்டாகச் சிவகரந்தையைக் குறிக்கும்.

பைங்கதை: பசிய தடி (கதாயுதம்). பச்சை மூங்கில் இப்பெயர் பெற்றது. வடிவம்.

பொன்னம்பலர்: சிவன் சிதம்பரத்தில் (தில்லையில்) உள்ள பொன்னம்பலத்தில் நடனமாடுவதால், தில்லைமரம் பொன்னம்பலம் எனப்பட்டது. சார்பு.

மகா அமிழ்தம்: சுக்கின் சிறப்பையும் இன்றியமையாமையையும் 'கர பத்திரம்' என்னும் தலைப்பில் கண்டோம். பெரிய அமிழ்தமாகப் பயன்படும் சுக்குக்கு இப்பெயரும் அளிக்கப்பட்டுள்ளது. பயன்.

மகா அவுடத நாசனி: அவுடதம் = மருந்து; மகா அவுடதம் = மிக உயர்ந்த மருந்து. பூசனிக்காய் உண்டால் இதற்கு முன் உண்ட உயர்ந்த சில மருந்துகளின் பயனை, முறித்து (நாசஞ் செய்து) விடுமாம். அதனால் பூசனி இப் பெயர்த்து. பயன்.

மகோந்நதம்: இது பனைமரம், மகா உந்நதம் = மிக்க உயர்வுடையது. பனைமரம் மக்கள் முயற்சி மிகுதியாகத் தேவைப்படாமல் எளிதில் தானே வளரக்கூடியது. இம்மரத்தின் எல்லாவகை உறுப்புகளும் பலவகையில் பயன் படுவதாலும் உயரத்தாலும் இது மகோந்நதம் எனப் பட்டது. பயன், வடிவம்.

மதப்புட்பி = அத்தி என்பதற்கு யானை என்னும் பொருள் உண்டு. யானைக்கு மதம் உண்டு. எனவே, அத்தி மரம் சொல்விளையாட்டாக மதப் புட்பி எனப் பட்டது. அத்திக்கும் பூ உண்டு. அத்திப்பூக்களின் மூடிய தொகுப்பே அத்திக்காய் என்பது.

மகா பித்தம்: வில்வம் மிக்க பித்தம் தரும். பயன்.

மங்கலாகரம்: மங்கல + ஆகரம் = மங்கலாகரம். ஆகரம் = உறைவிடம். மங்கலம் பொருந்தியது. மங்கலாகரம்,

நீண்ட புடல் காண்பதற்கு மங்கலமாய்த் தோன்றுவதால் இப்பெயர் பெற்றது. வடிவம்.

மங்கலி: சீதேவி மங்கலம் உடையவள். எனவே, சீதேவி செங்கழுநீர் என்னுங்கொடி - கொடிப்பூ சொல் விளையாட்டாக மங்கலி எனப்பட்டன.

மச்சங்கொல்லி: புகையிலைக்குப் 'பைத்தியங்காரி' எனும் பெயர் உள்ளமை முன்னர்க் கூறப்பட்டுள்ளது. மச்சம் என்பது மூளை; இது உடலில் உள்ள ஏழு தாதுக்களுள் ஒன்று. புகையிலை பித்தம் உண்டாக்கி மூளையைக் கெடுக்குமாதலால், மச்சங்கொல்லி எனப்பட்டது. பயன்.

மடவை மயக்கி: பெண்டிரை மயங்கச் செய்யும் ஒரு வகைக் கொடியாம் இது. செயல்.

மடியுண்டடிப்பான்: பறங்கிப் பூசனிக்காயின் மேல் பகுதி, மடிப்பு மடிப்பாயிருக்கும். இதனால் மடியுண்டு அடிப்பான் எனும் பெயர் வந்திருக்கலாம். மேலே போட்டால் உடம்பு அடியுண்டதுபோல் வலிக்குமாதலின் அடிப்பான் என்றனர் போலும்! வடிவம்.

மணக் கோலம்: திருமண அரங்கில் வாழைமரம் கட்டியிருக்குமாதலால், வாழை இப்பெயர் பெற்றது. சார்பு.

மணிவித்தையுள்ளோன்: தூதுவளையின் காய் – பழம் மணிபோல் உருண்டையாக – அழகாக இருக்குமாதலின் தூதுவளை இப்பெயர்த்தாயிற்று. வடிவம். வித்து = விதையுள்ள கனி.

மதகுஞ்சரம்: மதமுள்ள யானை. அத்தி = யானை; எனவே, இது சொல்விளையாட்டாக அத்திமரத்தைக் குறிக்கிறது.

மருந்திடு முறியப்பண்ணி: பூசனி மருந்தின் பயனை முறியப்பண்ணிவிடும். மகா அவுடத நாசனி காண்க. பயன்.

மலத்தைத் தள்ளிச்சி: கற்றாழை மலச் சிக்கலைப் போக்கும் – மலத்தை வெளித் தள்ளும். பயன்.

மந்த வைரி: இது சுக்கு. மந்தம் = வயிறு பசியாமை. வைரி = பகைவன். சுக்கு மந்தத்தின் பகைவனாம். பாடல்கள்:

அ.கு.பா.

"சூலை மந்தம் நெஞ்செரிப்பு தோடம் ஏப்பம் அழலை
மூலம் இரைப்பிருமல் மூக்குநீர் – வாலகப
தோடம் அதிசாரம் தொடர்வாத குன்ம நீர்த்
தோடம் ஆமம் போக்கும் சுக்கு" –

தேரன் வெண்பா:

"ஓடுமே மந்தம் ஒளியாமல் நாடகன்று
காடுதனில் போகிவிடுங் காண்" –

சுக்கு, மந்தம் – நெஞ்செரிப்பு – புளியேப்பம் முதலியன போக்கிப் பசிக்கச் செய்யும் என அ.கு.பா. கூறுகிறது. தேரன் வெண்பாவோ, சுக்கினால், மந்தம் நாட்டை விட்டுக் காட்டுக்கு ஓடிவிடும் என உயிருள்ளதுபோல் உருவகித்துச் சொல்லியுள்ளது. எனவே, சுக்கு மந்த வைரி தானே! பயன்.

மலையரசன்: மலைப் பகுதியில் மிளகு விளைவதால் மலையரசன் எனப்பட்டது. இடம்.

மலையாளம்: மலையாளத்தில் மிளகு நிரம்ப விளைவதால் 'மலையாளம்' எனப்பட்டது. இடம்.

மலை முனி மரம்: பொதிய மலையில் இருக்கும் முனி அகத்தியர். எனவே, அகத்திமரம், சொல் விளையாட்டாக மலைமுனி மரம் எனப்பட்டது.

மன்று = பூவரசு. மன்று (மன்றம்) என்பது, அறம் கூறும் நீதிமன்றம். இது பூவரச மரத்தடியில் ஊர்த் தலைவரால் நடத்தப்படலாம். அதனால் பூவரசு மன்று ஆயிற்று. மற்றும், பூ அரசு (பூமியின் அரசன்) நடத்தும் நீதிமன்றம் என்னும் சொல்விளையாட்டுப் பொருளிலும் இப்பெயர் அமைந்திருக்கலாம்.

மன்னன் மரம்: அரச மரம். சொல்விளையாட்டு.

மாகாளி: இப்பெயர் சொல் விளையாட்டாகப் 'பெரு நன்னாரி' என்பதற்குச் சூட்டப்பட்டுள்ளது. பெரு நன்னாரி என்பதை, பெரு+நல்+நாரி எனப் பிரிக்கலாம். காளிக்கு 'நாரி' என்னும் பெயர் உண்டு. மா=பெரிய. எனவே, பெரு நன்னாரி மாகாளி எனப்பட்டது.

மாதேசி: தேசு = அழகு, ஒளி. எலுமிச்சம்பழம் மிக்க அழகொளி உடைமையால் 'மாதேசி' எனப்பட்டது. வடிவம்.

மலைத் திருக்கல் = மலையில் உள்ள மரங்களில் மிளகு முறுக்கிக் கொண்டு ஏறி வளரும். சார்பு.

மலையில் வைரவன் = மலைப் பகுதியில் வைரவக் கடவுள் போல் இருக்கும் பாக்குமரம் இது. சார்பு.

மலைவெட்டு: மலையிலிருந்து சந்தனம் வெட்டிக் கொணரப்படுவதால் இப்பெயர்த்து. வெட்டு என்பதற்குப் பணம்-நாணயம் என்ற பொருளும் உண்டு. இ. சா:

" தன்னுடைய வெட்டென்றும்" –

(பணவிடு தூது – 143)

சந்தன மரம் பணம் கொடுக்கும் பணப்பயிராகும். அதனா லும் 'மலை வெட்டு' எனப்பட்டிருக்கலாம். சார்பு.

மழு வேந்தும் கோபன் = கையில் மழுப் படையேந்தி யுள்ள கோபக்காரன் சிவன். எனவே, இப்பெயர் சொல் விளையாட்டாகச் சிவனார் வேம்பைக் குறிக்கிறது.

மறுமொழி பேசாதான்: சாயாமரம், நிழல் வெளியில் விழாமல் அடக்கியிருப்பதால், மறுமொழி பேசாத அமைதியாளன் போல் உள்ளது. பண்பு.

மனோசிலையை மெழுகாக்கி: மனோசிலை என்னும் ஒருவகைப் பாடாணத்தை, பருத்தி, மெழுகாக்குமாம். பயன்.

மா சுகி = சுகி = சுகத்துக்கு உரியது. பெரிய சுகம் (சுவை) தருவது மிளகாய். எனவே இது மாசுகி எனப் பட்டது. ஒரு சிலர்க்கு உறைப்பு இருந்தாலே உணவு சுவை யாயிருக்கும். பயன். இட்டிலிக்குத் தொட்டுக் கொள்ள, விலையுயர்ந்த பொருள் எது இருப்பினும் அதை விரும்பா மல் மிளகாய்ப் பொடி கேட்பவர் பலர் உளர்; உறைப்பு இல்லையெனில் 'உப்பு சப்பு இல்லை' என்பர்.

மாதர் அழகி = பெருந்துளசி அழகிய மாதர்போல் இருப்பதால் இப்பெயர்த்து. வடிவம். மாதர் வளர்ப்பது.

மாதர் காய்: இது தேங்காய். பெயர்க் காரணம் தெளி வாகப் புரியவில்லைதான். ஆயினும், மாதரின் முலை போன்ற அழகிய உருவ முடைத்தாதலின் தேங்காய் மாதர் காய் எனப்பட்டது என்று கூறலாமல்லவா? வடிவம்.

மாதவன் நிறம்: மாதவன் = திருமால் = அவரது நிலம் கறுப்பு. சடைச்சி என்னும் ஒரு பூடு அந்நிறத்ததாதலின் பண்பாகு பெயராக மாதவன் நிறம் எனப்பட்டது. நிறம்.

மாதோஷம் நீக்கி = புளியாரைக் கீரை, பலவகை உடற் குற்றங்களைப் போக்கும். பயன்.

மாமறையோன்: சிவன் மறையை அருளியதால் மாமறையோன் எனப்பட்டார். ஈசுரன் = சிவன். எனவே, ஈசுரமூலி என்னும் கொடி, சொல் விளையாட்டாக மாமறை யோன் எனப்பட்டது.

மாமிச பலா = தற் பூசினி என்னும் ஒருவகைப் பூசினிப் பழம், பார்ப்பதற்குப் பலாப் பழம்போல் இருக் கும். பலாப்பழத்துள் நார், சக்கை, கொட்டை, சுளை, கோது ஆகியவை இருக்கும். பூசினிப்பழத்துக்குள் இருப்பது முழுதும் மாமிசமாகிய தசைப் பகுதியே. அதனால் இது மாமிச பலா எனப்பட்டது போலும்! வடிவம்.

மாருசி = மிக்க சுவை (ருசி) தருவது மிளகு. பயன்.

மாருதத்தைப் போக்கி: புனம் புளி என்னும் வகைப் புளி, வாயுவைப் போக்கும். மாருதம் = காற்று = வாயுவு. பயன்.

மால்தாயம்: கரு நெய்தல், நிறத்தால் திருமாலின் தாயம் (சார்பு) உடைத்தாதலின் மால்தாயம் எனப் பட்டது. நிறம்.

மானேந்திமூலி: கையில் மான் ஏந்திக்கொண்டிருப்பவர் ஈசுரனாகிய சிவன். எனவே, சொல் விளையாட்டாக ஈசுர மூலிக்கொடி இப்பெயர்த் தாயிற்று.

மிருது புட்பி = மென்மையான பூக்களை உடைமை யால் ஒதிய மரம் இப்பெயர்த் தாயிற்று. வடிவம்.

முக தானியம்: மொச்சைக் கொட்டையில் முகம் போன்ற ஓர் உறுப்பு முன்னால் இருப்பதால், மொச்சை முக தானியம் என்னும் பெயர்த்து. வடிவம்.

முகப் பிரியம்: நாரத்தைப் பழம் மோந்து பார்ப்ப தற்குப் பிரியமாய் இருப்பதால் இப்பெயர்த்து. வடிவம். முகத்தல் = மோத்தல்

முக்கண் பிரான்=முக்கண் உடையவன் சிவன். சொல் விளையாட்டாகச் சிவதுளசி இப்பெயர்த்து.

முக்கண் — முக்கண் கனி — முக்கண்ணன் — முக் கண்ணி: — இப்பெயர்கள் மூன்று கண்களை உடைய தேங்காய்க்கு உரியனவாம். வடிவம்.

முசல்மூலி: அறுகம் புல்லை முயல் விரும்பித் தின்ப தால் அறுகு இப்பெயர்த்து. சார்பு.

முட்கொடிச்சி: தூதுவளை முள் பொருந்திய கொடி யாகும். வடிவம்.

முதலியார்: தவசி முருங்கை முதலியார் எனப்படும். வீட்டில் ஒரு முருங்கை மரமும் ஓர் எருமை மாடும் இருந் தால் கருப்பு (பஞ்சம்) இல்லை என்பர். முருங்கை முதல் பொருளாக (மூல தனம்போல) உதவுவதால் முதலியார் எனப்பட்டது.

மாயன் மாலை — மாயன் மூலி: மாயன் = திருமால். துளசி திருமாலின் மாலையாகப் பயன்படும் மூலிகை யாதலால் மாயன் மாலை, மாயன் மூலி எனப்பட்டது, சார்பு.

மாயன் வித்து: வெள்ளரி விதை. அரி என்பதும் மாயன் என்பதும் திருமாலைக் குறிக்கும். எனவே, வெள்ளரி விதை, சொல் விளையாட்டாக மாயன் வித்து எனப்பட்டது.

மாலலங்கல்: மால் அலங்கல் = திருமாலின் மாலை, துளசி. சார்பு.

மால் கொடை: திருமாலின் பெயரால் கொடுக்கப்படும் தூய பொருளாதலின் துளசி மால் கொடையாயிற்று. சார்பு.

மால் மைத்துனன்: திருமாலின் தங்கை உமை. உமையின் கணவன் சிவன்; எனவே, மாலின் மைத்துனன் சிவனாவார். இப்பெயர் சொல்விளையாட்டாகச் சிவனார் வேம்பைக் குறிக்கிறது.

முக்கடுகம்: சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று பொருள்கள் திரிகடுகம் எனப்படும். திரி என்பது வடமொழிச் சொல். இப்பெயர் தூய தமிழில் முக்கடுகம் எனப்படும். மொழி பெயர்ப்பு.

முகிழ் அரும்பு: மொக்காகவே இருக்கும் அரும்பு. அத்தி, ஆல், அரசு, அன்னாசி, பலா ஆகியவை மலராமல் மொக்காகவே - அரும்பாகவே இருக்கும் மலர்ப்பகுதியை உடையவை. இப்பெயர் சினையாகு பெயராக, அத்தி, ஆல், அரசு, அன்னாசி, பலா ஆகியவற்றைக் குறிக்கும். வடிவம்.

முடியில் தரித்தான் = சிவன் சரக் கொன்றையை முடியில் தரித்திருப்பதால், சரக்கொன்றை இப்பெயர் பெற்றது. சார்பு.

முடிவேர்: முடி என்பது உச்சி; வேர் என்பது அடி. இச்சொற்களின் இணைப்பு வியப்பாயுள்ளது. வெட்டி வேரைப் பெண்டிர் தலையில் சூடுவர். வெட்டிவேர் எண்ணெயைத் தலைமுடியில் தேய்ப்பதும் உண்டு. எனவே, வெட்டிவேர் முடிவேர் எனப்பட்டது. பயன்.

முண்டக நாயகம்; முண்டகம் = தாமரை. தாமரை மலர ஞாயிறு நாயகமாக இருப்பதால் ஞாயிறுக்கு முண்டக நாயகம் எனும் பெயர் ஏற்பட்டது. முண்டக நாயகமாகிய ஞாயிறை நோக்கிச் சூரியகாந்தி திரும்புவதால், சூரிய

காந்திக்கும் முண்டக நாயகம் எனும் பெயர் ஏற்பட்டது. சார்பு.

முருகன் வாகனம்: இது மயில் காலடி என்னும் கொடியாகும். அடி, மயில் கால்போல் இருக்குமாதலின் மயில் காலடி எனப்பட்டது. மயில் என்ற சொல் இதில் உள்ளது. மயில் முருகனது ஊர்தி (வாகனம்) ஆதலின், இது முருகன் வாகனம் என்னும் பெயரைச் சொல் விளையாட்டாகப் பெற்றுள்ளது.

முருகா: அகிலுக்கு இப்பெயர் தரப்பட்டுள்ளது. முருகனுக்கு அகில் புகை மிகவும் உகந்ததாம். இ.சா.

பரிபாடல் — செவ்வேள்:

"கறையில் கார்மழை பொங்கி யன்ன
நறையின் நறும்புகை நனியமர்ந் தோயே"-(14-19,20)

பரிமேலழகர் உரை: "கார் காலத்து வெண்மேகம் கிளர்ந்தாலன்ன அகில் முதலியவற்றால் புகைத்த நறும்புகையை மிக விரும்பினோய்!"

"திசைநாறிய குன்றமர்ந்து ஆண்டாண்டு
ஆவி யுண்ணும் அகில்கெழு கமழ்புகை
வாய்வாய் மீபோய் உம்பர் இமைபிறப்ப
தேயா மண்டிலம் காணுமா றின்று" — (17:28-31)

பரிமேலழகர் உரை: "புகழால் திசையெங்கும் பரந்த குன்றின்கண் மேவி, உலகத்தார் பலவிடத்தும் செய்கின்ற பூசைக்கண் முருகன் ஆவியாகக் கொள்ளும் அகில்புகை அவ்விடந்தோறும் மேலே போதலான் உம்பர் இமையா நின்று நீங்குவார்; ஆதித்த மண்டிலமும் ஆண்டுக் காணும் இயல்புடைத்தன்று" —

"புரியுறு நரம்பும் இயலும் புணர்ந்து
சுருதியும் பூவும் சுடருங் கூடி

எரியுருகு அகிலோடு ஆரமுங் கமழும்
செருவேல் தானைச் செல்வ'' — (18:51-54)

பரிமேலழகர் உரை: ''செருவேல் தானைச் செல்வ! நின் பூசைக்கண் புரிதலுற்ற நரம்பினது ஒலியும் புலவர் பாடிய இயற் பாட்டுக்களும் பொருந்தி வேதவொலியும் உபசார மாகிய பூவும் தீபமுங் கூடி எரியின்கண் உருகும் அகிலும் சந்தனமும் தூபமாய்க் கமழாநிற்கும் . .''

மேற்காட்டியுள்ள மூன்று பரிபாடல் நூற்பாடல் பகுதி களால் முருகனுக்கும் அகிலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு தெரியவரும். எனவே, சார்பு காரணமாக, அகிலுக்கு 'முருகா' எனும் பெயர் தரப்பட்டது.

எலுமிச்சம் பழத்திற்கும் 'முருகா' என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. முருகனது வேல் நுனியில் எலுமிச் சம்பழம் செருகப்பட்டிருக்கும். காவடியிலும் இடம்பெற் றிருக்கும். முருக பூசனையிலும் முருகன் தொடர்பான வெறியாட்டுப் பூசனையிலும் இதற்கு இடம் உண்டு. எனவே, எலுமிச்சையும் முருகா எனப்பட்டது. சார்பு.

மூக்கிற்கரியார்: சிவப்பாயுள்ள குன்றிமணியின் (குண்டு மணியின்) மூக்கு கரிய நிறமாயிருக்கும். இ. சா.

'' புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து'' — (குறள் - 277)

குறளிலுள்ள 'மூக்கிற் கரியார்' என்னும் பெயர் அப்படியே குன்றிமணிக்குத் தரப்பட்டுள்ளது. ஒப்புமை.

முப்புரமாலி: அரக்கரின் முப்புரங்களை எரித்த சிவன் முப்புரமாலி எனப்படுவார். அவரது பெயர் சொல் விளையாட்டாகச் சிவனார் வேம்புக்கு வைக்கப்பட்டது.

முலைத்தாசி: இலைகளையுடைய கள்ளிச்செடி, முலை யழகுடைய தாசி போன்றிருத்தலின் இப்பெயர்த்து. வடிவு.

முனிதளம் — முனி பத்திரி — முனிப் பூண்டு: தளம் = இலை. பத்திரி = இலைகளை உடையது. முனி = அகத்திய முனி. எனவே, இப்பெயர்கள் சொல் விளையாட்டாக அகத்தி மரத்திற்கு ஆயின.

மூட்டைக்கொல்லி = சிறுதும்பை மூட்டைப்பூச்சியைக் கொல்லுமாம். பயன்.

மூதேவி மூலி; பொய்ச்சான்று சொல்பவரின் வீட்டில் மூதேவி யிருப்பாள் என முன்னர்க் கண்டோம். (காண்க குடிகேடன்). மூதேவியிருக்கும் அவ்விடத்தில் சிறுபசளைக் கீரைக் கொடியும் படர்ந்து மண்டிக் கிடக்குமாதலின், மூதேவிமூலி எனச் சிறுபசளை பெயர் சூட்டப்பட்டிருக்க லாம். சார்பு.

மூத்திரதோஷ நாசனி: இது சீரகம். சிறுநீர் (மூத்திரம்) தொடர்பான நீர்ச்சுருக்கு, கல்லடைப்பு முதலிய பிணிகளை நீக்குவது சீரகம். பாடல்:

தேரையர் குண பாடம்:

“வாந்தி யருசிகுன்மம் வாய்நோய் பீலிகம்இரைப்
பேந்திருமல் கல்லடைப்பி லாஞ்சனமுட் —
சேர்ந்தகம்மல்
ஆசன குடாரியெனும் அந்தக் கிரகணியும்
போசன குடாரி யுண்ணப் போம்.”

சீரகத்திற்குப் போசன குடாரி என்னும் பெயருமுண்டு. சீரகம் ‘சிறுநீர்ப் பெருக்கி’ (Diuretic) என்று பொ. ப. நூல் கூறுகிறது. பயன்.

மூவிலைச்சி = மூன்று இலைக் கொத்துடையது வில்வம்; அதாவது, மூன்று சிறு இலைகள் உள்ள கூட்டிலைகளை உடையது வில்வம். வடிவம்.

மூவிலை மின்னி = மூன்றிலைத் தோற்றத்துடன் மின்னுவது (விளங்குவது) அவரை. வடிவம்,

மேக சத்துரு–மேகாரி: இது ஆவாரை. மேகம் என்பது மேகநீர் என்னும் ஒருவகை நோய். ஆவாரை இதற்குப் பகையாகி இந்நோயைப் போக்கும். பாடல்கள்:

தேரையர் குண பாடம்:

"சொல்லுதற்கு மட்டோ தொலையாத மேகநீர்
எல்லாம் ஒழிக்கும்; எரிவகற்றும்; மெல்லவச
மாவாரைப் பம்பரம்போல் ஆட்டுந் தொழிலணங்கே
ஆவாரை மூலி யது".

அகத்தியர் குண பாடம்:

"பெருநீர் மறிக்கும்; பிரமேகம் போக்கும்;
வருநீர்ச் சுருக்குதனை மாற்றும் – தருநீர்மை
பூணு மேனிக் கமலப் பொன்னே! பிடகரெலாம்
பேணு மேகாரிப் பிசின்"

ஆவாரைக்கு அகத்தியர் குணபாடப் பாடலில் 'மேகாரி' என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பது காண்க. மேக + அரி = மேகாரி. மேக நோயை அரிப்பது—அழிப்பது மேகாரி. முர + அரி = முராரி; முரன் என்னும் அரக்கனை அழித்ததால் திருமால் முராரி எனப்பட்டார். முராரிபோல் மேகாரி என்பதையும் பிரித்துப் பொருள் காண்க. பயன்.

மேக நிறத்தி: கரு நெல்லி மேகம்போல் கருமையா யிருத்தலின் மேக நிறத்தி எனப்பட்டது. நிறம்.

மேக வர்ணனை — மேக வருணை: வர்ணனை — வருணை = நிறமுடையது. மேகம் போல் கருநிறமுடைய அவுரிச்செடி இப்பெயர் பெற்றது. செடி எப்படியிருப்பினும், அவுரிச்செடியிலிருந்து நீலக்கட்டி செய்வது நினைவுகூரத் தக்கது. நிறம்.

மோகினி: மிளகுத் தக்காளி என்னும் வகை, மோகினி போல் கவர்ச்சியா யிருப்பதால் இப்பெயர்த்து. வடிவம்.

யவனப் பிரியம்: அராபியர், உரோமானியர் முதலியோர் யவனர் எனப்படுவர். இவர்கள் தமிழகத்து மிளகை விரும்பி (பிரியஞ்செய்து) வாங்கிக் கப்பலில் தம் நாட்டுக்குக் கொண்டு செல்வர் என்பது வரலாறு கூறும் பழைய செய்தி யாகும். யவனர் பிரியப்படும் பொருள் ஆதலின் மிளகு யவனப் பிரியம் எனப்பட்டது. சார்பு.

யானைக் கன்று: அத்தி = யானை. பிஞ்சு + கன்று. சொல் விளையாட்டாக, அத்திப்பிஞ்சு யானைக் கன்று எனப்பட்டது.

யானைத் தலை: அத்தியிலை சொல் விளையாட்டாக இப்பெயர் பெற்றது.

யோகத்தை வளர்க்கு மூலி — யோகம் வளர்த்திடு ஞானி: இவ்விரு பெயர்களும் கஞ்சாவைக் குறிக்கும். யோகஞ் செய்யும் சித்தர்கள் சிலரும் கஞ்சா உட்கொண்டதால், இது இப்பெயர்களைப் பெற்றது. பயன். சார்பு.

இரசபலம் = இரசம் = சுவை நீர்; பலம் = காய் — பழம். தென்னை இளநீர் உடையதால் இப்பெயர் பெற்றது. பயன்.

இராச கனி: எலுமிச்சம் பழம் கனிகளுக்குள் மிகவும் அழகியதாகவும், தெய்வத்தன்மையுடையதாகவும் கடவுள் பூசனைக்கு உரியதாகவும் இருத்தலின், இராசகனி எனப்

பட்டது. சிறியோர் பெரியோரைக் காணச்செல்லுங்கால், இக்கனியைக் கொண்டுபோய்த் தந்து சிறப்பு செய்வது ஒரு வகை மரபு. எனவே இதனை இராச கனி எனலாம். தலைமை.

உருத்திரம்: சிவன் உருத்திரன் எனப்படுவார். எனவே சொல் விளையாட்டாக, சிவனார் வேம்பு உருத்திரன் எனப்பட்டது.

இலௌகிகம்: இது சந்தனம். இலௌகிகம் என்பது உலகப்பெரு வழக்கு என்னும் பொருள் உடையது. சந்தனம், சிறப்பு நிகழ்ச்சிகளில் எல்லாம் பெரு வழக்காகப் பயன்படுவதால் இலௌகிகம் எனப்பட்டது. சார்பு. பயன்.

வசந்த புட்பம்: வேங்கை மரம் வசந்த (இளவேனில்) காலத்தில் மலர்வதால் இப்பெயர்த்து. காலம்.

வசியக் கனி: சிறிது நீண்டு உருண்டிருக்கும் ஆதொண்டைப்பழம் காண்பதற்குக் கவர்ச்சியாயிருப்பதால் வசியக் கனி எனப்பட்டது. வடிவம்.

வஞ்சியர் மயக்கி: வஞ்சியர்=பெண்டிர். பெருந் தும்பை பெண்டிரை மயக்குவதால் இப்பெயர்த்து. சார்பு.

வடமாது: புளியமரம் வடமாது எனப்பட்டுள்ளது. காரணம் தெளிவில்லை. தமிழ்நாட்டின் வடக்கேயிருந்து வந்ததோ! தமிழ் நாட்டின் வடக்கேயுள்ள ஆந்திர நாட்டார் புளி - காரம் மிகுதியாய் உண்பர் என்னும் ஒரு கருத்து கருதத்தக்கது. இடம்.

மற்றொரு பெயர்க் காரணமும் கூறலாம்: ஒருவர் செல்வாக்கு மிக்க பெரியார் ஒருவரைச் சார்ந்து நின்றால், "புளியங் கொம்பாகப் பார்த்துப் பிடித்துவிட்டார்" எனல் உலக வழக்கு. வேறு மரங்களின் சிறு கிளைகளைப் பிடித்து ஏறினால் அவை ஒடிந்துவிடும். ஆனால் புளியஞ் சிம்பை—

புளியஞ் சிறு கிளையைப் பிடித்து ஏறினாலும் அச்சமில்லை; அது ஒடியாமல், வடம்போல்—வன்மையான கயிறுபோல் வளைந்து கொடுக்கும். இதனாலும் புளியமரம் வடமாது எனப்பட்டது எனலாம். வடிவம். வடம் = வட்டம். புளிய மரம் வட்டமாயிருக்கும்.

வண்டி புட்பம்: வண்டு தேன் உண்ணும் மலர் வண்டியாகும். அழகிய மணம் மிகுந்த அசோக மலர்கள் வண்டுகளைக் கவர்வன. எனவே, வண்டி புட்பம் என்பது சினையாகு பெயராய் அசோக மரத்திற்கு ஆயிற்று. உடற்கூறு.

வண்ணான் குறி: துணி வெளுப்பவர், சேங்கொட்டையின் உதவியால் துணிக்குக் குறிபோடுவர். அதனால் சேங்கொட்டை இப்பெயர்த்து. சார்பு.

வாசனைக் கன்னி: மிக்க மணமுள்ள சாதிபத்திரி வாசனைக் கன்னி எனப்பட்டது பொருத்தமே. பண்பு.

வாசி போசனம்: வாசி = குதிரை. இ.சா.

''ஏறினவ் வாசியை'' (திருவாலவா — 28-45)

குதிரை உண்ணும் காணப் (கொள்ளுப்) பயறு வாசி போசனம் எனப்பட்டது. சார்பு.

வாத கப சமனி: ஓமத்தில் ஒருவகை அசமதாகம் என்பது. இந்த அசமதாகம், வாயுவையும், கபத்தையும் சமனாக்குவதால் இப்பெயர்த்தாயிற்று. பயன்.

இந்த 'வாத கப சமனி', என்னும் பெயர் ஒரு திருக்குறளுக்குப் பொருத்தமான பொருள் காண உதவுகிறது.

'' மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று'' (941)

இக்குறளுக்குப் பழைய உரையாசிரியர்களாகிய பரிமே லழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காலிங்கர் முதலியோர், உணவும் செயலும் மிகுந்தாலும், குறைந்தாலும், வாதம்—பித்தம் –ஐ (கபம்) ஆகிய மூன்றும் நோய் உண்டாக்கும் என்னும் கருத்து தெரிவித்துள்ளனர். இப்பொருள் தவறு. 'உணவும் செயலும்' என்பது தேவை யின்றி வருவிக்கப்பட்டுள்ளது. உடம்பில் வாதம், பித்தம், ஐ மூன்றும் எப்போதும் உண்டு. இவை சமனாய் ஒத்த அளவாய் இருக்கவேண்டும். இம்மூன்றும் அளவினும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாக்கும் என்பதே பொருத்தமான பொருள் ஆகும்.

பரிப்பெருமாள் மட்டும் மற்றவர் போலவே உரைகூறி, இறுதியில், ''அதுவே அன்றி மற்றுள்ளவை மிகினும், இவை மூன்றும் குறையினும் நோய் ஆகும்'' என்று எழுதி, எனது கருத்துக்குக் கைகாட்டியுள்ளார். இதையே தான், 'வாத கப சமனி' என்னும் பெயர் அறிவிக்கிறது. அதாவது, அசமதாகம், வாதத்தையும் கபத்தையும் மிகவும் குறையவும் செய்யாமல் சமப்படுத்தி வைக்கும் என்னும் கருத்தைப் பறைசாற்றி அறிவிக்கிறது. ஈண்டு, சிற்றீஞ்சங்காயைக் குறிக்கும் 'பித்த சமனாக்கி' என்னும் பெயர் ஒப்புநோக்கத் தக்கது.

வாத கப விருத்தி: பலாச்சுளையை மிகுதியாக உண்டால், வாத கப நோய்கள் மிகும், குழந்தைகட்கு ஒரு சுளை செரிப்பதுகூட அரிது. பலாச்சுளை சுவையுடையதே தவிர, உடம்புக்கு அளவு மீறும்போது துன்பம் தரும். எனவே, பலா இப்பெயர்த்து. பயன்.

வாத குன்ம நாசினி: வாதம் = வாயுவு, குன்மம் = வயிற்று வலி தொடர்பான நோய். திப்பிலி, வாத குன்ம நோயைப் போக்குவதால் இப்பெயர்த்து. பயன்.

வாத சுர நாசனி = வாயுவுக்கும் காய்ச்சலுக்கும் அரைக்கீரை நல்லது. காய்ச்சல் அடிக்கும்போது அரைக் கீரையை உண்ணாவிடினும், காய்ச்சல் நின்றதும் உடலைத் தேற்ற உண்ணலாம் பயன்.

வாதம் அறுக்கின்றோன்: மிளகு வாயுவை அறவே அறுத்துப் போக்குதலின் இப்பெயர்த்து. பயன். பாடல்கள்: அகத்தியர் குண பாடம்:

"அளவையுறாக் காரம் அடைந்திருக்கும் வாத
விளைவையெல்லாம் அறுக்கும் மெய்யே —
மிளகின் காய்"

"வாதம் அருசி பித்தம் மாமூலம்......
நாசம் கறிமிளகி னால்"

தேரையர் குணபாடம்:

"கோணுகின்ற பங்கவலி குய்ய வுரோகம்வாதம்...
ஏதுநோய் காயிருக்கில் ஈங்கு"

தேரன் வெண்பா:

"போம்திமிர் வாதம்கிரந்தி புண்ணீரும் மண்ணவர்க்கும்
காந்திமெய் வாதச் சலுப்பைக்காய்"

மிளகு வாதம் அறுக்கும் என்பதற்கு மேலும் சான்று வேண்டுமா என்ன!

வாதாடு காளி; காளி சிவனோடு வாதாடியதால் வாதாடு காளி எனப்பட்டாள். காளியின் இப்பெயர் சொல் விளையாட்டாக மணித்தக்காளிக்கும் வைக்கப்பட்டது. மணித்தக்காளி என்பதன் இறுதியில் காளி என்னும் பகுதி இருக்கின்றதல்லவா?

வாந்திசுர நாசனி: வெட்டிவேர், வாந்தியையும் காய்ச்சலையும் போக்கப் பயன்படுமாதலின் இப்பெயர்த்து. பயன்.

வாந்தி சோதினி: கருஞ்சீரகம் வாந்தியைக் குணப் படுத்துமாதலின் இப்பெயர்த்து. பயன்.

வாரிகேசம்: வாரி = வருவாய், செல்வம். இ.சா.

"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்" — (குறள் — 14)

வெட்டி என்பதற்கும் செல்வம் என்னும் பொருள் உள்ளமை முன்னரே கூறப்பட்டுள்ளது. கேசம் என்பதற்கு வேர் என்னும் பொருள் உண்டு. எனவே, வெட்டிவேர் 'வாரி கேசம்' எனப்பட்டது. சொல்விளையாட்டு. கேசம் என்ப தற்குத் தலைமயிர் என்ற பொருளும் உண்டு. தலைமயிரில் வாரி முடிப்பதால் வெட்டிவேர் வாரிகேசம் எனப்பட்டது என்றும் கூறலாம்.

வா(ய்) ருசி: மொச்சை வாய்க்கு ருசி—சுவை தருதலின் இப்பெயர்த்து. பயன்.

வாலைப் பெண்: இளம் பெண் வாலைப் பெண். செவ்வாமணக்கு வாலைப் பெண் போல் அழகாயிருப்பதால் வாலைப் பெண்ணாயிற்று. ஒப்புமை.

விசித்திரம்: காட்டாமணக்கு விசித்திரமான (அழகிய-மேலான) தோற்றம் உடைத்து; ஆதலின் பண்பாகுபெய ராய் விசித்திரம் எனும் பெயர் வந்தது. வடிவம்.

விசுவநாதன்: சிவன் விசுவநாதன்; எனவே, சொல் விளையாட்டாய், சிவகரந்தை விசுவநாதன் எனப்பட்டது.

விசுவாசன்: இது அதிவிடயச் செடி. விடயம் என்ப தற்கு, பயன் (இலக்கியச் சொல்லகராதி), காம இன்பம் (பிங்கலம்) என்னும் பொருள்கள் உண்மையின், மிகவும் விசுவாசிக்கத் தக்கது என்னும் பொருளில், சொல் விளை யாட்டாக இப்பெயர் பெற்றது.

விஷக்கடிப் பிரியன்: கசப்புப் பசளை நச்சுக்கடி போக்கும். பயன்.

விஷத்துக்கு அரசன்; ஆடுதின்னாப்பாளை நஞ்சு போக்குவதில் சிறந்தது பயன்.

விடம் போக்கி: கருங்குருவை நெல்லரிசி உண்டால், உடம்பிலுள்ள நச்சுக் கூறுகள் தொலையுமாதலின், கருங்குருவைநெல் விடம் போக்கியாயிற்று. பயன்.

விஷ்ணுபத்திரம்-விண்டுபத்திரம்: விஷ்ணு, விண்டு = திருமால். துளசி திருமாலுக்கு உரிய பத்திரம் ஆதலின் இப் பெயர்கள் பெற்றது. சார்பு.

விந்தை: விந்தம் என்னும் மலையை அடக்கிய அகத்தியர் விந்தை எனப்பட்டார். எனவே, சொல் விளையாட்டாக அகத்திமரம் விந்தை எனப்பட்டது.

விரணங்கள் குட்டம் போக்கி: புன்னை, புண்களையும் குட்ட நோயையும் போக்குயாம். பயன். புன்னை ஒரு மரம்.

அகத்தியர் குணபாடம்:

"கரப்பான் சொறி சிரங்கு காணா தகற்றும்"
"கன்ன விரணம் கடுஞ்சந்நி பாதமுடன்
இன்னலுறு வாதையிவை யகலும்"

"பொல்லா வலியினமும் புண்கிருமியுந் தொலையும்"

விரணத்தின் நீரைக் கொல்லி: இது ஆரைக்கீரை; புண்ணில் நீர் வடியாமல் குணமாக்குமாம், பயன்.

அ.கு.பா. பாடல்:

" தின்றால் உரிசைதரும்; தீராப் பயித்தியத்தைப்
பொன்றாத நீரிழிவை, புண்நீரை—யென்றுமிந்த

ஊராரைச் சாராமல் ஓட்டிவிடும் நாலிதழார்
நீராரைக் கீரையது நீ.''

பயித்தியம், நீரிழிவு, புண்நீர் ஆகியவற்றை ஆரைக்கீரை ஊரை விட்டே ஓட்டி விடுமாம்.

விரண நீக்கி: விரணம் = புண். நிலக் கடம்பு புண் ஆற்றும். பயன்.

விளக்கம்: இப்பெயரையுடையது சேங்கொட்டை யாகும். சேங்கொட்டை, உடல் நோயைப் போக்கி ஒளி விளக்கம் செய்தலின் விளக்கம் எனப்பட்டது என்று கூறலா மாயினும், இதற்கு வேறொரு விளக்கமும் உண்டு. சேங்கொட்டைக்கு 'வண்ணான் குறி' என்னும் பெயர் உள்ளமை முன்பு கூறப்பட்டுள்ளது. இது—இது இன்னின் னார் வீட்டுத் துணி எனச் சேங்கொட்டைக்குறி விளக்குவ தால், சேங்கொட்டை விளக்கம் என்னும் பெயர்த்தாயிற்று என்றும் கூறலாம். பயன். இது, கலங்கிய நீரைத் தெளியச் செய்து விளக்கம் (தூய்மை) செய்வதாலும் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

விளிம்பு: அறுகு இது. விளிம்பு என்பதற்கு ஓரம், கூர் என்றெல்லாம் பொருள் செய்யலாம். அறுகம்புல் கூரா யிருப்பதால் இப்பெயர்த்து. வடிவம். அறுகு கணபதிக்கு (பிள்ளையாருக்கு) உகந்த தாதலின் 'கணபதி பத்திரம்' என்னும் பெயரும் உண்டு என்பது தேரன் வெண்பாவால் தெரிகிறது. சார்பு. பாடல்:

" அடர்தந்தை பிள்ளைக்கு அணியாத லாலத்
திடமாங் கணபதி பத்ரம்'' —

வீட்டில் நெருப்பு: இது அகத்தி. அகத்தி என்பதைச் சொல் விளையாட்டாக அகத்தீ என நீட்டவேண்டும். அகம் = வீடு; தீ = நெருப்பு. எனவே அகத்தி (அகத்தீ)

வீட்டில் நெருப்பு எனப்பட்டது. 'வீட்டுத்தீ' என்றும் இது சொல்லப்படும்.

வீரச் செல்வி: இது சத்தி சாரணை என்னும் பூடு. சத்தி என்பதற்கு, வீர ஆற்றலுடைய சக்தியாகிய தெய்வம் என்ற பொருள் உண்டு. தேவி சத்தியை வீரச் செல்வி என்றும் கூறுவர். எனவே, சத்தி சாரணை, சொல் விளை யாட்டாக வீரச் செல்வி எனப்பட்டது.

வீரிய தேசு = இது வல்லாரை, வீரியம் = ஒளி, வலிமை; தேசு = ஒளி (பிரகாசம்). வல்லாரை உடலைத் தேற்றி வலிமையும் ஒளியும் உடையதாகச் செய்யுமாதலின் வீரிய தேசு எனப்பட்டது. பயன். இதற்குப் பொருட் பண்பு நூலில், 'உடல் தேற்றி', 'உரம் (பலம்) ஆக்கி' என்னும் செய்கைகள் உரியனவாகச் சொல்லப்பட்டுள்ளது.

வெகு காமி: தொழு கண்ணிச் செடி. இது மிக்க காம உணர்வைத் தூண்டுமாம்.

வெண்ணீர்த் தெளிவு: சேங்கொட்டை கலங்கல் நீரை வெண்ணீராக—தெளிந்த நீராகச் செய்யப் பயன்படுதலின் வெண்ணீர்த் தெளிவு எனப்பட்டது. பயன்.

வேகி: இது மிளகாய். அளவோடு மிளகாய் உண்ணின், உடம்புக்கு உற்சாகம் — விருவிருப்பு – வேகம் கொடுக்கு மாதலின் மிளகாய் வேகி எனப்பட்டது. அ.கு.பா. பாடல் ஒன்றில் உள்ள "உந்து மிளகாய்ப் பழத்தால் ஓது" என்னும் அடியில் உள்ள "உந்து" என்பது, வேகத்தை விருவிருப்பை உந்தும்-செலுத்தும் என்னும் பொருளில் உள்ளமை காண்க.

வேசி: மிளகுத் தக்காளி தோற்றத்தில் வேசி (பரத்தை) போல் கவர்ச்சியாயிருப்பதால் வேசி எனப்பட்டது. ஒப்புமை.

வேசி நங்கை = மிளகாயும் செடியில் உள்ளபோது வேசிபோல் கவர்ச்சியா யிருப்பதால் வேசி நங்கை எனப் பட்டது ஒப்புமை.

வேசிப் பழம்: வேசி = பரத்தை, விலை மகள். மிகவும் அணி செய்துகொண்டு வேசி பள பளப்பாகக் காணப் படுவாள்; கண்டாரால் கவரப்படுவாள். அவள்போல, எலுமிச்சம் பழமும் நல்ல அழகொளியுடன் கவர்ச்சியா யிருப்பதால் வேசிப்பழம் எனப்பட்டது. ஒப்புமை.

வேந்தன்: வேந்தன் = அரசன்; எனவே, அரச மரம் சொல் விளையாட்டாக வேந்தன் என்னும் பெயர்பெற்றது.

வேர்க்கட்டை = இது வசம்பு. வசம்பு என்னும் பெயரில் மக்கள் பயன்படுத்துவது, வசம்பு மூலிகையின் வேர்க்கட்டையைத்தான். அதனால் வசம்பு இப் பெயர்த்தா யிற்று. வடிவம்.

வேர்ச் சாற்றில் செம்பு சுத்தி: பேய்க்குமட்டி என்னும் கொடியின் வேர்ச் சாற்றினால் செம்பு என்னும் உலோ கத்தைக் களிம்பு நீக்கித் தூய்மை செய்ய முடியுமாம். பயன்.

வேர்ச் சாற்றில் நவலோக சுத்தி: காட்டுக் கொள்ளின் வேர்ச் சாற்றினால், ஒன்பது வகை உலோகங்களையும் தூய்மை செய்து மாற்றலாமாம். பயன்.

வேல்விழி மாது: கண்டங்கத்தரி கூரிய வேல் போல் குத்தும் முள்ளையும் விழிபோன்ற தோற்றத்தையும் உடைமையால் வேல்விழி மாது எனப்பட்டது. வடிவம்.

வேல்விழியாள்: வேலும் விழியும் போன்ற தோற்றம் உடைய கத்தூரி மஞ்சள் வேல் விழியாள் எனப்பட்டது. வடிவம்.

வைணவம்: வைணவக் கடவுளாகிய கண்ணனின் குழல் ஆக்க உதவுவது மூங்கில். எனவே, புல்லாங்குழலாகிய மூங்கிலுக்கும் வைணவத்திற்கும் தொடர்பு உண்டு. அதனால், மூங்கிலரிசி வைணவம் எனப்பட்டது. சார்பு.

# சித்த வைத்திய அகராதியில் உள்ளவை

**அணியுரி மரம்:** உடம்பில் அணிகின்ற - கட்டிக்கொள்கின்ற உரியை - பட்டையை அளிக்கும் மரவுரி மரம் அணியுரி மரம் எனப்பட்டது. இது பயன் காரணமாக வந்த பெயர்.

**அதிதாகம் நீக்கி:** மிகுந்த தாக வேட்கையை அதிமதுரம் நீக்குவதால், அதற்கு "அதிதாகம் போக்கி" என்னும் பெயர் நல்கப்பட்டது. பாடல் சான்றுகள்:

தேரையர் குணபாடம்:

" கத்தியரி முப்பிணியால் வருபுண், தாகம்,...
குயப்புணும் போம் மதூரகம் எனக் கூறுங்காலே"—
(மதூரகம் = அதிமதுரம்)

**ஓர்ஓலைஏடு:**

" தித்திக்கும் அதிமதுரக் குணத்தை எடுத்துரைக்கில்
சிரமயக்கம், சுரம், தாகம், .........
அறுத்திடும் வச்சிரம் என்பார் அதிமதுரந் தனையே"

மற்றோர் ஏடு:

" அதிமதுரம் பேரீந்துக் கான குணம் கேளீர்
கொதிமருவாப் பித்தங் குறுகுமே—துதி மருவாய்
நீரதுவும் உண்டாம் நிலையாத தாபம்போம்
பாரறியச் சொன்னோம் பார்த்து"-(தாபம் = தாகம்)

எருதுகன்னி மரம்: எருது = காளை மாடு. அதன் கன்னியாகிய பெண்பால் பசு ஆகும். எனவே, பசு முன்னை

மரம், எருது கன்னிமரம் எனச் சொல் விளையாட்டாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

உயிர் காப்பாற்று மூலி = சஞ்சீவி உயிர் காப்பாற்று மாதலின் இப்பெயர்த் தாயிற்று. பயன்.

ஆடிய கூத்தன் மரம்: சிவன் தில்லையாகிய சிதம்பரத் தில் கூத்து ஆடுபவர். எனவே, தில்லைமரம், ஆடிய கூத்தன் மரம் எனச் சார்பால் பெயர் பெற்றது.

ஆள் மறித்தான் புல்: இது இராவணன் மீசைப்புல்லின் பெயர். கத்தையாக வைத்திருக்கும் மீசையைத் துடைப்பக் கட்டை மீசை எனல் உலகியல். கடற்கரையில், மீசை நெருக்கமாக நீட்டிக்கொண்டிருப்பது போல் ஒருவகைப்புல் அடர்ந்து நெருங்கி நீட்டிக்கொண்டுள்ளது. அரக்கனாகிய இராவணனுக்கு மீசை இருந்தால் எப்படியிருக்குமோ — அப்படி இது இருப்பதால், இதற்கு இராவணன் மீசைப்புல் என்று பெயர் தரப்பட்டது. இது, நடந்துசெல்லும் ஆள்களை நடக்கவொட்டாமல் தடுத்து மறிப்பதுபோல் இடையூறாக இருப்பதால், 'ஆள் மறித்தான் புல்' என்னும் பெயரும் பெற்றது.

இராம பத்தினி = இராமன் பத்தினி (மனைவி) சீதை. எனவே, சீதா செங்கழுநீர்க் கொடி, சொல்விளையாட்டாக இராம பத்தினி எனப்பட்டது.

இராமன் தேவி = இராமன் தேவியாகிய சீதைக்குச் சானகி என்னும் பெயரும் உண்டு. எனவே, சானகிப் பூண்டு, சொல்விளையாட்டாக 'இராமன் தேவி' எனப்பட்டது.

கபமறுக்குங் குடோரி = யானைத் திப்பிலி என்னும் கொடியின் பெயர் இது. கபத்தை (ஐயத்தை) அறுத்துப் போக்கும் படைக்கலம் (குடோரி) போன்று இருப்பதால்,

இது கபமறுக்கும் குடோரி எனப்பட்டது. பயன், பாடல்—அகத்தியர் குணபாடம்:

"வாதமறும் தீபனமாம் மாறாக் கபம் கரப்பான்......
ஓடும் ...... யானையினல் திப்பிலியதால்"

கிழவன் தாடிப் பூண்டு = இது பனி தாங்கிப் பூடு ஆகும். இந்தப் பூண்டின்மேல் பனி நீடித்திருக்கும். பனி வெண்ணிற மானது. கிழவன் தாடியும் நரைத்து வெண்ணிறமாயிருக் கும். எனவே, பனிதாங்கிப் பூடு கிழவன் தாடிபோல் இருக்குமாதலின், கிழவன் தாடிப் பூண்டு எனப்பட்டது. ஒப்புமை.

கீரைச் சிறுமி = சிறுகீரை சொல்விளையாட்டாகக் 'கீரைச் சிறுமி' எனப்பட்டது. சிறு = சிறுமி.

குஞ்சர மயக்கி = குஞ்சரம் = யானை. யானையை வணங்கச் செய்வதால், யானை வணங்கிச் செடி, குஞ்சர மயக்கி எனப்பட்டது. நெருஞ்சி, முள்ளால் தைத்து யானையைத் துன்புறுத்துவதால், நெருஞ்சியின் பெயராக இருக்கவேண்டும் இது.

குளிர் காந்திக் கொடி = சந்திர காந்திச் செடி இது. பகலில் சூரியனை நோக்கும் சூரியகாந்திபோல், குளிர்ந்த இரவில் சந்திரனை (திங்களை) நோக்கும் சந்திரகாந்தி, குளிர் காந்திச் செடி எனப்பட்டது. சார்பு.

சந்திர காந்திப் பூ = இரவில் மலரும் அல்லி. சார்பு.

சவுபாக்கியம் = சவுபாக்கியம் = செல்வம், நலம். சுக்கு உடம்புக்குப் பெருஞ் செல்வம்போல் இருந்து நலம் பயப்ப தால் சவுபாக்கியம் எனப்பட்டது. பயன்.

சிரப் பலம் = சிரம் = உச்சி; பலம் = காய், கனி. தென்னைமரத்தில் உச்சியில் காய் காய்ப்பதால், சினையாகு பெயராகத் தென்னை சிரப்பலம் எனப்பட்டது. வடிவம்.

செந் தீ வண்ணன் செடி = செந் தீ வண்ணன் சிவன். எனவே, சொல் விளையாட்டாக, சிவதுளசிச் செடி இப் பெயர்த்தாயிற்று.

தனுத் திருமரம் = இது மூங்கில். தனு = வில். மூங்கில் வில் செய்ய உதவுவதால் தனுத் திருமரம் எனப்பட்டது. பயன்.

நஞ்சு முறித்தான் = இது அவுரிச்செடி. அவுரி பல வகையான நஞ்சைப் போக்குமாதலின் இப்பெயர்த்தாயிற்று பயன். பாடல் :

அ. கு. பாடம்:

"உரியல் அவுரித் தழைதான் ஓது பதினெண்
அரிய நஞ்சைத் தின்றவர்க்கும் ஆகும்"

"உன்னு விடக்கடியும் ஓடுங்காண்......
அவுரி யிலை தன்னால் அறி"

நாய் நாக்குப் பூடு: நாயின் நாக்குபோன்ற இலைகளை யுடைய 'இலைக் கள்ளி' நாய் நாக்குப் பூடு எனப்பட்டது. வடிவம்.

நாறு கட்டி = இது பெருங்காயம். நாறுதல் = மணம் வீசுதல். பெருங்காயக் கட்டி மணம் வீசுவதால் நாறு கட்டி எனப்பட்டது. பண்பு,

நெய்யாத ஆடை = பெரும் பன்னாடை நெய்து உருவானதன்று. பன்னாடை என்பதின் இறுதியில் ஆடை என்னும் சொல் இருப்பதால், பன்னாடை, சொல் விளையாட்டாக நெய்யாத ஆடை எனப்பட்டது.

நை மாமிசப் பூண்டு = நை = இகழ்ச்சிக் குறிப்பு. வெங்காயம் மாமிசத்தின் தன்மையுடைய தெனப் பலர்

நோன்பு (விரத) நாளில் உணவில் வெங்காயம் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள். எனவே, வெங்காயம் நை மாமிசப் பூண்டு எனப்பட்டது. வெங்காயம் காம உணர்வைப் பெருக்கு மாதலின், மாமிசத் தன்மையுடைய தென நோன்பு நாளில் விலக்கப்பட்டுள்ளது. பண்பு.

பசும் பிடிப்புல்=அறுகம் புல் இது. அறுகு பசுமையாக இருக்கும்; கையால் பிடியாகப் பிடித்து அறுக்கப்படும். இதனால் பசும் பிடிப்புல் எனப்பட்டது எனலாம். மற்றும் பசுவுக்கு உணவாகும் புல் என்றும் பொருள் கூறலாம். சார்பு. இங்கே, "யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை" என்னும் திருமூலரின் திருமந்திரப் (252) பாடல் பகுதி நினைவு கூரத்தக்கது. மற்றும்,

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது" (16)

என்னும் திருக்குறள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. விண்ணி லிருந்து மழைத்துளி வீழாதாயின் பசும் புல்லின் தலையை யும் காணமுடியாதாம். முழுமையான உருவத்துடன் புல் உயரமாக வளராது என்பது மட்டுமன்று; அதன் தலை யையும் - நுனியையும் தரையின்மேல் காணமுடியாதாம். 'போய்த் தலையைக் காட்டி விட்டு வந்து விடுகிறேன்' என்ற உலக வழக்காறும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

எத்தனை ஆண்டுகள் மழையின்றிக் காயினும், மழைத் துளி விழுந்ததும் அறுகம்புல் மேலே தலைகாட்டும். எங்கள் வீட்டின் எதிரில் தெருவில் கருங்கல்-தார்ப்பாதை போட்டுள்ளனர். அப்படியிருந்தும் எங்கள் தெரு வாயிலில் தார்ப்பாதைக்குமேல் அறுகு தலைகாட்டி வளர்கிறது. செதுக்கச் செதுக்கத் துளிர்க்கிறது. அந்த அளவுக்கு அறுகு வேரூன்றி விடும். இதனால்தான், "ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி" என்று பெரியோர்

வாழ்த்துகின்றனர். எனவே பசும்புல் என்பது, குறிப்பாக-சிறப்பாக அறுகம் பல்லைக் குறிக்கும் எனலாம்.

பத்தியக்காரிக் கீரை = சிறுகீரை உடலுக்கு நல்லது; வலிமை தருவது; பத்தியம் பிடிப்பவர்கள் உண்ணத்தக்கது; அதனால் பத்தியக் காரிக்கீரை எனப்பட்டது. சார்பு.

பல தேசிகக்கனி = ஆரஞ்சுப்பழம் இது. இது, பலதேசங்களிலும் 'ஆரஞ்சு' என்னும் சொல் ஒலிப்போடு ஒத்த சொல் ஒலிப்புடையதாய்ப் பயன்பட்டு வருவதால் பல தேசிகக் கனி எனப்பட்டது. சார்பு.

பழம் பேசி = நெருஞ்சிலில் செப்பு நெருஞ்சில் என ஒரு வகை உண்டு. நெருஞ்சிமுள் என்பது நெஞ்சிப் பழமாகும். செப்புதல் என்றால் பேசுதல்; எனவே, செப்பு நெருஞ்சிப் பழம், சொல் விளையாட்டாகப் 'பழம்பேசி' எனப்பட்டது.

பறவை வேந்தன் கொடி=பறவை வேந்தன்=கருடன். எனவே, கருடன் கொடி என்னும் மர இனம் சொல் விளையாட்டாகப் பறவை வேந்தன் கொடி எனப்பட்டது.

பனிப் பகைச் செடி: பனிக்குப் பகை ஞாயிறு (சூரியன்). எனவே, பனிப்பகையாகிய ஞாயிறை நோக்கும் சூரிய காந்திச்செடி பனிப் பகைச் செடி எனப்பட்டது. சார்பு.

பன்றி குறும்புக் கிழங்கு - பன்றி தோன்றிப் பூடு: கோரைக் கிழங்கைப் பன்றி தோண்டித் தின்பதால், கோரைக் கிழங்கு இப்பெயர்கள் பெற்றது. சார்பு.

பாம்பு கொல்லிப் பூண்டு: கீரி பாம்பைக் கொல்லும். பாம்பைக் கொன்ற கீரி, தற்காப்புக்காக, நச்சுப் போக்கும் ஒரு பூண்டின்மேல் புரளும். அது தான் கீரிப்பூண்டு. இதுதான் பாம்பு கொல்லிப்பூண்டு. சார்பு,

பார்வதி மரம்: இது ஆத்திமரம். ஆத்தாள் என உலகத் தாயாகிய பார்வதியைக் கூறுவதுண்டு. ஆத்தாள் எனினும் ஆத்தி எனினும் ஒன்றே. எனவே, சொல் விளை யாட்டாக ஆத்திமரம், பார்வதிமரம் எனப்பட்டது.

பால்மரம்: கள்ளிச் செடியும் ஆலமரமும் பால் உள்ள மரங்களாம். உடற் கூறு.

பிசாசக் கரும்பு: இது பேய்க் கரும்பு. இது கசக்கும். இது தித்திக்கும் இடம் தாம் அடக்கமாகும் இடமெனப் பட்டினத்தார் இதைக் கையில் வைத்திருந்தார்; இது திரு வொற்றியூரில் தித்தித்தது-என்பர். பிசாசம்=பேய். சொல் விளையாட்டு.

பிரமபத்திரச் செடி: இது புகையிலைச் செடி. பிரமம் முனிவர்-யோகியர்-சித்தர் ஆகியோரையும் குறிக்கும். எனவே, சித்தர்கள், கஞ்சாவைப் போலவே, புகையிலை யையும், உக்காவில் இட்டுப் புகை பிடிக்கலாம். கோரக்கர் பயன் படுத்தியதால் கஞ்சா, கோரக்கர் மூலிகை எனப் பட்டது ஈண்டு நினைவு கூரத்தக்கது. உயர்ந்தவர்கள் சிலரும் பயன்படுத்தும் பத்திரம் (இலை) என்ற பொருளில் புகையிலை, பிரமபத்திரச் செடி எனப்பட்டது. சார்பு. இது பிரமனுக்கு உரிய இலை என்று சிலர் கூறுகின்றனர்; இக் கருத்து எந்த அளவு பொருந்துமோ!

பிரிய தரிசினி: வன்னிமரம் பார்ப்பதற்குப் பிரியமான காட்சியாயிருப்பதால், பிரியதரிசினி எனப்பட்டது. வடிவம்.

பிளவை கொல்லி: பக்கப் பிளவை என்னும் புண் கட்டியைப் போக்க இலைக்கள்ளிச் செடி உதவுமாதலின், இது பிளவை கொல்லி எனப்பட்டது. பயன்.

பிள்ளைத் தாய்ச்சிக் கொடி: இது கெர்ப்பக் கொடி. கெர்ப்பத்தில் உள்ள பிள்ளைக்குத் தாயாயிருப்பவள்

பிள்ளைத் தாய்ச்சி. எனவே, கெர்ப்பக் கொடி, சொல் விளையாட்டாக இப்பெயர் பெற்றது.

பிள்ளை மகன்=தென்னையைத் தென்னம் பிள்ளை எனல் மரபு, இந்தப் பிள்ளையின் மகன் தேங்காய். எனவே, தேங்காய் பிள்ளை மகன் எனப்பட்டது. சார்பு.

பிள்ளை மகன் இளையோன்=தென்னம் பிள்ளையின் மகனாகிய தேங்காய்க்கு இளையவன் இளநீர் ஆகும். எனவே, இளநீர் இப்பெயர்த் தாயிற்று. சார்பு. உடற்கூறு.

பிள்ளை மரம் = தென்னம் பிள்ளை = தென்னை மரம்.

பிறைமலர்=அகத்திப் பூ பிறை வடிவாயிருக்குமாத லின் பிறை மலர் எனப்பட்டது. வடிவம்.

பீநாறிச் செடி=தீய நாற்றம் உடைய சங்கஞ் செடி முதலியன பீநாறிச் செடியாகும். பண்பு.

புல் மரம் = உள் வயிரம் இல்லாத—வெளி வயிரம் மட்டுமே உடைய பனை, தென்னை, மூங்கில் முதலியன புல் மரம் எனப்படும்.

"புறக்காழனவே புல்லெனப் படுமே" (86)

என்பது தொல்காப்பிய மரபியல் நூற்பா. புறக்காழ் = வெளி வயிரம். சிலப்பதிகாரத்தில் உள்ள,

"தாலப் புல்லின் வால் வெண்தோடு"— (16-35)

என்னும் பகுதியி லுள்ள தாலப்புல் என்பது பனையைக் குறிக்கிறது. உடற்கூறு.

புழுக்கொல்லிப் பாளை: ஆடுதின்னாப் பாளை புழு பூச்சிகளைக் கொல்லுமாதலின் இப்பெயர்த்து. பயன்.

பூந்துகில் மரம்: பூந்துகில் என்பது உடை. துறவிகள் உடுக்க மர உரிதரும் மரவுரி மரம் பூந்துகில் மரம் என வேடிக்கையாகச் சொல்லப்பட்டுள்ளது.

பெண் துடரி: இது பின் துடரிச் செடியாகும். துடரி= தொடரி. 'பெண்' என்பதற்கும் 'பின்' என்பதற்கும் தொடர்பு உண்டு. (பெண்கள் சினம் கொள்ளலாகாது.) 'பெண் புத்தி பின் புத்தி' என்பது பழமொழி. இதற்குப் பழி வாங்கும் முறையில் 'ஆண்புத்தி சாண்புத்தி' என்பர் பெண்டிர் சிலர். எனவே, சொல் விளையாட்டாகப் பின்துடரிச் செடி, பெண் துடரி எனப்பட்டது.

இதற்கு இன்னொரு வகைச் சொல் விளையாட்டு விளக்கமும் தரலாம். தெருவிலோ - வழியிலோ ஆணும் பெண்ணும் செல்லும்போது, ஆண் முன்னே செல்லப் பெண் பின்னே தொடர்வது நினைவு கூரத்தக்கது. இம் முறையிலும் இப்பெயர்ப் பொருத்தம் நன்று.

பேதி வாளம்: நீர் வாளக் கொட்டை பேதி மருந்தாதலால், பேதி வாளம் எனப்பட்டது. பயன்.

போசனக் குறடாச் செடி: சிலர், கூழ், பழையது, தயிர்-மோர் சோறு முதலியன உட்கொள்ளும்போது இடையிடையே மிளகாயைக் கடித்து உண்பர். இங்கே மிளகாய் குறடாபோல் வேலை செய்கிறது. எனவே, மிளகாய் போசனக் குறடா வாயிற்று. பயன்.

மச்சங் கொல்லிச் செடி: இது புகையிலைச் செடி. புகையிலையின் புகை சில புழு பூச்சிகளைக் கொல்லும்; ஒரு வேளை மச்சம் எனப்படும் மீனின்மேல் புகையிலையோ-புகையோ படினும் மீன் இறக்குமோ? அதனால் புகையிலை மச்சங் கொல்லி எனப்பட்டிருக்குமோ? செயல்.

மண்ணரசு மரம்: பூவரச மரம் இது, பூ=பூமி=மண். எனவே, சொல் விளையாட்டாக இப்பெயர்த்தாயிற்று.

மண்ணில் வேந்தன் பழம்: மண்ணில் வளரும், பழங் களுக்குள் எடுப்பான பளபளப்பான தோற்றத்துடன் இருப்பதால், எலுமிச்சம் பழம் இப்பெயர்த்தாயிற்று. தலைமை.

மண்ணில் வேந்தன் மரம்: மண்ணில் வளரும் அரச மரம் சொல் விளையாட்டாக இப்பெயர்த் தாயிற்று.

மதகரித் திப்பிலி = மதகரி = யானை. எனவே, யானைத் திப்பிலி சொல்விளையாட்டாக இப்பெயர் பெற்றது.

மந்தைப் பெருச்சாளி: வீட்டுப் பெருச்சாளியே பெரிதா யுள்ளது — சமாளிக்க முடியவில்லை. பொது வெளியான மந்தைக் கரைப் பெருச்சாளி எங்கும் சுற்றித் திரியும். அதுபோல, தூதுவளைக் கொடி, படரத் தொடங்கினால் அங்கிங்கு எனாதபடி அரக்கன்போல் எங்கும் பரவிப் படர்ந்துவிடும். அதனால் தூதுவளை இப்பெயர் பெற்ற தெனலாம். ஒப்புமை.

மலையரசி மரம்: சந்தன மரம் மலைக்கு அரசி எனச் சொல்லும் அளவுக்குச் சிறந்ததாதலின், மலையரசி மரம் எனப்பட்டது. தலைமை.

மாதேவிச் செடி: மாதேவி = சீதேவி. எனவே, சீதேவி செங்கழுநீர்ச் செடி சொல்விளையாட்டாக இப் பெயர்த்தாயிற்று.

மாலூர்திக் கொடி: மால் = திருமால்; ஊர்தி = வாகனம்; மாலூர்தி = திருமாலின் ஊர்தியாகிய கருடன். எனவே, கருடன் கொடி சொல்விளையாட்டாக இப் பெயர்த்து.

முக்கண்ணனிளையோன்: முக்கண்ணன் = மூன்று கண்களையுடைய தேங்காய்; தேங்காயில் இளையவன் = இளநீர்; எனவே, இளநீர், முக்கண்ணன் இளையோன் எனப்பட்டது. வடிவம்.

முடிமேல் முடி: இது தும்பை. இது பிள்ளையாருக்கு (விநாயகருக்கு) உரியது. சைவர் கொள்கையின்படி, பிள்ளையார் தெய்வங்களுள் மேலானவர். விநாயகர் = மேலான தலைவர். கணபதி, கணேசன் = தெய்வகணங்களின் தலைவர். இப்பெயர்கள் எல்லாம் விநாயகருக்கு உள்ளமையால் அவரது மேன்மை புலனாகும். மக்கள் மட்டுமன்றி, மற்ற கடவுளரும் பிள்ளையாரை வணங்கியே எந்தச் செயலையும் தொடங்க வேண்டுமாம். பிள்ளையாரின் தந்தையாகிய சிவனும் இதற்கு விதிவிலக்கு ஆகார். அவர் திரிபுரம் எரிக்கத் தேரில் சென்றபோது, பிள்ளையாரை வணங்கிச் செல்லாததால், பிள்ளையார், அவரது தேரின் அச்சைத் தூள்தூளாக்கி விட்டாராம். இதனை, அருணகிரி நாதரின் திருப்புகழில் உள்ளதும் பிள்ளையார் காப்புப் பாடலுமாகிய "கைத்தல நிறைகனி" என்று தொடங்கும் பாடலில் உள்ள

"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா"

என்னும் பகுதியால் அறியலாம். எனவே, பிள்ளையாரை வணங்கும்போது எல்லாருடைய முடியும் பிள்ளையாரின் முடிக்குக் கீழே தாழும்; பிள்ளையாரின் முடி மேலே இருக்கும். இதனால், மற்றவரின் முடிகளில் உள்ள மலர்கட்குமேலே, பிள்ளையாரின் முடிமேல் தும்பை மலர் இருக்கும். அதனால், தும்பை 'முடிமேல்முடி' என்னும் சிறப்புப்பெயர் பெற்றது. சார்பு.

இதற்கு மற்றும் ஒரு பெயர்க் காரணம் கூறமுடியும். வெற்றிக்காகப் போர்மேல் செல்லும் வேந்தர்கள் தம் முடிமேல் தும்பைப் பூவை முடித்துக்கொண்டு செல்வர் என்பது, தமிழ் மொழியில் உள்ள புறப்பொருள் இலக்கணச் செய்தியாகும், இந்த வகையிலும், தும்பைப் பூவுக்கு 'முடி மேல் முடி' என்னும் பெயர் பொருந்தும்.

மூவிலை முன்னை = சிறு முன்னை, மூன்றிலைக்கொத்து உடையதாதலின் இப்பெயர்த்து. வடிவம்.

மூவிலைப் பயறு: நரிப்பயறு மூலிகையும் மூன்று இலைக் கொத்துடையது. வடிவம். இது நரிப்பயறு.

மேகராணிக் குருந்து மரம்: மயில் மேகத்தைக் காணின் ராணிபோல் (அரசிபோல்) மகிழ்ந்தாடும்; ஆதலின் மயில் மேகராணியாகும். அதன் காலடிபோல் இருக்கும் அடி மரத்தையுடைய மயிலடிக் குருந்து மரம் சொல்விளையாட்டாக, மேகராணிக் குருந்து மரம் எனப்பட்டது.

வண்டுணா மரம்: வண்டு தேன் உண்ணாத மலர்களையுடைய வேங்கைமரம் வண்டுணாமரம் எனப்பட்டது. சார்பு.

" சண்பகமும் வேங்கையும் வண்டுணா மலர்மரம்"
(4-81)

என்பது திவாகர நிகண்டு நூற்பா,

வயிரவிச் சாரணை: சத்திக்கு (தேவிக்கு) வயிரவி என்ற பெயர் உண்டு. எனவே, சத்தி சாரணைக்கொடி, சொல்விளையாட்டாக, வயிரவிச் சாரணை எனப்பட்டது.

வள்ளல் கீரை: வள்ளல் என்பதற்கு வல்லமை என்னும் பொருள் உண்டு. "இதிலிருந்து உன் வள்ளல் (திறமை)

தெரிந்து போயிற்றே'' - என்று உலக வழக்கில் மக்கள் ஒருவரைநோக்கி யொருவர் உரைப்பதுண்டு. வல்லாரை என்பதன் அடிச்சொல் 'வல்' என்பதாகும். அதாவது வலிமை தரும் - வலிமை உள்ள கீரை என்பது பொருளாம். எனவே, வல்லாரை, வள்ளல் கீரை எனப்பட்டது. பயன். ஈண்டு

"வல்லாரை கற்பமுண வல்லாரை யார்நிகர்வர்''
என்னும் தேரன் வெண்பாப் பாடல் பகுதி கருதற்பாற்று.

வற்கலப் பட்டை: வற்கலை = மரஉரி. மரஉரியாகப் பயன்படும் பட்டை வற்கலப் பட்டை எனப்பட்டது.

"வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை''
என்னும் கம்பராமாயணம் — கங்கைகாண் படலப் பாடல் பகுதி காண்க.

வாடாப்பூ = பனம் பூ, தென்னம் பூ ஆகியவை வாடுவதில்லை. வடிவம்.

வாத நாசனி: கொடிக் கள்ளி, வாதம் — வாயுபோக்குமாதலின் இப்பெயர்த்து. பயன்.

வானமுட்டி மரம் — வான்முட்டி மரம்: இது நெட்டிலிங்க மரம். இது வானளாவ உயர்ந்து நெட்டையாயிருக்குமாதலின், நெட்டிலிங்க மரம் எனவும், வானமுட்டி மரம் எனவும் பெயர் பெற்றது. அழகுக்காக மாளிகைகளிலும், பூங்காக்களிலும் இது வளர்க்கப்படும். அசோகு வகையைச் சேர்ந்தது இது. வடிவம்.

விடையூர்திச் செடி: விடை = காளைமாடு; ஊர்தி = வாகனம்; காளையை ஊர்தியாக உடையவன் சிவன். சொல் விளையாட்டாகச் சிவகரந்தை இப்பெயர்த்தாயிற்று.

விண்மணிச் செடி: விண்ணில் மணிபோல் (மாணிக்கம் போல்) சுடர் விடுவது சூரியன் (ஞாயிறு); அதனால்

ஞாயிறு விண்மணி எனப்பட்டது. இச்சூரியனை நோக்கித் திரும்பும் சூரியகாந்திச் செடி, விண் மணிச் செடி எனப் பட்டது. சார்பு.

விசுவாமித்திரன் புல்: இது தருப்பை. விசுவம் = எல்லாம்; மித்திரன் = நண்பன் = வேண்டியவன்; எல்லா ருக்கும் வேண்டியவன் — விருப்பமானவன் என்பது விசுவா மித்திரன் என்பதன் பொருள். விசுவாமித்திரன் புல் என்றால் எல்லாரும் விரும்பும் புல் என்பதாம். தருப்பை யில் பத்து வகை உண்டென அபிதான சிந்தாமணி கூறுகிறது. அவை: தெர்ப்பை என்னும் புல், நாணல், யவைப்புல், அறுகு, நெற்புல், விழல், மற்ற தானியங்களின் புல், மருள்மட்டை, சவட்டைக் கோரை, கோதுமைப் புல், ஆகியவை. இவற்றை எல்லாரும் விரும்புவர். தருப்பை என்பதற்கே புல் என்பதே பொருள். தருப்பைக்கு விசுவா மித்திரன் புல் என்பது சார்பால் வந்த பெயர்.

வெகு ரசத்தட்டை: சுவையான சாற்றை (ரசத்தை) உடைய கரும்புத் தட்டை இப்பெயர்த்து. பயன்.

வெந்த நெல்லரிசி: நெல்லை வேக வைக்காமல் குற்றி எடுக்கும் அரிசி பச்சை அரிசி எனப்படும்; வேக வைத்த வெந்த நெல்லிலிருந்து எடுக்கும் அரிசி 'புழுங்கல் அரிசி' எனப்படும். எனவே, புழுங்கலரிசி, வெந்த நெல்லரிசி எனப் பட்டது. உடற்கூறு.

வெளித் தாமரை: வெளி = விண் = ஆகாயம். எனவே, ஆகா(ச)த் தாமரை சொல் விளையாட்டாக வெளித் தாமரை எனப்பட்டது. இது, நீரின் கீழே வேர் விடாமல், ஆகாயத்தை நோக்கியபடி நீரின் மேலேயே இருப்பதால் ஆகாசத் தாமரை எனப்பட்டது. சார்பு.

வேணுபலம்: வேணு = மூங்கில்; பலம் = பயன்; எனவே, மூங்கில் அரிசி வேணுபலம் எனப்பட்டது. சொல் விளையாட்டு.

# மூலிகை வைத்திய அகராதிப் பெயர்கள்

கணி: வேங்கை மரத்தின் பெயர். கணி என்பதன் நேர்ப் பொருள் சோதிடன் என்பது. வேங்கை மலர்ந்தால், திருமணம் செய்யும் காலம் வந்தது என்று கொள்ளப்படும். சோதிடன்போல் காலம் அறிவித்தலின், வேங்கை ஒப்புமை யால் கணி எனப்பட்டது. இ.சா. — "மன்ற வேங்கை மணநாள் பூத்த" — அகநானூறு - 2. "கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்" — பழமொழி நானூறு — 120.

கான விந்திரன்: இது கொடு வேலி. காட்டில் இந்திரன், (அரசன்) போல், தன் விருப்பமாகச் செழித்திருப்பதால் இப்பெயர்த் தாயிற்று. இடம் சார்பு.

குடை: இது வேலமரம். வேலமர இனங்களுள் குடை வேல் என்பதும் ஒன்று. குடைபோல் கவிந்திருப்பதால் குடை எனப்பட்டது. ஒப்புமை.

குதிரைப் பல்லன்: வெள்ளைப் பூண்டின் உள்ளீடு ஒவ்வொன்றும் குதிரைப்பல் போல் இருப்பதால் இப் பெயர்த்தாயிற்று. ஒப்புமை - வடிவம்.

கொடியோன்: இது கற்றாழை. இதனால் உடலுக்குப் பல நன்மைகள் உண்டெனினும், இது, இரும்பை உருகச் செய்து நீறாக்குமாதலின் கொடியோன் எனப்பட்டது போலும். பண்பு. இது இரும்பைப் பொன்னாக்கும் என்று அகத்தியர் குணபாடம் கூறும்:—

"ஆஞ்சிவந்த கற்றாழை அங்கம் குளிர்விக்கும்;
பாய்ஞ்சு அயத்தைப் பொன்னாக்கும் பார்"-

என்பது பாடல் பகுதி,

*சாந்தி*: ஓமம். இது "உடல் வெப்பத்தைச் சாந்தி செய்து நன்னிலையில் வைப்பதால் இப்பெயர்த்து. பயன்."

*சிங்கப் பெருமான்*: இரணியனைக் கொல்ல நரசிங்க வடிவெடுத்ததால் திருமாலுக்கு இப்பெயர் உண்டாயிற்று. துளசி திருமாலுக்கு உகந்த தாதலின், திருமாலுக்கு உரிய இந்தப் பெயர் பெற்றது. சார்பு.

*சேவகன்*: இது பேய் வெங்காயம். சேவகன்போல் பயன்படுவதால் இப்பெயர்த்தாயிற்று போலும். ஒப்புமை.

*தருவிராசன்*: தரு இராசன் = மரங்களின்வேந்தன். பனைக்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது, மக்கள் முயற்சி மிகவும் தேவைப்படாமல் தானே வளர்வதாலும், தன் எல்லா உறுப்புகளாலும் பலவகைப் பயன் தருவதாலும், மரமன்னன் ஆயிற்றுப் போலும். தலைமை. பலவகைப் பயன்களைத் தருவதில் இது மன்னனா யிருத்தலின் தருஇராசன் (தருகின்ற இராசன்) எனப் பெயர்பெற்றது எனவுங் கூறலாமோ?

*தவளம்*: தவளம் என்பதற்கு வெண்மை என்னும் பொருளுண்டு. வெண்மிளகு வெள்ளையா யிருப்பதால் பண்பாகு பெயராய் இப்பெயர் பெற்றது. நிறம்-வடிவம்.

*தனுவிருக்கம்*: இது ஆச்சாமரம். இதற்கு மராமரம் என்ற பெயரும் உண்டு. தனு=வில்; விருக்கம்=மரம். இராமன் தனது ஆற்றலைச் சுக்கிரீவன் நம்புவதற்காகத் தனது வில்லிலிருந்து அம்பு தொடுத்து ஏழு மரா (ஆச்சா) மரங்களைத் துளைத்துக் காட்டினான் என்பது வரலாறு. வில்லால் அம்பு தொடுத்துத் துளைக்கப்பட்ட மரமாதலின், இது தனு விருக்கம் எனப்பட்டது. சார்பு.

தன்மராசா: இது — பாலைமரம். பாலையில் பல வகை உண்டு. பொதுவாகப் பாலை பயன்கள் பல நல்கு வதால் தன்மராசா (தருமராசா) எனப்பட்டது.

திரிபுரம் எரித்தான்: நொச்சி. குப்பை மேனி முதலியன போல் வெப்பம் தருவதாதலின், தீக்கடவுளாம் சிவன் பெயராகிய திரிபுரம் எரித்தான் எனும் பெயரை நொச்சி சொல் விளையாட்டாகப் பெற்றது.

திருட மூலம்-திருட பழம் — இது தேங்காய். திருடம் = வலிமை. தேங்காய் (முற்றியகாய்=பழம்) வன்மையான ஓட்டுடன் இருப்பதால் இப்பெயர்கள் பெற்றது. வடிவம்.

திருடன்: திருமாலுக்கு மாயன் என்னும் பெயர் உண்டு. மாயன் என்பதற்குத் திருடன் என்னும் பொருளும் சொல் லலாம். மாயம் = திருட்டுத்தனம். திருமால் கண்ணன் பிறவியில் வெண்ணெய் திருடினாரல்லவா? விஷ்ணு= திருமால். எனவே, விஷ்ணு கரந்தை சொல் விளை யாட்டாகத் திருடன் எனப்பட்டது.

திரிதேகி: பற்படாம்; இது பித்தம், தலை மயக்கம் ஆகியவற்றுக்கு நல்ல ஒரு பூடு. இது முப்பிரிவாயிருப்ப தால் திரிதேகி எனப்பட்டது. வடிவம்.

இறைவன்: சிவன் இறைவன். எனவே, சொல் விளை யாட்டாகச் சிவனார் வேம்பு இறைவன் எனப்பட்டது.

ஆவி பத்திரம்: ஆவி=புகை; பத்திரம் இலை; எனவே, புகையிலை சொல்விளையாட்டாக இப்பெயர்த்தாயிற்று.

தென்: இதுதென்னை. தென் என்பது அழகு, இனிமை என்றெல்லாம் பொருள்படும். இனிய நீரையும் காயையும் உடைமையால் தென்னை 'தென்' எனப்பட்டது. பண்பு.

தேவி: தேவி சீதேவியைக் குறிக்கும். எனவே, சீதேவி செங்கழுநீர் இப்பெயர்த்து. சொல் விளையாட்டு.

நண்பன்: இது சணல். நண்பனைப் போல் சணல் பல வேலைகட்கும் உதவுவதால் நண்பன் எனப்பட்டது. ஒப்புமை.

நாமம்: நாமம் என்பதற்குக் 'கருமண்தும்பை' என மூலிகை வைத்திய அகராதி பொருள் தந்துள்ளது. வைணவர் நெற்றியில் இடும் நாமத்திற்குத் 'திருமண்' என்னும் மங்கலப் பெயர் உண்டு. கருமண் தும்பை என்னும் பெயரிலும் 'மண்' என்பது உள்ளது. எனவே, சொல்விளையாட்டாகக் 'கருமண் தும்பை' நாமம் எனப் பட்டதோ? நாமம் என்றதும் திருமாலும் அவரது வைகுண்டமும் நினைவுக்கு வரலாம், இதனால், தும்பைக்கு, நாமம், வைகுண்டம், நாமவைகுண்டம் என்னும் முப்பெயர் களும் தரப்பட்டுள்ளன போலும்! சார்பு.

இன்னுமொரு காரணம்: நாமம் என்பது திருமாலின் திருவடியைக் குறிக்கும் ஒரு குறியீடு என்பது ஒரு சாராரின் கருத்து. தும்பைப் பூவின்தோற்றம், காலடியைப் போலவே இருக்கும். இதனால் தும்பைக்குப் 'பாத மலர்' என்ற பெயரும் உண்டு. எனவே, வடிவ ஒற்றுமை கருதித் தும்பைக்கு நாமம் சாத்தப்பட்டிருக்கலாமோ? வடிவம்.

நோவு: இது மஞ்சள். நெடுநேரம் எண்ணியும் தெரிவான காரணம் தெரியவில்லை. நோ = பிணி. ஒருவேளை மஞ்சள் என்றதும், மஞ்சள் காமாலை என்னும் நோவு நினைவுக்கு வருமோ? அதனால் மஞ்சள் சொல்விளையாட்டாக நோவு எனப்பட்டதோ? அல்லது,-நோவு என்பதற்குச் சிதைவு என்னும் ஒரு பொருள் உண்டு. பூசு மஞ்சள் அணு அணுவாகக் கல்லில் இழைத்துச் சிதைக்கப்படுவதால் மஞ்சள் இப்பெயர் பெற்றதோ? இருவர் வாய்ச் சண்டை

போடும்போது, உன்னைச் சதை சதையாகப் பிய்த்து விடுவேன் எனத் திட்டிக் கொள்வதுண்டு. ஒரே வெட்டில் சாகடிப்பதனினும் சதை சதையாகப் பிய்ப்பதால் நோவு (நோக்காடு) மிகுதியாகும். அதுபோல் மஞ்சள் சிதைக்கப் படுவதால் இப்பெயர் பெற்றதோ? சார்பு.

பல்லிணர்: இணர் = தளிர், பூங்கொத்து. சதுரக்கள்ளி பல தளிர்க் கொத்துக்களை உடைமையால் சினையாகு பெயராய்ப் பல்லிணர் எனப்பட்டது. வடிவம்.

பிண்ட புட்பம்: அசோகு இது. அசோகு பிண்டமாக-திரட்சியாக-கொத்தாகப் பூக்கும். அதாவது, அசோக மலர்கள் அடர்த்தியாக அமைந்து, செயற்கையாகத் திரட்டிக் கட்டித் திருமணத்தில் கொடுக்கும் பூச்செண்டுபோல் இருக்கும். இப்படியிருப்பதுதான் பிண்டம். எனவே, அசோகு, பிண்ட புட்பம் (மலர்) உடைமையால் சினையாகு பெயராக இப்பெயர் பெற்றது. பயன்.

புட்ப காதம்: மூங்கில் இது. காதம் என்பது நீண்ட தொலைவைக் குறிக்கும். இங்கே, நீண்டகால இடைவெளி யைக் குறிக்கிறது. மூங்கில்களுள் சில, தோன்றிய இருபது ஆண்டிலிருந்து ஐம்பது ஆண்டு வரையும் உள்ள கால எல்லைக்குள் எப்போதாவது ஒரேமுறை பூத்துப் பின் அழியும்; சில இனங்கள் மூன்றாண்டுகட்கு ஒருமுறை பூக்கும். இவ்வாறு, பூக்கும் கால இடைவெளி, இட இடைவெளி போல் நீட்டித்திருப்பதால், மூங்கில் புட்ப காதம் எனப் பட்டது. காலம்.

புறம்பணை: புறம்பணை முல்லை நிலத்தைக் குறிக்கும். இந்நிலத்தில் முல்லைக்கொடி வளர்வதால் இடவாகுபெய ராகப் புறம்பணை எனப்பட்டது. சார்பு.

பொற்காசு: இது காணம் என்னும் கொள்ளுப் பயறாகும். இப்பயறு ஒவ்வொன்றும், பண்டைக்காலத்தில்

வடிக்கப்பட்ட சிறுசிறு பொற்காசுபோல் இருக்கும். நிறத்தாலும் வடிவத்தாலும் இது பொற்காசு போன்றிருத்தலின் பொற்காசு எனப்பட்டது. ஒப்புமை.

முடிமேலழகி = இது கோடகசாலை என்னும் ஒரு வகைப் பூடு. இதன் உச்சி-முடி அழகாயிருக்கும். இதன் ஒவ்வொரு சிம்பின் உச்சியில்தான் பூக்கதிர்கள் இருக்கும்; அதனால், முடிமேல் அழகி எனப்பட்டது. பயன்.

வைத்தி: இது திப்பிலி. வைத்தியநாதன், வைத்திய லிங்கம் என்னும் பெயர்கள் உடையவர்களைச் சுருக்கமாக 'வைத்தி' என அழைப்பது வழக்கம். இங்கேயும் வைத்தி என்பதை வைத்தியன் — வைத்தியநாதன் என விரித்துக் கொள்ள வேண்டும். திப்பிலி பெரிய வைத்தியன் — வைத்திய நாதன் ஆகும். திப்பிலி வைத்தியன், எல்லா நோய்களையும் போக்கி உடலுக்கு வலிமை தருவானாம். பாடல்:

தேரன் வெண்பா:

"கட்டி யெதிர்நின்று கடுநோ யெல்லாம் பணியும்;
திட்டி வினையகலும், தேகமெத்த — புட்டியாம்;
மாமனுக்கு மாமனென மற்றவர்க்கு மற்றவனாம்
காமனெனுந் திப்பிலிக்கும் கை".

எல்லாருக்கும் விருப்பமானது என்னும் பொருளில் திப்பிலி காமன் எனப்பட்டது. மாமனுக்கு மாமனாகவும் மற்றவர்க்கு மற்றவராகவும் இருப்பது என்றால், யார் யாருக்கு எப்படியெப்படி உதவ வேண்டுமோ — அப்படியெல்லாம் திப்பிலி உதவும் – என்பது கருத்து. பாடலின் இறுதியிலுள்ள 'கை' என்பதைப் பாடலின் முதலில் சேர்த்து, "கடுநோயெல்லாம் திப்பிலிக்குக் கைகட்டி எதிர் நின்று பணியும்" — எனக் கொண்டுகூட்டிப் பொருள்

செய்க. எனவே, திப்பிலிக்கு வைத்தி என்னும் பெயர் பொருந்தும். பயன்.

வைத்திய மாதா: ஆடாதோடை இது. மருத்துவம் செய்யும் தாயாக நின்று ஆடாதோடை நோய் நாடாமல் செய்துவிடுமாம். பெயர் தெரியாத மருத்துவ ஓலைச் சுவடியொன்றில் உள்ள பாடல்:

"ஆடாதோடையின் குணத்தை அடைவுடன்
உரைக்கக்கேளும்;
பாடாத நாவும் பாடும்; பரிந்துமே தோடம்போகும்;
வாடாத பித்தம் சேத்ம ரோகங்கள் விலகிப்போகும்;
நாடாது வியாதி தானும்; நல்விழிக் குழலினாளே"

ஆடாதோடைக்குப் பயன் பற்றி வைத்திய மாதா என்னும் பெயர் வந்தது.

# நெல்லை சங்கரலிங்க முதலியாரின் 'ஜூபிலி' தமிழ்ப் பேரகராதியில் உள்ளவை

ஆணாய்ப் பிறந்தோன் = ஆவாரைச் செடி இது. இதன் பெயர்க்காரணம் தெளிவாய்த் தெரியவில்லை. பின்வரும் காரணம் ஓரளவு பொருந்தலாம். மக்களுள் பெண்களினும் ஆண்கள் உருவத்தில் உயர்ந்தவர்கள். அதுபோல, செடிகளுக்குள் ஆவாரை ஓரளவு உயர்ந்த செடி எனலாம். இது நன்கு வளர்ந்து பதினாறு அடி உயரங்கூட இருக்கும். இக் காரணத்தால், இது ஆணாய்ப் பிறந்தோன் எனும் பெயர் பெற்றிருக்கலாம். வடிவம்.

ஆளையடிச்சான்: புளியஞ்சிம்பு ஒடியாதது; வளைந்து கொடுக்கக்கூடியது; உறுதியானது. இதனால் ஆளையடித் தால் தப்பமுடியாது; வலி மிகுதி — எனவே, ஆளையடித்து வருத்துவதற்கு ஏற்ற புளியமரம் ஆளையடிச்சான் எனப் பட்டது. சார்பு.

இந்திராணி கை: இது நொச்சிமரம். இந்திராணி = இந்திரன் மனைவி. நொச்சி ஐந்திலைகளைக் கொத்தாக உடைய மரம். கைவிரல்களும் ஐந்துதானே! இந்திராணி கை அழகாக இருக்கும். இந்திராணி கை போன்ற அழகிய ஐந்திலைக் கொத்துடைய நொச்சி வடிவால் இந்திராணி கை எனப்பட்டது.

உச்ச தரு: உச்சம் = உயரம்; தரு = மரம். தென்னை உயரமான மரமாதலின் இப்பெயர் பெற்றது. உயரமாய்

இருப்பவரைப் பார்த்துத் தென்னைமரம் போல் வளர்ந்து விட்டார் எனல் வழக்கம். வடிவம்.

உலகம் காத்தான்: இது அவுரிச்செடி. அவுரி இலையி லிருந்து நீலம் - நீலக் கட்டி உண்டாக்கப்படுகிறது. நீல நிறத் திருமால் உலகைக் காக்கும் (காத்தல்) கடவுள். எனவே, அவுரிக்கு உலகம் காத்தான் எனும் பெயர் ஏற்பட்டது. நிறம்.

கடலடைத்தான்: அபினி, கஞ்சா ஆகியவை இப்பெயர் பெற்றுள்ளன. கடல் தாண்டி - ஒரு நாடு விட்டு இன்னொரு நாட்டிற்கு அனுப்பும் வணிகம் அரிது. இது குறித்து, தமிழ்க் கலைக் களஞ்சியம் - முதல் தொகுதியிலுள்ள ஒரு தொடர் அப்படியே வருமாறு:—

''அபினி வியாபாரம், புழங்குதல் முதலியவை குறித்து எல்லா நாடுகளிலும் கண்டிப்பான சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன''-

இதனால், அபினி - கஞ்சா ஆகியவை 'கடலடைத் தான்' என்னும் பெயர் பெற்றிருக்கலாமோ! சார்பு.

கண்டக பலம்: கண்டகம் = முள்; பலம் = பழம். பலாப்பழத்தின் மேலே முள் போன்ற உறுப்பு நிறைய இருப்பதால் இப்பெயர்த் தாயிற்று. வடிவம்.

கப நாசனி: இது தேற்றான் மரம். கபத்தைப் போக்கு வதால் இப்பெயர்த்து. பயன். அ.கு.பா. பாடல்:

'' தேற்றான் கனிதனக்குச் சேயிழையே, வண்காசம்'
தோற்றாது ஒழியும்; சுவாசமும் போம்''—

காசம், சுவாச இரைப்பு = ஆகியவை கபத்தைக் குறிக்கும்.

காஸ்மீரம்: குங்குமப்பூ காஸ்மீரத்தில் மிகுதியாக உண்டாகி எங்கும் அனுப்பப்படுவதால், காஸ்மீரம் எனப் பட்டது. இடம்.

கிருட்டிண பாணம்: எட்டிமரம் இது. கிருட்டிணன் இறுதிக் காலத்தில், ஒரு மரத்தில் அமர்ந்திருந்த போது, அவனது காலடியின் அசைவை ஒரு புறா என எண்ணிச் சரன் எனும் வேடன் அம்பு தொடுக்க, அது கிருட்டிணன் மேல்பட அதனால் உயிர் துறந்தான். கிருட்டிணன் அமர்ந் திருந்த மரம் எட்டி மரம் என்று சிலரும் வேறு மரம் என்று சிலரும் கூறுவர். கிருட்டிணன் அமர்ந்தது எட்டி மரமா யின், கிருட்டிணன் மேல் பாணம் (அம்பு) தொடுக்கப்பட்ட மரம் என்னும் பொருளில், இப்பெயர் எட்டி மரத்திற்குப் பொருந்தும்; இல்லையேல் இல்லை. சார்பு. தரையில் படுத்திருந்தபோது மான் என எண்ணி வேடன் அம்பு எய்ததால் கிருட்டிணன் இறந்தான் என்பாரும் உளர்.

குடல் பற்றாப் பிஞ்சு = காய்களின் இளம் பிஞ்சுகளில் குடல் போன்ற பகுதி தோன்றிச் சரியாக உருவாகவில்லை யாதலின், பொதுவாக, இளம் பிஞ்சு, குடல் பற்றாப்பிஞ்சு எனப்படும். வடிவம்.

குதிரைக்குளம்பு = நீர்க் கரைகளில் வளரும் 'நீர்க்குளிரி' என்னும் பூண்டின் அடிப் பகுதி குதிரைக் குளம்புபோல் இருக்குமாதலின், இப்பெயர் பெற்றது. ஒப்புமை.

குரு உபதேசம் = ஓமம் இது. குரு உபதேசம் உயிருக்கு நலம் புரிவதுபோல், ஓமம் உடலுக்கு நலம் புரிவதால் குரு வுபதேசம் எனப்பட்டது எனலாம். ஒப்புமை. மற்றுமொரு காரணம். ஓமம் என்னும் சொல்லுக்கு வேள்வி (யாகம்) என்னும் பொருளும் உண்டு. குரு உபதேசிக்க இயற்றும் ஓமம் என்னும் பொருளில் சொல் விளையாட்டாக இப்பெயர் பெற்றது எனவும் கூறலாமன்றோ? 'ஓம்' என்னும் பிரணவமும் கருதத்தக்கது.

குல வலி = இலந்தை யிது. குலம் என்பது இங்கே இலந்தை இனம்; வலி = வலிமை. 80 அடி உயரமும், 23 அடிகொண்ட அடியும், $\frac{3}{4}$ அங்குலத் தடிப்புள்ள மேல் பட்டையும் உடைய இலந்தை மரம் மத்தியப் பிரதேசத்தில் இருந்ததாம். இலந்தை மரம், வலிமை – திண்மை – உறுதி - கடினம் உடைய தாதலின் இது 'குலவலி' (வலிமை கொண்ட மர இனம்) என்னும் பெயர் பெற்றிருக்கலாம். வடிவம்.

குளிர்ந்து கொல்லி = இது கோவைக் கொடி. கோவை, உடலுக்குக் குளிர்ச்சி தந்து மற்ற பிணிகள் பலவற்றைக் கொல்லுவதால் இப்பெயர்த்து. பயன். அ.கு.பா. பாடல்:

" கண்ணும் குளிர்ச்சி பெறும் ... .. நண்ணுடல
மீதிலார் வெப்பு அகலும்; வீழா நீர்க்கட்டு ஏகும்;
கோதிலாக் கோவை யிலைக்கு"—

" வாயின் அரோசகம் போம்; மாறா அழலையறும்" —

கண் குளிர்ச்சி, உடல் வெப்பம் அகற்றல், நீங்காத அழலையை (வெப்ப அழற்சி) நீக்கல் முதலிய பயன்கள் உள்ளமை காண்க.

கூர்ச் சேகரம்-கூர்ச்ச சேகரம். இது தென்னை. கூர்ச்சு-கூர்ச்சம் = கூர். சேகரம் = தலை-உச்சி. தென்னை மரத்தின் உச்சியில் புதுக் குருத்து மட்டைகள் விண்ணை நோக்கிக் கூர்மையாய் நிற்பதால் இப்பெயர் பெற்றது. வடிவம் (காண்க உச்ச தரு).

கொழுக்கட்டை = இது மோதக வல்லிமரம். மோதகம் என்றால் கொழுக்கட்டை; எனவே, சொல்விளையாட்டாக இம்மரம் கொழுக்கட்டை எனப்பட்டது.

கொறடா = சவுக்கு மரம் இது. அடிக்கும் சவுக்கு, குதிரைச் சவுக்கு ஆகியவற்றிக்குக் கொறடா என்னும்

பெயர் உண்டு. இப்பெயர் சொல்விளையாட்டாகச் சவுக்கு மரத்திற்குத் தரப்பட்டுள்ளது.

கோடைக்கு வாடன்=ஆவிரை இது. கோடையில் வெயிலில் இது வாடுமாகையால் இப்பெயர்த்தாயிற்று. காலம்.

கோபி: கரு நொச்சி இது. கோபி=கோபம் உடையவன். கறுப்பு-கருமை கோபத்தைக் குறிக்கும்.

"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள" (76) என்பது தொல்காப்பிய - உரியியல் நூற்பா. வெகுளி=கோபம். எனவே கருநிற நொச்சி, சொல்விளையாட்டாகக் கோபி எனப்பட்டது.

சடைக்கந்தம்: கந்தம்=மணம். மணத்துடன் சடை சடையாகத் தோற்றமளிக்கும் வசம்பு இப்பெயர்த்து. வடிவு.

சட்டி வட்டு: வட்டு=திரண்ட வடிவம். கப்பல் வள்ளிக் கிழங்கு சட்டி போன்ற திரள் வடிவமுடைய தாதலின் சட்டி வட்டு எனப்பட்டது. வடிவம்.

சதா மூர்க்கம்: பாம்பைக் கொல்லும் தன்மையுடைய பாம்பு கொல்லிப்பூடு, சதா மூர்க்கமானது எனலாமன்றோ? பண்பு.

சத்த பர்ணி: சத்தம்=ஏழு; பர்ணி=இலையுடையது. ஏழிலைக் கொத்துடைய ஏழிலைப் பாலை, வடமொழியில் சத்தபர்ணி எனப்படும். மொழி பெயர்ப்பு- வடிவம்.

சவுரி: இது முதியார் கூந்தல் என்னும் மர இனமாகும். சவுரி என்பது கூந்தல், மயிர். எனவே, சொல் விளையாட்டாக, முதியார் கூந்தல், சவுரி எனப்பட்டது.

சிஞ்சை வித்துரி = இது புளியங்கொட்டைத் தோல். சிஞ்சை = புளி; வித்து = விதை-கொட்டை; உரி = தோல். எனவே, இது சொல்விளையாட்டாக வந்த பெயராகும்.

சிநேக பலம் = எள்ளு (எள்) என்னும் தானியம் சிநேகிதன் (நண்பன்) போல உதவுவதால் சிநேகபலம் எனப்பட்டது. "வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு" என்பது ஒரு பழமொழி. வாணியன் எள்ளைச் செக்கில் இட்டு ஆட்டி எண்ணெய் தருபவன். இது நல்லெண்ணெய். தமிழ் நாட்டு மக்கள், கிழமைக்கு (வாரத்திற்கு) ஒரிரு முறை நல்லெண்ணெய் தேய்த்துத் தலை குளிப்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

சிரஞ்சீவி = இது இலவமரம். இலவம் பஞ்சு மெத்தென்றிருக்கும்; விரைவில் நீரில் நனையாது; எதிலும் ஒட்டிக் கொள்ளாது. எனவே, இலவம் பஞ்சால் தலையணை, மெத்தை செய்வதுண்டு. ஔவையார் ஆத்திசூடியில் 'இலவம் பஞ்சில் துயில்' (26) என்று கூறியிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது. சிரம் = தலை. தலையணையாக உதவுவது இலவம் பஞ்சு என்பதால், சொல்விளையாட்டாக இதற்குச் சிரஞ்சீவி எனும் பெயர் வந்திருக்குமோ? வேறு பொருத்தமான காரணம் தெரியவில்லை சிரஞ்சீவி என்பதற்கு நீண்ட நாள் வாழ்பவர் என்பது பொருள். இம்மரம் நீண்ட நாள் இருப்பதானாலேயே இப்பெயர் பொருந்தும் (?)

சிருங்காரம் = கிராம்பு இது. சிருங்காரம் = காதல் சுவை-புணர்ச்சி. கிராம்பு காம உணர்ச்சியைத் தூண்டுமாதலின் 'சிருங்காரம்' எனப்பட்டது. பயன்.

சிவாலயம் = செந்துளசி இது. சிவப்பாயிருப்பதால், செந்நிறச் சிவனது இருப்பிடமாக - சிவாலயமாக இது கூறப்பட்டுள்ளது. நிறம் வடிவம்.

சீவ சாதனம்: சீவன் = உயிர்; சாதனம் = ஆதாரம். உயிர் பிழைக்க ஆதாரமாக உதவும் 'தானிய வகைகள்' சீவ சாதனம் எனப்பட்டன. பயன்.

சுகப் பிரியை: சம்பு நாவல் சுகத்தையும் பிரியத்தையும் தருவதால் இப்பெயர்த்து. பயன்.

சுண்ண அரசி: இது முல்லை. சுண்ணம் என்பதற்கு மலர் என்னும் பொருள் பிங்கல நிகண்டில் கூறப்பட்டுள்ளது. முல்லை, மலர்களின் அரசியாயிருப்பதால் இப்பெயர்த்து. தலைமை. இதற்கு இன்னும் ஒரு பெயர்க் காரணம் கூறலாம். சுண்ணம் என்பதற்கு வெண்மை எனச் சார்புப் பொருள் கொண்டு, வெண்ணிறத்தில் முல்லை சிறந்தது என்றும் கூறலாம். பெண்களின் வெண்பல்லுக்கு முல்லை ஒப்பல்லவா?

சுப்பிரமணியம்: மிளகு இது. சுப்பிரமணியர் மலைமேல் இருப்பவர். ஈண்டு தொல்காப்பியம் அகத்திணையியலில் உள்ள

"சேயோன் மேய மைவரை உலகமும்" (5)

என்னும் நூற்பாப் பகுதி எண்ணத்தக்கது. மிளகும் மலையில் வளர்வது; அதனால் மிளகுக்கு மலையாளம், மலையாளி என்னும் பெயர்கள் உண்டு. எனவே, இட ஒப்புமையால் மிளகு சுப்பிரமணியம் எனப்பட்டது.

சுராகாரம்: இது தென்னை. சுரர் + ஆகாரம் = சுராகாரம். சுரர் = தேவர். தேவர்களும் மது அருந்துவர். சுரருக்கு மதுவாகிய ஆகாரமாயிருப்பதால், தென்னை சுராகாரம் எனப்பட்டது. சார்பு. ஆகாரம் என்பதற்கு உருவம் என்ற பொருளும் உண்டு. தென்னை, தேவர் உலகம் வரையும் உயரமாக வளர்வது என்ற உயர்வு நவிற்சிப் பொருளும் கூறலாமோ?

சுருங்கி: தொட்டால் சுருங்கும் 'தொட்டால் சிணுங்கி' இது. வடிவம்.

சுவர்ண வர்ணன்: சுவர்ணம் = பொன், மஞ்சள் பொன் வர்ணம் (நிறம்) உடையதாதலின் சுவர்ண வர்ணன் எனப்பட்டது. நிறம், வடிவம்.

சுள்ளி வேகன்: சுள்ளுதல் என்றால் உறைத்தல். "அப்பாடா! இந்தக் குழம்பு சுள்ளென உறைக்கிறது" என்று கூறக் கேட்டிருக்கலாம். 'சுள்' என்பது ஒரு சுவைக் குறிப்புச் சொல். மிளகாய் சுள்ளென உறைப்பது; உண்டார்க்கு ஒருவகை வேகம் = விருவிருப்பு தருவது. ஆதலின் "சுள்ளி வேகன்" எனப்பட்டது. பயன்.

சூதவைரி: சூதக் கட்டத்தைப் போக்குவதால், மூவிலைக் குருந்து, சூதவைரி எனப்பட்டது. பயன்.

சூரியமணி: சூரியகாந்தி. வேறோரிடத்தில், விண்மணி எனச் சூரியன் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். சூரியமணியாகிய ஞாயிறை நோக்கித் திரும்புவதால், சூரிய காந்தி சூரியமணி எனப்பட்டது. சார்பு. சூரியகாந்திக்கு 'நேரங்காட்டி' என்னும் பெயரும் உண்டு. எனவே, சூரிய காந்திப் பூ, சூரியன் பக்கம் சாய்ந்து, சூரியன் உதவியால், மக்கட்கு மணி (நேரம்) அறிவிப்பதால் சூரிய மணி எனப் பட்டது என்றும் கூறலாம்.

செத்தல்: உலர்ந்த இலைச் சருகுகளைச் செத்தை எனக் கூறுவதுண்டு. அதுபோல, உலர்ந்த தேங்காயை அதாவது, கொப்பரை வேறு கொட்டாங்கச்சி வேறு எனப் பிரித்துப் பார்க்கும் அளவுக்கு உலர்ந்த தேங்காயைச் 'செத்தல்' என்றனர். உடற்கூறு.

செந்து நாசனம்: செந்து = அஃறிணை உயிரிகள், சிறுசிறு உயிரிகள். பெருங்காயம் செந்துக்களைக் கொல்லு

மாம். அதனால் செந்து நாசனம் எனப்பட்டது. பாடல்-தேரையர் குணபாடம்:

"... சருவ காளம், விருச்சிகம் கீடம்மா......
உதிரப்பூச்சி, சிலேத்துமத் துறும்வலி......
மாயும் நாறுநற் காயம் கிடைக்கினே"

காளம் = பாம்பு; விருச்சிகம் = தேள்; இவற்றின் நஞ்சைப் போக்கும். உதிரப் பூச்சி = குருதியிலே உள்ள வேண்டாத-நோய் விளைவிக்கும் சிறு நுண் உயிர்கள். பெருங்காயத் தால் இவை மாயுமாம்.

சேஷையரிசி: இந்தக் காலத்தில், மங்கல நிகழ்ச்சிகளின் போது, வாழ்த்துதலின் அறிகுறியாக, நெல்லரிசி சேஷையரிசியாக (வாழ்த்தரிசியாக) இடப்படுகிறது. இதனினும், அறுகம்புல் அரிசியைச் சேஷையாக இடுதலே சிறந்ததென முன்பு பின்பற்றப்பட்டு வந்தது. அதனால் அறுகம்புல் நுனியில் இருக்கும் அறுகரிசி சேஷையரிசி எனப்பட்டது. பயன்.

தபன மணி: தபனன் = ஞாயிறு. எனவே தபனனை நோக்கும் சூரியகாந்தியின் பெயர் இது. சார்பு.

தரு சீவநம்: தரு = மரம்; மரம் சீவிப்பதற்கு - வாழ்வதற்கு வேண்டிய நீர், ஆற்றல் பொருள் ஆகியவற்றைக் கொண்டுவந்து கொடுப்பது வேர். எனவே, மர வேர் இப் பெயர் பெற்றது. பயன்.

தாலபத்திரம் = தாலம் = புல்மரம் — பனை. பனையோலை தால பத்திரமாம். மொழிபெயர்ப்பு. சொல் விளையாட்டு.

திரிபுரம்: திரிபுரம் என்றதும் எரிபட்ட தீ - வெப்பம் நினைவுக்கு வரும். சத்தி சாரணை (சாறணை-சாறடை)

வெப்பம் தருவதால் இப்பெயர் பெற்றது. சொல் விளையாட்டு.

அ.கு.பா.பாடல்:

" சீதம், சலதோடம், தேமல், தழும்பு, குன்மம்,
வாதம், சிறுசிரங்கு, வன்மேகம் — ஓதரிய
காசமுதல் நோயெல்லாம் கான்சாறடைக் கிழங்கால்
நாசமுறும் என்றே நவில்"

சீதம், சலதோடம், காசம் போகும் என்பதால் இதன் வெப்பம் புலப்படும்.

திரியட்சி: திரி = மூன்று; அட்சி = கண் உடையது; மூன்று கண்ணுடைய தேங்காய். வடிவம்.

திருகுபலை: வலமாகத் திருகி முறுக்கியிருக்கும் வலம்புரிக்காய் (நந்தியாவட்டம்) இது. வடிவம்.

தீபம்: இரவில் நெருப்பு எரிவதுபோல் தோன்றும் இரவு எரி மரம் (சோதிமரம்) இது. வடிவம்.

துண்டு: புகையிலை பயன்படுத்துவோர், புகையிலை வணிகர், புகையிலை விளைப்பவர் ஆகியோரிடை வழங்கப் படும் சொல் 'துண்டு' என்பது. இரண்டு பெரிய சிப்பம் — அல்லது நான்கு சிறிய சிப்பம் கொண்ட ஒரு புகையிலைக் கட்டு, ஒரு துண்டு எனப்படும். துண்டிக்கப்பட்ட — பிரிக்கப் பட்ட ஓர் அளவு துண்டு ஆகும். சார்பு.

தொங்கி: தொங்குதல் என்பதற்குத் திருடுதல் என்னும் பொருள் உண்டு. தொங்கன் என்பதற்குக் கள்ளன் என்னும் பொருள் யாழ்ப்பாண அகராதியில் கூறப்பட்டுள்ளது. தொங்கன் கள்ளன் எனில், இதன் பெண்பாலாகிய தொங்கி கள்ளி என்பது புலனாகும். கள்ளத்தனம் உடையது கள்ளி. இப்பெயர், கள்ளிச் செடிக்கு இருபொருள் தரும் சொல் விளையாட்டாகச் சூட்டப்பட்டுள்ளது.

நட்சத்திரக் கண்டகி: கண்டகம் = முள்; கண்டகி = முள் உடையது. அன்னாசிப் பழம் மேலே முள்போன்ற உறுப்பு உடையது. அது நட்சத்திர (விண்மீன்) வடிவில் தோற்றமளிக்கிறது. அதனால், அன்னாசி நட்சத்திரக் கண்டகி எனப்பட்டது. வடிவம்.

நரம்பன்: புகையிலை வகையில், நரம்பு தடிப்பாக நிரம்ப உள்ள ஒருவகை உண்டு. எனவே, அவ்வகைப் புகையிலை ‘நரம்பன்’ எனப் பெயர் பெற்றது. நரம்பும் சுருட்டில் சேர்க்கப்படுவ துண்டு.

நாகேசுரம்: இது சிறுநாகப்பூ. நாகம் படம் எடுத்த வடிவில் இருக்கும் இது. நாகேசுரன் = சிவன். சிவன் சோயில் உள்ள திருநாகேசுரம் என்னும் ஊர் ஒன்றும் உண்டு, எனவே, சொல்விளையாட்டாக இப்பெயர் ஏற்பட்டது.

நான்முகப் புல்: இது நாணல். பத்துவகைத் தருப்பை களுள் நாணல் புல்லும் ஒன்றென்பது ‘விசுவாமித்திரன் புல்’ என்னும் தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது. மக்கட்குப் புரோகிதச் சடங்கு செய்யும் ஐயரிடத்தில் தருப்பை கை யிருப்பில் இருக்கும். தேவர்களின் புரோகிதர் நான்முகன் (பிரமன்). சிவனது திருமணத்தை நடத்தி வைத்தவர் நான்முகனே. எனவே, அவரிடத்தும் தருப்பை இருக்கும். இத்தகைய சார்பு காரணமாக, நாணல் புல் நான்முகப் புல் எனப் பெயர் பெற்றிருக்கலாம். சார்பு.

நீராடல்: தேங்காய் இது. தேங்காய் வாங்குபவர்கள், நல்ல தேங்காயா என்று அறிய ஆட்டிப்பார்ப்பது வழக்கம். நீராடுவது தெரிந்தால் நல்ல தேங்காய் எனப்படும். இவ்வாறு, நீராடுவதால் தேங்காய் இப்பெயர்த்தாயிற்று. உடற்கூறு.

நீர் நாய்: மாமரம் இது. நீர் நாயின் மேல் தோல் அமைப்பும், நிறமும் மாமரத்தோடு ஒத்திருத்தலின், மாமரம் நீர்நாய் எனப்பட்டது. ஒப்புமை. நீர்நாய் உடம்பில் மேல்தோல் பிரம்புக்கொடிபோன்ற கோடுகளை உடையதாயிருக்கும். இதனைக் குறுந்தொகையில் உள்ள

"அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉம் ஊரன்" (364—1, 2)

(பவர் = கொடி, வரி = கோடு, புறம் = மேல் பகுதி) என்னும் பாடல் பகுதியால் அறியலாம். நீர்நாய் பிரப்பங் கொடிப் புதரில் தங்கிவாழும் என்பதை அகநானூற்றில் உள்ள,

"வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதுஅரில் செறியும்"-(6-18,19)

(அரில்=புதர்) என்னும் பாடல் பகுதியால் அறியலாம்.

பல்லி எங்கு எதில் தங்கி வாழ்கிறதோ அதன் நிறமாயிருக்கும். இவ்வாறு உயிரிகள் பலவும் இருக்கும். அதே போல், பிரப்பம் புதரில் வாழும் நீர்நாயின் உடலும் பிரப்பங்கோடு உள்ளதுபோல் இருக்கும். பிற வலிய விலங்குகளினின்றும் தப்பிக்க, உருவம் தெரியாதபடி இப்படியிருக்கும். இதனை 'இயற்கையின் தேர்வு' (Selection of Nature) என்பர். எனவே, இந்த நீர்நாயின் மேல்தோல் போன்ற மேல்பட்டையுடைய மாமரம் 'நீர்நாய்' எனப் பட்டது எனலாம்.

இதற்கு வேறொரு காரணமும் கூறலாம். நீரில் மறைந்திருந்து வாளை மீனைப் பிடிக்கும் திருட்டு நீர்நாய் போல், சூரபதுமன் முருகனை ஏய்க்கக் கடலில் பொய் மாமரமாக வடிவுகொண்டு நின்றானாதலின் ஒப்புமையால் இப்பெயர்த்தாயிற்று என்றும் கூறலாமோ?

நீலபத்திரம்: நீலமும் கருமையும் ஒப்பானது. எனவே, கருங்குவளை நீலபத்திரம் எனப்பட்டது. கருங்குவளைக்கு நீலோற்பலம் என்னும் பெயரும் உண்டு. நிறம்.

நீலப்புடவி: விஷ்ணு (திருமால்) நீலவண்ணன்; எனவே, விஷ்ணு கரந்தை நீலப்புடவி எனப்பட்டது. நிறம்.

நீல புட்பம் — நீல புட்பிகை: நீலநிறப் பூவுடைய அவுரி, எட்டி, விஷ்ணு கரந்தை ஆகியவை இப்பெயர்கள் பெற்றன. நிறம்.

நெடுமி: நெடுமையாக — நீண்டதாக இருக்கும் எந்த மரமும் நெடுமி எனப்படும்.

பத்திர யௌவனம்: பத்திரம் = இலை; யௌவனம் = இளமை; இலையின் இளமை பத்திரயௌவனம் ஆகும். இலையின் இளமை என்பது தமிழில் 'தளிர்' என்பதாகும். வடமொழியில் உள்ள பத்திர யௌவனம் என்னும் பெயரைவிட, தமிழில் ஒரே சொல்லாக உள்ள தளிர், துளிர் என்பன சுவையாக உள்ளன அல்லவா? வடமொழிப் பெயர்.

பரம்பிரம்ம சைலம்: அவுரிச் செடியிது. பரப்பிரம்மம் = கடவுள் = இங்கே திருமால்; சைலம் = மலை; திருமால் அமர்ந்திருக்கும் மலை என்பது பொருள். அவுரி நீலம் தருவதாதலின், அதனை, நீல வண்ணனாகிய திருமாலின் மலை என்றனர் போலும்!

நீலம் – கருமை – பச்சை என மூன்று நிறமாகவும் திருமால் சொல்லப்படுவார். இம்மூன்றையும் ஒத்த நிறங்களாகச் சொல்வது இலக்கிய மரபு. ஈண்டு, தொண்டரடிப் பொடி யாழ்வாரின் திவ்வியப் பிரபந்தப் பாடல் பகுதியொன்று கருதற்பாலது:-

"பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய்க்
கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே .." (873)

திருமாலின் தோற்றம் பச்சை மலைபோல் இருக்கிறதாம். இலக்கிய மரபின்படி இதனை நீலமலை என்றும் கொள்ளலாம். நீலம் தரும் அவுரி, பரப் பிரம்ம சைலம் எனப்பட்டது. சொல் விளையாட்டு - ஒப்புமை - நிறம்.

பலவிளக்கு: செந்நிறப் பூ உடைய 'செந்நாயுருவி' பல விளக்கு எரிவதுபோல் இருப்பதால், 'பல விளக்கு' எனப் பட்டது. வடிவம்.

பலினி: பலம் = பழம். காய்த்துப் பழுத்திருக்கும் மரம் பொதுவாகப் பலினி எனப்படும். பயன், வடிவம்.

வாதமூலி: வாதம் = வளி—வாய்வு. நெருஞ்சில் வாதம் போக்குவதால் வாதமூலி எனப்பட்டது பயன்.

அ.கு.பா. பாடல்:

"நல்ல நெருஞ்சிலது நாளுங்கிரி சரத்தை -...
கூனுறு மெய்வாதமும் போக்கும்"—

பாதம்: மரத்தின் அடியில் வேர் இருப்பதால், மரவேர் பாதம் எனப்படும். பாதம் என்பது மக்களின் அடிப்பகுதி யாகிய கால் அல்லவா? மக்கள் தம் காலால் (பாதத்தால்) இடம் விட்டு இடம் பெயர்வர். மரம் இடம் விட்டு இடம் பெயர முடியாது; அதனால், மரம் நிலைத்திணை (அசரம்) எனப்படும். ஆயினும், மரத்தின் வேர்கள் மக்களின் கால்கள் போல், நிலத்திற்குள்ளே, பல இடங்கட்கும் பெயர்ந்து சென்று, நீர், ஆற்றல் பொருள் ஆகியவற்றைக் கொண்டு வந்து மரம் வளர உதவுவதால் 'பாதம்' எனப்பட்டன. ஒப்புமை.

புலியடிக் குலை: வாழைக் குலை. புலி அடியைப் போல் இருப்பதால் இப்பெயர்த் தாயிற்று. வடிவம்,

பூதகி: அத்திக் காய் இது. பூதகி = பூதம்போல் பருத்து இருப்பவள். அத்திக் காயைவிட மிகப்பெரிய காய்கள் உள. ஆனால், பூவாது காய்க்கும் தன் இனமாகிய ஆல், அரசு ஆகியவற்றின் காய்களினும் அத்திக்காய் பருத்திருப்பதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். அல்லது, - அத்தி என்றால் யானை; யானையளவு பெரிய காய் என்பது போலச் சொல் விளையாட்டாகப் பூதகி என்னும் பெயர் தரப்பட்டிருக்கலாம்.

பூப்பருத்தி: இது பூவரசு. பருத்தி = பருத்திருப்பது. பூவரசம் பூ, எத்தனையோ பூக்களினும் மிகவும் பருத்தது பெரியது – ஆதலின், சொல் விளையாட்டாகவும் வடிவு காரணமாகவும் பூப்பருத்தி எனப்பட்டது. பருத்தி (பஞ்சுச் செடி) என்ற இருபொருள் நயமும் மயக்குகிறது.

பொய்: மரப் பொந்துக்குப் 'பொய்' என்னும் பெயர் பிங்கல நிகண்டில் தரப்பட்டுள்ளது. பொய் என்பது இல்லாதது தானே! பொந்து என்பதும் ஒன்றும் இல்லாதது தானே! வடிவு.

போகி: பூ அரும்பு இது. அரும்பு மலராய் விரிய, ஆண்பாகமாகிய மகரந்தத் தூள் மலரில் விழ, பூ கருவுற்றுக் காய்க்கிறது இந்தக் காதல் போகத்தை உடைமையால், அரும்பு போகி எனப்பட்டது என்று கூறலாமோ! உடற் கூறு - செயல்.

மட்டம்: கரும்பு, வாழை ஆகியவற்றின் கீழ்க் கன்றுகள், தாயினும் அளவில் மட்டமாயிருத்தலின் மட்டம் எனப் பட்டன. உடற்கூறு. பொதுவாக, கீழ்க் கன்றுகளோ, புதிய கிளைக் கப்புகளோ வெடித்துத் தோன்றுவதற்கு 'மட்டம் வெடித்தல்' என்னும் பெயர் உண்டு. மட்டம் என்பதற்குச் சமநிலை என்னும் பொருளும் உண்டு. தாய்க் கரும்பும்

தாய் வாழையும் அழியினும், மீண்டும் அவ்விழப்பை ஈடு கட்டி முன்னிருந்த அளவுக்குச் சமநிலையை ஏற்படுத்துவதாலும் மட்டம் என்னும் பெயர் இவற்றிற்கு வந்திருக்கலாம்.

மணவலி = மிக்க மணம் (வாசனை) உடையதாதலின் மருக்கொழுந்து மணவலி எனப்பட்டது. மரு என்பதற்கு மணம் என்னும் பொருள் உண்டு. ஈண்டு வலி என்பது, வலிமை மிக்கது என்னும் பொருளில் உள்ளதாகக் கொள்ளலாம். அதாவது, மணம் மிகுதி.

மது திருமணம் = இது கரும்பு. மது என்பதற்கு, தேன், கள், பால், இனிமை முதலிய பொருள்கள் உண்டு. திருமணம் என்பது சேர்க்கை;

"மணத்தல் கூடுதல்"

என்பது திவாகர நூற்பா. எனவே, இனிய சுவைநீர் சேர்ந்திருப்பது கரும்பு என்னும் பொருளில், இதற்கு 'மது திருமணம்' என்றும் பெயர் வைக்கப்பட்டிருக்கலாம். மற்றும், திருமணம், ஊர் விழா முதலிய மங்கல நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில், கமுகு, வாழை, கரும்பு முதலியன நட்டுக் கட்டுதல் உண்டு. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்றபோது இவை இடம் பெற்றதாக மணிமேகலை கூறுகிறது. விழாவறை காதை:

"காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்" — (46, 47)

என்பது பாடல் பகுதி. தென்னை, பனை, ஈந்து ஆகியவை மதுவுக்கு உரியன எனினும், கரும்பின் மது (கருப்பஞ்சாறு) போல உடனே கிடைக்காதல்லவா? எனவே, கரும்புக்கு இப்பெயர் பொருந்தும். உடற்கூறு.

மதுரசப் பீலி = இது பெருங்காயம். பெருங்காயம் கரைத்த நீர் மதுரசம் போல் ஒருவகை மணம் உடையதல்லவா? பீலுவது பீலி.

பீலுதல் = பீய்ச்சுதல் = பீரிடுதல் = வெளியிடல்.

மதுரசம் போன்ற மண நீர் உண்டாக்கலாம். ஆதலின் இது இப்பெயர் பெற்றது. உடற்கூறு.

மாதவப் பிரியம் = பூசனியிது. மாதவம் என்பதற்கு இளவேனில், இனிமை, மது, பெரியதவம் என்னும் பொருள்கள் உண்டு. பூசனி இளவேனிலில் இராது. இனிமை தருவது எனலாம். பூசனியால் இனிப்பு (காசி அல்வா — பூசனி அல்வா) செய்வதுண்டு. அதனால் இப்பெயரா? அல்லது, பெரிய தவசிகள் பிரியப்பட்டு உண்ணுவது என்பது பொருந்துமா? புரோகிதச் சடங்கு செய்யும் ஐயருக்குப் பூசனிப் பற்றை தருவது ஈண்டு நினைவுகூரத் தக்கது. உடற்கூறு, சார்பு.

மாமுநி = நாயுருவி இது. வேலூர் கண்ணப்பர் இது பற்றிக் கூறியிருப்பது: இது தெய்வத் தன்மை யுடையது; புதனுக்கு உரிய பூ; அட்ட கர்ம மூலிகை; இதன் இலையைக் காப்புகட்டி மந்திரம் செபித்து, ஆசாரத்துடனும் குருபக்தியுடனும் எடுக்கவேண்டும். நாயுருவி இலையைக் காய வைத்து எரித்துச் சாம்பலாக்கிப் பதமாகப் பயன்படுத்த வேண்டும். நாயுருவியின் சிறப்பை, பெரியோர்களின் (முனிவர்களின்) கால்களைப் பிடித்துவிட்டுப் பணி செய்து வழிபட்டு அவர்களிடம் தெரிந்துகொள்ள வேண்டும்—என்றெல்லாம் கூறி நூல் பெயர் தெரியாத பாடல் பகுதி யொன்றும் தந்துள்ளார்.

“காயுருவிச் சருகு அருந்தும் பெரியார் மாட்டுக்
கால்பிடித்துப் பணிபுரிந்து கண்ட பாகம்

நாயுருவிச் சாம்பல் படி பொன்றா னங்காய்
நந்துமே விலைச் சாம்பல் படி யொன்றாகும்''-

என்பது கண்ணப்பர் தந்துள்ள பாடல் பகுதி. இதிலிருந்து முனிவர்க்கும் நாயுருவிக்கும் உள்ள தொடர்பு புலப்படலாம். நாயுருவி ஒரு வசிய மூலிகை எனச் சொல்லப்படுகிறது. எனவே, நாயுருவி, மாமுநி எனும் பெயர் பெற்றது. சார்பு.

மால் = விஷ்ணுகரந்தை இது. விஷ்ணு = திருமால். எனவே, சொல் விளையாட்டாக இப்பெயர் தரப்பட்டது.

மா வணங்கி = இது குங்குமப்பூ. குப்பை மேனி பூனை வணங்கி எனவும், நெருஞ்சி யானை வணங்கி எனவும் கூறப்படுவதுபோல, இது மாவணங்கி எனப்படுகிறது. மா = வண்டு, விலங்கு. ஒரு வேளை, வண்டோ, விலங்குகளோ இதற்குப் பணிந்து ஒதுங்குவதால் இப்பெயர் பெற்றிருக்கலாமோ? சார்பு.

முக்கண்டகி = கண்டகம் = முள். ஒரு காயில் மூன்று முள்ளையுடைய நெருஞ்சி முக்கண்டகி எனப்பட்டது. வடிவம்.

முட்டை: எரு முட்டைப் பீநாறி மரம் சுருக்கமாக முட்டை எனப்பட்டது. சொற் சுருக்கம்.

முப்புரம் எரித்தோன் = முப்புரம் எரித்தவர் சிவன். எனவே, மிக்க வெப்பம் தரும் முக்கா வேளைப் பூண்டும் மூக்கிரட்டைப் பூண்டும், சொல் விளையாட்டாகச் சிவன் பெயர் பெற்றன.

முனிந்துரை = இது வெந்தயச் செடி. முனிந்துரை = என்றால் சினந்து (கோபித்துப்) பேசுவது. வெந்தயம் என்ற சொல்லிலும் இந்தப் பொருளின் கூறு உள்ளது.

வெந்தல் = வெந்தயம் — கருகியது; வெந்தித்தல் = சினத்தல் - சூடாதல்; வெந்திப்பு = கொதிப்பு - சினம், இ.சா.

"வெந்திப்புடன் வரும் அவுணேசனையே" (136)

என்னும் திருப்புகழ் பாடல் பகுதி காண்க. அவுணேசன் = அரக்கர் தலைவனாம் சூரபத்மன். அவன் வெந்திப்புடன் (சினத்துடன் — முனிவுடன்) வருகிறானாம், வெந்தயம் என்பதை வெந்த அயம் எனவும் பிரிக்கலாம். அயம் = இரும்பு. வெந்த அயம் = இரும்பு வெந்து நீறாகிப் போன தூள். ஈண்டு, தனிப்பாடல் திரட்டுப் பாடலொன்று நினைவிற்கு வருகிறது:—

"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவ
தென்ன
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை - மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே".

வெங்காயம் = கொடிய உடம்பு; சுக்கு ஆனால் = சுக்கு நூறாகிவிடின்; வெந்தயத்தால் (வெந்தசாம்பலால்) ஆவதென்ன = வரும் பயன்யாது. திருவேரகத்தில் உள்ள செட்டியாராகிய முருகனே! சீரகமாகிய (சீர் + அகம்) வீட்டுலகத்தைத் தந்நீரானால், மீண்டும் இந்தப் பெருங் காயம் (பெரிய உடல் பிறவி) தேடி எடுக்கமாட்டேன் என இருபொருள் அமைந்த பாடல் இது. இங்கே, வெந்தயம் என்பதற்கு, வெந்த சாம்பல் என்பது பொருள், முனிந்து உரைப்பவர்கள், "நீ வெந்து சாம்பலாகப் போக" எனச் சாமொழி (சாபம்) இடுவது உண்டு. எனவே, வெந்தயம், முனிந்துரை என்னும் பெயரைச் சொல் விளையாட்டாகப் பெற்றுள்ளது.

மையுடை = இது கருவேல மரம். மை = கருமை. வேலமரத்திற்கு 'உடை' என்னும் ஒரு பெயர் உண்டு.

எனவே, கருவேலமரம் மையுடை எனப்பட்டது. நிறம்—வடிவு.

யானைத் தடிக்கா — யானைத் தடிச்சல் = இவை புளி நறளைக் கொடி. இதன் கிழங்கு தடியாய்ப் பருத்திருக்கு மாதலின் இப்பெயர்கள் பெற்றது. வடிவம்.

யுக பத்திரிகை = அசோக மரம் இது. யுகம் = நெடுங் காலம். அசோகு நீண்ட காலம் இருப்பதெனில் இப்பெயர் பொருந்தும். இன்னொரு பெயர்க் காரணமும் உண்டு. யுகம் = இரண்டு = இரட்டை (Pair). பத்திரிகை = இலை. அசோக மரத்து இலைகளைப் பார்த்தால், இணை இணையாக—இரட்டை இரட்டையாக (ஜோடி ஜோடியாக) இருப்பது தெரியும். அதாவது, கிளையில், வலப்புறம் ஓரிலையும் அதற்குச் சம நேராக இடப்புறம் ஒன்றுமாக, அடியிலிருந்து மேல் வரையும் இருக்கும். இதனால் அசோக மரம் யுகபத்திரிகை என்னும் பெயரைச் சினையாகு பெயராகப் பெற்றது எனலாம். வடிவம்.

வக்கிர புட்பம் = இது முருக்க மரம். முருக்குதல் எனினும் வக்கிரம் எனினும், முருக்கித் திரும்பிக் கொண்டிருப்பது என்பது பொருள். அத்தகைய வக்கிர—முருக்குப் பூவை உடைமையால், சினையாகு பெயராக முருக்கமரம் வக்கிர புட்பம் எனப்பட்டது. உடற்கூறு.

வச்சிர சரீரம் = கோரைக்கிழங்கு வச்சிரம் போன்ற உடற்கூறு உடையதால் இப்பெயர்த்து. வடிவம்.

வண்டுகொல்லி = சம்பங்கி, சண்பகம், வேங்கை ஆகிய மலர்கள் வண்டுகட்கு ஆகா. அதனால், வண்டுகள் இம் மலர்களை நாடுவதில்லை. நாடின் கேடு உண்டாகும். ''சண்பகமும் வேங்கையும் வண்டுணா மலர்மரம்'' என்பது

திவாகர நூற்பா. எனவே, இவை வண்டுகொல்லி எனப் பட்டன. பண்பு - செயல்.

வனசந்திரிகை-வனம் = காடு; சந்திரிகை = வெண்ணிலா. மல்லிகை, காட்டில் வெண்மையாக = வெண்ணிலவொளி போல் இருப்பதால் இப்பெயர்த்து. உடற்கூறு.

வருடபுட்பம் = இது தாழை. ஓராண்டு காலம் நீடிப்ப தால் இது வருட புட்பம் எனப்பட்டது. காலம்.

வர்ணப் பிரசாதம் = அகில் இது. 'முருகா' என்னும் தலைப்பில், அகில்புகை முருகனுக்குப் பிரசாதம் படைத்தல் போல் ஊட்டப்படுவது பற்றிய செய்தியைக் காணலாம். கருவர்ணப் புகையாகிய பிரசாதமாகக் கடவுளுக்குச் செலுத்தப்படுகிறது என்னும் கருத்தில் அகில் இப்பெயர் தரப்பட்டிருக்கலாமோ? சார்பு.

வள்ளல் = இது வள்ளைக் கீரை. வள்ளல் = வள்ளை என்னும் சொல் ஒற்றுமை பற்றிச் சொல் விளையாட்டாக இக்கீரைக் கொடி வள்ளல் எனப்பட்டது.

வாழைப் பழத்தி = இது எருமைநாக்கிக் கிழங்கு. எருமை நாக்கி என்பது ஒரு கோரைவகை. இதன் கிழங்கு எருமைநாக்குபோல் இருக்குமாதலின், இது எருமைநாக்கி எனப்பட்டது. மேலும், உவமைமேல் உவமையாய், இக் கிழங்கு வாழைப்பழம் போலவும் தோற்றமளிப்பதால் 'வாழைப் பழத்தி' எனப்பட்டது. ஒப்புமை. வடிவு.

விசுவௌடதம் = சுக்கு இது. விசுவம் = எல்லாம்; ஔடதம் = மருந்து; எல்லா நோய்களையும் போக்கும் மருந்து விசுவ ஔடதமாகும். சுக்கைப் பற்றி முன்னரும் கூறப்பட்டுள்ளது. 'சுக்குக்கு மிஞ்சிய மருத்துவமில்லை' என்ற பழமொழி ஆங்குத் தரப்பட்டுள்ளது. பயன்.

விசோகம் = அசோகம் இது. சோகம் = துயரம்; அசோகம் = துயரம் தராதது; நலம் பயப்பது. அசோகம் என்பதில், 'அ' என்பது இன்மைப் பொருள் உணர்த்துவது போலவே, விசோகம் என்பதில் 'வி' என்பது இன்மைப் பொருள் உணர்த்துகின்றது. விமலன் = மலம் இல்லாத கடவுள் என்பது போல. இந்த 'வி' என்பதை, வடமொழியில், ஓர் 'உபசர்க்கம்' என்பர். எனவே, விசோகம் என்றால், சோகம் இல்லாதது எனப் பொருள்தரும். சொல் விளையாட்டாக அசோகம் விசோகம் எனப்பட்டது.

விடமரக்கனி = எட்டிக் கனி யிது. எட்டி நச்சுத் தன்மை வாய்ந்தது — கசப்பது. இக்கனியை யாரும் உண்ணார்; எனவே, விடமரக்கனி எனப்பட்டது. பண்பு.

விட்டுணுப் பிரியம் = துளசி யிது. விட்டுணு = திருமால். இது திருமாலுக்குப் பிரியமானதாதலின், விட்டுணுப் பிரியமாயிற்று. சார்பு.

விரல்நொடி = நாயுருவி இது. கையில் உள்ள கட்டை விரல், நடுவிரல் ஆகிய இரண்டையும் இணைத்துத் தேய்த்தாற்போல் நொடித்து ஒலி எழுப்புவதற்கு 'விரல் நொடி' என்பது பெயராகும். ஆடு மாடு முதலியவற்றை அழைக்கவும் அவற்றோடு விளையாடவும் யாரும் விரலை நொடிப்பதில்லை. வளர்ப்புநாயை அழைக்கவும் அதனோடு விளையாடவும், அந்நாயை வளர்ப்பவர் கைவிரல்களை நொடிப்பதுண்டு. நாய்க்கு 'மணி' என்று பெயர் வைத்திருந்தால், "மணி, இங்கே வா-வா" என்று கைவிரல்களை நொடித்து அழைப்பது வழக்கம். எனவே, சார்பு காரணமாகவும் சொல் விளையாட்டாகவும் நாயுருவி, விரல்நொடி எனப்பட்டது. விரல்நொடியால் அழைக்கப்படும் பொருளைக் குறிக்கும் நாய் என்பது, நாயுருவி என்னும் பெயரிலும் உள்ளதல்லவா? சொல் விளையாட்டு.

விருக்கநாதன் = அரசமரம் இது. விருக்கம் = மரம்; நாதன் = தலைவன் — அரசன். எனவே, அரசமரம் விருக்க நாதன் எனப்பட்டது. சொல் விளையாட்டு — மொழி பெயர்ப்பு.

விழை = கரும்பு இது. விழை=விருப்பம். விழையப் படுவது—விரும்பப்படுவது விழை; கரும்பு விரும்பப்படும் பொருள் ஆதலின் 'விழை' எனப்பட்டது. ''கரும்பு தின்னக் கூலியா?'' என்னும் பழமொழி ஈண்டு எண்ணற்பாலது. வயது முதிர்ந்தோர் கரும்பு தின்னுவ தில்லையே! என்று கூறலாம். கரும்போடு நின்றுவிடக் கூடாது; கரும்பிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை — கற்கண்டு ஆகியவற்றையும், சர்க்கரை கலந்து செய்யப்படும் இனிப்புப் பண்டங்களையுங் கூட ஈண்டு நினைவு செய்துகொள்ள வேண்டும். எனவே, கரும்பு விழையாயிற்று. சார்பு.

விள்ளோடன்=விள் ஓடன் = விள்ளோடன். தின்னும் தேங்காய்ப் பகுதி வன்மையான ஓட்டிற்குள் இருக்கும். அந்த ஓடு கொட்டாங்கச்சி என வடதமிழ் நாட்டிலும், சிரட்டை எனத் தென்தமிழ் நாட்டிலும், மலையாள மொழி யிலும் கூறப்படும். முதிர்ந்து நாள்பட்ட தேங்காயில், ஓடாகிய கொட்டாங்கச்சி வேறாகவும், உள்ளிருக்கும் வெண்மையான சதைப் பகுதி வேறாகவும் விண்டுவிடும். விண்ட சதைப்பற்றைக் கொப்பரை என்பர். இந்தக் கொப்பரையைச் செக்கில் இட்டு ஆட்டித் தேங்காய் எண்ணெய் எடுப்பர். இந்த நிலையில் உள்ள தேங்காய் தான் விள்ளோடன் ஆகும். ஓட்டிலிருந்து விண்ட (விள்ளப் பட்ட) காய் ஆதலின் இது விள்ளோடன் எனப்பட்டது. விள்ளல் என்றால், நீங்கல் - பிரிதல் - விலகல்-வேறாதல். வடிவம்.

வைரவன்=சிவனது கூறு (அம்சம்) உடைய கடவுள் வைரவன், இவ்வைரவன் வலிமை — வீரம் மிக்கவர்.

வைரவன் போல் வலிமை—வல்லமை அளிப்பது சிறுகீரை. சில்லி என்னும் பெயரும் இதற்கு உண்டு. சில்லி என்பது சிறு என்பதை ஈண்டு குறிக்கிறது. சொல் விளையாட்டாகச் சிறுகீரை சில்லி எனப்பட்டது. இக்கீரை வல்லமை தரும் என்பதற்கு ஓர் ஓலைச் சுவடிப் பாடல் பகுதி வருமாறு..

"சில்லியைச் சமைத்துணத் தேகநோ யிலதாய்
வல்லமை பேசிட வாய்க்கும் உத்தமமே" —

சில்லி = சிறுகீரை. எனவே, சிறுகீரை 'வைரவன்' எனப் பட்டது. ஒப்புமை.

# பல்வேறு நூல்களிலிருந்து

ஆறுமணிப்பூ = மாலையில் ஆறு மணி அளவில் மலரும் ஒருவகைப் பூடுப் பூ. காலம். இது, சென்னைத் தமிழ்ப் பேரகராதியில் கூறப்பட்டுள்ளது.

இரும்பிலி = இரும்பைத் தங்கமாக்கும் செடி யிது. பண்பு—செயல் (த.பே.அ.)

பிடுங்கு கீரை = முளைக்கீரையைப் பறிப்பதோ — கொய்வதோ — இணுக்குவதோ — ஒடிப்பதோ இல்லை. முளைக்கீரை மண்ணிலிருந்து பிடுங்கப்படுவதால் பிடுங்கு கீரை எனப்பட்டது. சார்பு. (த.பே.அ.)

பூப்படை — பூப் பலி — பூ மடை = மலர் வழி பாடாகிய அர்ச்சனைக்கு உரிய பூ வகைகள் எல்லாம் இப் பெயர்கள் பெறும். படை — பலி — மடை என்பன ஒரு பொருளனவே. இ.சா:-

சிலம்பு: 28 — 231, 232:

"பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்து" —

சீவக சிந்தாமணி:

"வண்டுசூழ் பூப்பலி சுமந்து தான்வலம்
கொண்டு சூழ்ந் தெழுமுறை யிறைஞ்சி" — (3052)

அர்ச்சனை என்னும் வடமொழிச் சொல்லுக்கு நேரான பூப்படை, பூமடை என்னும் சொற்கள் உள்ளமை காண்க. (த.பே.அ.)

மாயோன் பூடு = மாயோன் = திருமால். எனவே, திருமாலுக்கு உரிய துளசி இப்பெயர்த்து. சார்பு. (சங் — அக.)

முட்செவ்வந்தி = முள்செவ்வந்தி. சிவப்பு ரோசா இது. ரோசாவில் முள் இருக்குமாதலின் முள்செவ்வந்தி எனப்பட்டது. வடிவம். (த.பே.அ.)

மூவட்சி = மூ = மூன்று; அட்சி = கண் உடையது. மூன்று கண் உடைய தேங்காய் இது. வடிவம். (தைலவ.)

வம்புக்காய் = பருவம் தவறிக் காய்க்கும் காய் பொதுவாக வம்புக்காய் எனப்படும். வம்பு = வம்பான மாறுதல். வம்பு என்பதற்குப் புதுமை என்னும் பொருளும் உண்டு. திடீரெனப் புதிதாய்க் காய்க்கும் காய் எனவும் கூறலாம். பண்பு. (யாழ்.அக.)

வானம் பார்த்த பிறவி = மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகிய மர இனங்கள் அத்தனையும் மழை நீருக்காக வானத்தை எதிர்நோக்கியிருப்பதால், பொதுவாக, மர இனங்கள், "வானம் பார்த்த பிறவி" எனப்பட்டன. சார்பு (யாழ் — அக.). ஈண்டு,

"விசும்பின் துளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது" — (16)

என்னும் குறட்பா ஒப்பு நோக்கத் தக்கது.

அழகு வண்ணத்தி = இது மருதாணி. பெண்கள் கை விரலிலும், கால் விரலிலும், உள்ளங்கை — உள்ளங் கால்களிலும் பூசிக்கொண்டால் அழகாக இருக்கும். நிறம் கவர்ச்சி தரும். வண்ணம் = நிறம். வண்ணத்தி = வண்ணம் உடையவள். எனவே, மருதாணி அழகுவண்ணத்தி எனப்பட்டது. நிறம். (சா.சி.பி.)

**சா.சி.பி. அகரமுதலி:**

அசோகவனம் = வாழைத் தோட்டத்திற்கு இப்பெயர் தரப்பட்டுள்ளது. அசோகம் = சோகம் இல்லாதது. வாழை = வாழ வைக்கும் மங்கலப் பொருள், சோகம் (துன்பம்) இன்றி வாழ வைப்பது எனச் சொல் விளை யாட்டாக வைக்கப்பட்டிருக்கலாம். இலங்கையில் சீதை யிருந்த அசோகவனம் போல் தோற்றத்தில் ஒத்திருப்ப தாலும் வாழைத் தோட்டம் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

ஆண்மஞ்சள் = மஞ்சள் கறிமஞ்சள், பூசுமஞ்சள் என இருவகைப்படும். பூசு மஞ்சள் என்பது, பெண்கள் முகத்தில் பூசிக்கொள்ளும் மஞ்சளாகும். எனவே, கறியுடன் (காய் கறியுடன்) சேர்த்துச் சமைக்கப்படும் கறிமஞ்சள் ஆண் மஞ்சள் எனப்பட்டது. சார்பு.

ஆண் மூங்கில் = மிகவும் துளையுள்ள மென்மையான மூங்கில் பெண் மூங்கில். மிகவும் கெட்டியான — வலுவான மூங்கில் ஆண் மூங்கில் ஆகும். உடல் கூறு.

ஆனந்த கற்பம் = கஞ்சா இது. சித்தர்களும் இதனைப் பயன்படுத்திச் சிறிது நேரமாயினும் போதை மகிழ்ச்சியில் இருப்பதால், கஞ்சா ஆனந்த கற்பம் எனப்பட்டது. பயன்.

இரும்பு நீற்றி = எருக்கம் இலை இரும்பையும் நீறாகச் (பசுபமாகச்) செய்ய உதவுமாம்; அதனால் இப்பெயர் பெற்றது. பண்பு.

இலட்சுமி விலாசம் = இது பாக்கு. மங்கலமான இடத்திலும் செயலிலும் இலட்சுமி இருப்பதாகச் சொல்வது மரபு. திருமணத்திற்கு முன் பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் செய்து கொள்ளும் உறுதிப்பாட்டிற்குப் 'பாக்கு மாற்றுதல்' என்று சொல்வது மரபு. வெற்றிலை பாக்கை

ஒருவர்க்கொருவர் மாற்றிக்கொடுத்து வாங்கிக்கொள்வர். திருமண அழைப்பாக உற்றார் உறவினர்க்குத் தாம்பூலம் வைத்தலுக்கும் 'பாக்கு வைத்தல்' என்று பெயர் சொல்வது வழக்கம். மங்கல நிகழ்ச்சி நடைபெறும் இடங்களில், வாயிற் படியில், வாழை, கரும்பு முதலியவற்றுடன் பாக்குக் (கமுகுக்) குலையும் கட்டி வைப்பதும் வழக்கம் இதனை, மணிமேகலை விழாவறை காதையில் உள்ள

"காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்" – (46,47)

என்னும் பாடல் பகுதியால் அறியலாம். இதனால், பாக்கு, இலட்சுமி விலாசம் உடையதாகச் சொல்லப்பட்டிருக்கலாம். இது சார்பு.

மற்றொரு காரணமும் கூறலாம். அட்டலக்குமிகள் எனப்படும் எட்டு இலக்குமிகளுள், செல்வம் தரும் பாக்கிய லட்சுமியும் (தனலட்சுமியும்) ஓர் இலட்சுமியாகும். மற்றும், இலட்சுமி என்னும் பொருளில், பாக்கியம், பாக்கியவதி, தனபாக்கியம், சவுபாக்கியம் முதலிய பெயர்கள் பெண்கட்கு இடப்படுவது ஈண்டு எண்ணத் தக்கது. எனவே, பாக்கு என்பது, தன் சொல்லோடு தொடர்புடைய பாக்கியம் என்னும் இலட்சுமி விலாசத்தைப் பெற்றிருப்பதால் இலட்சுமி விலாசம் எனப்பட்டது என்றும் கூறலாமோ! இது சொல் விளையாட்டு. போகர் ஆயிரத் திருநூறு (முதற் காண்டம்) என்னும் போகர் நிகண்டில் பாக்குக்கு இப்பெயர் தரப்பட்டுள்ளது. பாடல் பகுதி.

"நோக்கினிட லட்சுமியின் விலாச மாகும்
நிகரில்லாப் பாக்கினிட நாம மாமே" (766)

என்பதாகும்.

எண்ணான் = இது உளுந்து. இது நெடுநேரம் பெயர்க் காரணம் தெரிய வொட்டாமல் என்னை ஏமாற்றிக் கொண்டிருந்தது. பின்னர் ஒருவாறு ஒரு பெயர்க் காரணம் புலப்பட்டது. எண் என்பதற்கு எட்டு என்னும் பொருள் உண்டு "எண் குணத்தான்" என்னும் (9-ஆம்) திருக்குறள் ஆட்சி காண்க. எட்டு என்பதன் திரிபே எண் என்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. எட்டைக் குறிக்க 'எண்' என்னும் ஒரு சொல்லும் தனியே உள்ளதாகக் கொள்ள வேண்டும். இதன்படி நோக்கின், எண்ணான் என்பதற்கு எட்டாவதாக உள்ளவன் எனப் பொருள் கொள்ள வேண்டும். ஒன்பது (நவ) தானியங்களுள் உளுந்து எட்டாவ தாக ஜூபிலி தமிழ்ப் பேரகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை முறையே வருமாறு:

"தானியம் — 9: கோதுமை, நெல், துவரை, பச்சைப் பயறு, கடலை, மொச்சை, எள், உளுந்து, கொள்" என்பன வாகும். இப்பட்டியலில் உளுந்து எட்டாவதாக இருப்பது காண்க. இதனால் எண்ணான் என்னும் பெயர் பெற்றிருக்க லாமோ? ஏற்புடையதாயின் கொள்ளலாம். இல்லையேல் தள்ளலாம்.

கண்ணுக் கேற்றாள் = கொடி நெல்லி என்னும் நெல்லி வகை கண்ணுக்கு நலம் பயப்பதால் இப்பெயர்த்து. பயன்.

கண்ணொளி மூலி = கள்ளிச் செடிமேல் இருக்கும் ஒருவகைப் புல்லுருவிச் செடி இது. கண்ணுக்கு ஒளி தரும் பயன் உடைத்தாதலின் இப்புல்லுருவி இப்பெயர்த்து. பயன்.

கதிர் விடு தானியம் = நுனியில் (உச்சியில்) கதிர் விடுகின்ற நெல், கம்பு, சோளம், கேழ்வரகு முதலியன இப்பெயரின. உடல்கூறு.

கந்த நிலையம் = இது மல்லிகை வகை. இது நறுமணத்தின் நிலையமாக (இருப்பிடமாக) இருப்பதால் இப்பெயர்த் தாயிற்று. கந்தம் = நறுமணம். பண்பு.

கந்த பந்து = மாங்கனி இது. மாங்கனி ஏறத்தாழப் பந்து வடிவாகவும் நல்ல மணம் (கந்தம்) உடையதாகவும் இருப்பதால் இப்பெயர்த்து. பண்பு—வடிவம்.

கந்த மோகினி = சண்பக மொக்கு இது. நறுமணத்தைக் கொண்டு, காண்பதற்கு மோகினிபோல் அழகாயிருப்பதால் இது கந்த மோகினி எனப்பட்டது. பண்பு, வடிவம்.

கந்த வசீகரம் = இது செங்சாந்தன். மணத்துடன் கவர்ச்சியாகவும் (வசீகரமாகவும்) இருப்பது. பண்பு-வடிவு.

கப்படி: கப்பு அடி. கப்பு = கிளை; அடி = வேர் (அடிப்பகுதி); மரத்தின் வேர்ப் பாகத்திலிருந்தே தோன்றும் கப்புகள் (கிளைகள்) கப்படி யாகும். வடிவம்.

கமண்டலம் = சுரைக் குடுக்கை கமண்டலம் போல் இருப்பதாலும், கமண்டலமாகப் பயன்படுத்த உதவுவதாலும் கமண்டலம் எனப்பட்டது. வடிவு—பயன்.

கம்பளிப்பூச்சி மரம் = முசுக்கட்டை மரம் இது, கம்பளிப்பூச்சி என்பது புழு வகை. பட்டுப் புழு, முசுக் கட்டை இலையைத் தின்று வளர்வதால் இம்மரத்தில் மிகுதியாயிருக்கும்; இதனால் இம்மரம் கம்பளிப்பூச்சி மரம் எனப்பட்டிருக்கலாம். செயற்கை முறையில் இக்காலத்தில் பட்டுப் புழு இவ்வாறு வளர்க்கப்படுவது அறிந்த செய்தியே. சார்பு.

கயந்தலை = யானை அறுகு என்னும் அறுகம் புல் வகை இது. கயம் = யானை. யானைத் தலைபோல் பெரிய

உச்சியுடன் இருக்கும் பெரிய அறுகு வகை இப்பெயர்த் தாயிற்று. வடிவம்.

கருப்புவில்: இரும்பு + பாதை = இருப்புப் பாதை என வலித்தல் விகாரமாவது போல், கரும்பு + வில் கருப்புவில் என ஆகும். மன்மதன் கரும்பை வில்லாக உடையவன் என்பது புராணச் செய்தியாதலின், கரும்பு, கருப்பு வில் எனப்பட்டது. சார்பு.

கடல் விசிறி: கடலில் விசிறிபோல் இருக்கும் பவளச் செடி-கொடி இப்பெயர் பெற்றது. இடம்.

கடலிச்சி: கடல் வாயிலாகச் சீனாவிலிருந்து வந்த சீனக் கற்பூரம் இப்பெயர்த்து. இடம்.

கடவுள்: தேவதாரு மரம் இது. தேவ உலகத்தில் உள்ள கடவுள் தன்மையுடைய மரம் ஆதலின் இப் பெயர்த்து. தலைமை.

கன்னி குமரி: இளங்கற்றாழை இது. கன்னி, குமரி என்னும் சொற்கள், பெண்மையைக் குறிப்பதோடு, இளமையையும் குறிக்கும். இளங்கற்றாழை, இளைய அழகிய பெண் போன்றிருப்பதால் இப்பெயர் பெற்றது. வடிவம்.

கன்னி நாகு: கன்னி, நாகு என்னும் சொற்கள் இளமையைக் குறிக்கும். இன்னும் காய்க்காத மிகவும் இளைய மரங்கள், 'கன்னி நாகு' எனப்படும். ஒரே பொருளில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் வரின், அந்த அமைப்பை 'ஒரு பொருள் பன்மொழி' என இலக்கண நூலார் கூறுவர். கன்னி நாகு என்பதையும் இவ்வாறு கூறலாம். வடிவம்.

கனல் பாலி: தில்லை மரம் இது. கனல் = நெருப்பு; பாலி = பால் உடையது பாலி. விரலால் தொட்டால்,

கனலைத் தொட்டது போல், தொட்ட விரலை வேகச் செய்யும் பால் உடைமையால் இம்மரம் இப்பெயர்த்து. பண்பு.

காமன் ரதி = இப் பெயர் கருநிறங் காரணமாகக் கருந் துளசியைக் குறிக்கும். காமன் = மன்மதன்; ரதி = காமனின் மனைவி. முருகனுக்கும் காமனுக்கும் வேள் என்னும் பெயருண்டு. முருகன் நிறம் செம்மையாதலின் அவன் செவ்வேள் எனப்படுகிறான். காமன் நிறம் கருமை யாதலின் இவன் கருவேள் எனப்படுகிறான்.

காய் தெரியான்: கருஞ்செம்பை மரம் இது. இதன் காய் தெரியாதாம்; ஆதலின் இப்பெயர்த்து. உடல்கூறு.

கோமூத்திரிகை: ஒருவகைக் கொடி இது. கோ = பசு; மூத்திரிகை = மூத்திரத் தோற்றம். பசு நடந்துகொண்டே மூத்திரம் பெய்யும்போது, அம் மூத்திரம் தரையில் மாறி மாறி வளைந்து காணப்படும். இந்தக் கொடியும் அவ்வாறு வளைந்து வளைந்து காணப்படுவதால் இப்பெயர் பெற்றது.

சுவர் தாங்கி: மலைக்காளான் என்னும் பெரிய காளான் வகை இது. மழைக் காலத்தில், ஈரப்பசையுள்ள சுவர் ஓரம் இது முளைத்திருக்கும். பார்ப்பதற்குச் சுவரைத் தாங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றுவதால், வேடிக்கை யாக இது சுவர் தாங்கி எனப்பட்டது. வறுமை காரணமாக நீண்ட நாள் சமையலையே மிகவும் மறந்துவிட்ட அடுப்பிற் குள்ளும் காளான் பூத்ததாக வறுமை மிகுதியைக் கற்பனை செய்து காட்டுகின்ற

“ஆடு நனிமறந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்புபசி உழவா” (164 - 1, 2)

என்னும் புறநானூற்றுப் பாடல் பகுதி ஈண்டு எண்ணத் தக்கது. (ஆடு = சமையல். ஆம்பி = காளான்).

நஞ்சு முறித்தான்: அவுரிச் செடி இது. நஞ்சை முறிக்கும் தன்மை பெற்றிருப்பதால், இது இப்பெயர்த் தாயிற்று. பண்பு-பயன்.

புராணம்: இது கடுக்காய். நீண்டநேரம் எண்ணிப் பார்த்தும் இதற்குச் சரியான-தெளிவான பெயர்க் காரணம் தென்படவில்லை. ஒருவேளை இப்படி இருக்கலாம். புராணம் என்னும் சொல்லுக்குப் பழமை என்னும் பொருள் உண்டு. பழைய பட்டறிவுச் (அனுபவச்) செய்திகளைக் கூறி மக்கட்கு நல்லறிவு புகட்டுவதனாலேயே சில நூல்கள் 'புராணம்' எனப்படுகின்றன. காலையில் பழைய சோறு (பழையது) உண்பதற்குப் 'புராணம் படித்தல்' என்னும் குழூஉக்குறிப் பெயர் வழங்கப்படுவ துண்டு. கடுக்காய், உடம்பில் நெடுநாளாயிருக்கும் பழைய அழுக்குகளை—குற்றங்களைப் போக்கி நலம் பயப்பதால் இப்பெயர் பெற்றிருக்கலாம். இங்கே, அகத்தியர் குண பாட நூலில் உள்ள

" அபயன் எனுங்கடுக்காய் அங்கநோ யெல்லாம்
அபயம் இட்டோட அடிக்கும் "

" பழமலத்தைப் போக்கும்; பகரில் உடலுக்கு
அழகுதரும்; புத்தி யளிக்கும் "

என்னும் பாடல் பகுதிகள் ஒப்புநோக்கத் தக்கன. பயன்.

மகாபேதை; மருள் ஊமத்தை என்னும் ஊமத்தை வகை இது. மருள்=மயக்கம். ஊமத்தை பித்த மயக்கம் தருவது; வெறிநோய்—பைத்திய நோய் தருவது. மகா பேதை என்றால், பெரிய பைத்தியம்—பெரிய முட்டாள் என்று பொருள்படும். மருள் ஊமத்தை, மகாபேதைத் தனத்தை உண்டாக்குமாதலின், இப் பெயர்த்தாயிற்று. பண்பு. அ.கு. பா. பாடல்;

" வாதமறும்; பித்த மயக்கமுறும்; மாநிலத்தில்
தீது கரப்பான் சிரங்ககலும் — கோதாய்கேள்!

மாமத்த மாகும்; வறட்சியெல்லாம் போகும்;
ஊமத்தங் காய்க்கென் றுரை ''

'' மாமத்தம் உண்டாம்; வளரிளங் கொங்கைத் திருவே
ஊமத்தம் தன்விதையை உன் '' —

(உன் = நினைத்துப் பார்).

(மத்தம் = வெறிநோய், பைத்தியம்). கருத்து = ஊமத்தங் காயால் சில நன்மைகள் உண்டெனினும், பித்த மயக்கமும் பைத்தியமும் உண்டாக வழி உண்டு. ஊமத்தம் விதையும் அவ்வாறே செய்யக்கூடியது. பண்பு—பயன்.

மனோதயம் = எருக்கு இது. எருக்குக்கு அருக்கன் என்ற பெயர் உண்டு. அருக்கன் = ஞாயிறு. உலகின் இருள் போக்க ஞாயிறு உதயமாகிறது. எருக்கு மனத்தில் ஆண்மை (வீரிய) உணர்வு தோன்ற உதயமாகிறது. பயன்.

தேரன் வெண்பா:

'' மன்னனையும் கையெடுக்க வைத்து, எயிற்றின்
நோயகற்றி
உன்னு பிணிப்பகையை ஒட்டுதலால்—சொன்னேன்
எருக்கெனவே பூமி யினிலே விளங்கும்
அருக்கம் அருக்கன்என லாம்.''

மாங்காளி = இது வேளைக் கீரை. காளி கடுமை யானவள். வேளையும் கடுமையான வெப்பம் உடையதால் இப்பெயர்த்து. பண்பு.

அ. கு. பா. பாடல்:

'' தக்க அனலும் பித்தும் தானெழும்பும்; சாந்தமின்றி,
அக்கரநோய் மிஞ்சும் அறி ''.

அன்னை: இது கொன்றை. ''இது குழந்தைகட்கும் பிள்ளைத் தாய்ச்சிக்கும் மெலிந்தவர்க்கும் மிக நன்மை பயக்கும். மலப் போக்கியுமாகும். இதைக் குறைந்த

அளவில் கொடுத்தல் வேண்டும்'' - எனப் பொருட்பண்பு நூல் கூறுகிறது. நோய்களைப் போக்கி அன்னை போல் உடலைப் பாதுகாப்பதால் இது அன்னை எனப்பட்டது. ஒப்புமை.

தே. வெண்பா:

" உதவிசில செய்து உடலை ஓம்பும் இது நீபார்
இதழி யெனும் கொன்றைபுவி யில்'' -

ஆட்கொல்லி விதை: தில்லைமர விதை இது. தில்லை விதை கொடிய நஞ்சு; உயிர்க்குக் கேடு சூழும்; ஆதலின் இப்பெயர் பெற்றது என்பது சிலர் கொள்கை. சிலர் இதற்கு எதிர்மாறாகக் கூறுவர். தில்லை விதையைத் தீண்டாமல் இருப்பதே நல்லது. பண்பு - பயன்.

ஆயிரங் கச்சி: அடுக்கு இளநீர் இது. மிகுந்த காய் காய்க்கும் தென்னையை ஆயிரங் காய்ச்சி என்பர். இதில் இளநீர் அடுக்கடுக்காக இருப்பதால் இப்பெயர்த்து. வடிவம்.

இருளகற்றி: வெள்ளெருக்கு. வெள்ளெருக்கின் வெள்ளைப் பூக்கள் இரவிலும் தெரிவதால் இருளகற்றி எனப்பட்டது. நிறம்'

இளிந்த காய்: இது பாக்கு. இளிதல் என்பதற்கு உரித்தல் என்னும் பொருள் சூடாமணி நிகண்டில் கூறப் பட்டுள்ளது. கொட்டையை உரித்தே பாக்கு உண்டாக்க வேண்டுமாதலில் இளிந்த காய் எனப்பட்டது. உடற்கூறு.

கடிச்சவாய் துடைச்சான்: இது காஞ்சொறி (செடி). நச்சு தீண்டப்பட்ட இடத்தை இதனால் தேய்த்துத் துடைத்தால் நலம் உண்டாகுமாதலின் இப்பெயர்த்து. பயன்.

சகாதேவம்: ஏலக்காய் இது. பஞ்ச பாண்டவருள் ஒருவன் சகாதேவன். இப்பெயர் விளையாட்டாக ஏலக்காய்க்கு இடப்பட்டுள்ளது. சகா = தோழன், துணை. ஏலக்காய், மருத்துவம் — உணவு முதலிய பலவற்றிற்கும் துணை செய்வதால் இப்பெயர்த்து. பயன்.

சடாதரன்: அருநெல்லி இது. அருநெல்லிக்காய் உடலுக்குக் குளிர்ச்சிதரும். சடாதரன் என்றால், சடையைத் தாங்கியிருக்கும் சிவன். சடையில் சிவன் கங்கையை அடக்கி வைத்துள்ளார் என்பது புராணக்கதை. அதனால் சடை குளிர்ச்சியானது என்று கூறப்படும்.

அருநெல்லி குளிர்ச்சி தரும் என்பதற்கு அ.கு.பா. பாடல் சான்று வருமாறு:—

"அருநெல்லிக் காய்குளிர்ச்சி யாம்பித்தம் போக்கும்
மருவு துவர்ப்பால் துரிசை மாற்றும் — விரியுலகில்
தாகத் துயர்நீக்கும் சாரிருமலைத் தொலைக்கும்
ஆகக் கொதிப்பகற்றும் ஆங்கு"—

இப்பாடலால், குளிர்ச்சி தரல், தாகம் போக்கல், உடல் (ஆகக்) கொதிப்பு அகற்றல் ஆகிய பயன்களை அறியலாம். சிவன் கங்கையைச் சடைக்குள் அடக்கி வைத்துள்ளார் என்பதற்குச் சான்றாக, நாவுக்கரசர் தேவாரப்பாடல் பகுதி வருமாறு:—

"கங்கைவார்சடைக் கரந்தார்க்குஅன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே"—

சிவனது சடை குளிர்ச்சியானது என்பதன் சான்றாக நாவுக்கரசரின் கோயில் பதிகத் தேவாரப் பாடல் வருமாறு:

"குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில்
குமிண்சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம்போல் மேனியில்
பால்வெண் ணீறும்,

இனித்த முடைய எடுத்தபொற் பாதமும்,
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே'' —

இப்பாடலில் உள்ள 'பனித்த சடை' என்பதன் பொருள் குளிர்ந்த சடை என்பதாகும்.

வெப்பம் தரும் குப்பைமேனிக்கு, வெப்பம் தொடர்பான 'திரிபுரம் எரித்தான்' என்னும் சிவன் பெயர் இடப்பட்டது. குளிர்ச்சிதரும் அருநெல்லிக்கு, குளிர்ச்சி தொடர்பான சடாதரன் என்னும் சிவன் பெயர் இடப்பட்டுள்ளது. பெயர்க்காரணம்: குளிர்ச்சி என்னும் ஒப்புமை. மற்றும் அருநெல்லிக்காய்கள் சடைபோல் நீள்கொத்தாக இருக்கும் என்பதும் நினைவுகூரத் தக்கது. இது வடிவு.

சந்திரன் தங்கச்சி: இது செவ்வகத்தி. அகத்திப்பூ பிறைநிலா வடிவாய் இருக்கும். முக்கண்ணன் என்பது மூன்று கண்களையுடைய தேங்காயைக் குறிக்கும். அதன் இளமை நிலையுடைய இளநீர், தேங்காய்க்கு இளையோன் (தம்பி) என்னும் பொருளில், முக்கண்ணன் இளையோன் எனப்பெயர் பெற்றுள்ளமையை வேறிடத்தில் காணலாம். அதேபோல், முழுநிலவின் இளமை நிலையுடைய பிறையை முழுநிலவின் தங்கச்சி எனலாம் அன்றோ? எப்படியோ! அகத்திப்பூ பிறைச்சந்திரன் வடிவம்போல் இருப்பதால் சந்திரன் தங்கச்சி எனப்பட்டது. வடிவம் — ஒப்புமை.

சமணம்: புழுக்கொல்லி என்னும் வண்டு கொல்லிச் செடி யிது. சிறு புழுக்களையும் கொல்லலாகாது என்பது சமணக் கொள்கை. அங்ஙனம் இருக்க, புழுக்கொல்லி என்பதற்குச் சமணம் என்னும் பெயர் வைத்திருப்பது எதிர் மாறாக உள்ளது. ஆனால், சமணர்கள் சினம் கொள்ளா திருப்பின், ஒரு கருத்து கூறலாம். சமணர்கள், புழுவைக்

கொல்லவும் செய்யாமலும், வாழவும் செய்யாமலும் அப்புழு வருந்தும்படியாக நடந்து கொள்வர் என்னும் பொருளில், "சமணனிடம் அகப்பட்ட சீலைப் பேனைப் போல' — என்று வழங்கப்படும் பழமொழி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. சார்பு.

சனார்த்தனம்: சுக்கு இது. காத்தல் கடவுளாகிய திருமாலுக்குச் சனார்த்தனன் என்னும் பெயர் உண்டு, காத்தல் கடவுள்போல் சுக்கு மக்களைக் (சனங்களைக்) காத்தலின் இப்பெயர்த்து. பயன்—ஒப்புமை.

சாம்ப சதாசிவம்: சிவனார் வேம்பு இது. சிவனுக்குச் சாம்ப சதாசிவம் என்னும் பெயர் உண்மையால், சொல் விளையாட்டாகச் சிவனார் வேம்பு இப்பெயர்த் தாயிற்று.

சிங்காரம்: ஏல அரிசி இது. சிங்காரம் என்பதற்கு அணி (அலங்காரம்)—இனிமை என்னும் பொருள் உண்டு. ஏல அரிசி ஆடம்பர அலங்கார உணவுக்கு உதவுகிறது. மற்றும், ஏல அரிசியிட்ட உணவு இனிமையாயுள்ளது. எனவே இப்பெயர்த்து, பண்பு—பயன்.

சுகுமாரம்: இது ஒருவகைக் கரும்பின் பெயர். சு = நல்ல; குமாரம் = பிள்ளைமை; சுகுமாரம் = நலம் செய்யும் பிள்ளைமைப் பொருள். கரும்பு இத்தகைய தாதலின் இப்பெயர் பெற்ற தெனலாம். பண்பு.

தனவஞ்சன்: இது கொட்டைப் பாக்கு. தனவஞ்சன் என்றால், செல்வத்தை வஞ்சகமாய் மறைப்பவன் என்று பொருள் செய்யலாம். கொட்டைப் பாக்கு என்பது பாக்கு மரத்தின் காயாகும். பெரும்பாலும் மற்ற மரங்களில் பூவும் அதிலிருந்து தோன்றும் காயும் தொடக்கத்திலிருந்தே நன்றாக — வெளிப்படையாகத் தெரியும். ஆனால், கொட்டைப் பாக்கு, ஒரு பாளைக்குள் மறைந்திருக்கும்.

பாளை வெடித்த பிறகே காய் உருவாகித் தெரியும். இவ்வாறு மறைந்திருப்பதால் தனவஞ்சன் என்று பெயர் பெற்றிருக்கலாம். வடிவம்.

பாக்கியம் என்பது தனம். பாக்கியம் என்னும் சொல்லை வஞ்சிப்பதுபோல் குறைத்துப் 'பாக்கு' என்று கூறப்படுவதால் இப்பெயர்த்து என்றும் கூறலாம். இது சொல் விளையாட்டு.

இதற்கு இன்னொரு பெயர்க் காரணமும் கூறலாமா! செல்வர் மட்டு மல்லர்—படு ஏழைகளுங்கூட வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்வர். சிலருக்கு உணவினும் வெற்றிலை பாக்கே இன்றியமையாததாகத் தெரியும். இவ்வாறு, பாக்கு, ஏழைகளின் தனத்தையும் (செல்வத்தையும்) வஞ்சிப்பதால், அதாவது, செலவழிக்கச் செய்வதால் இப்பெயர் பெற்றது என்று வேடிக்கையாகச் சொல்லலாம். சார்பு.

தனவான்: இது கொடி அரசு. கொடி அரசு அரசமர வகையில் ஒன்று. தனவான் என்றால் பெருஞ் செல்வன். கொடி அரசு என்பது, கொடி கட்டி வாழும் அரசன் என்பது போலச் சொல் விளையாட்டாகப் பொருள் படலாம். தனவான் கொடியரசன் போன்றவன் அல்லவா? எனவே, கொடியரசு தனவான் எனப்பட்டிருக்கலாம், சொல் விளையாட்டு.

தாமிர பல்லவம்: அசோகமரம் இது. தாமிரம் = ஓர் உலோகம் (செம்பு); பல்லவம் = தளிர். அசோகந்தளிர் நிறத்தால் தாமிரம் போன்றிருக்குமாதலின் இப்பெயர்த்து. வடிவம்.

திரிபுசம்: இது கத்தரிச் செடி. நெடுநேரம் எண்ணியும் நேரில் பார்த்தும் ஒரு காரணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திரி = மூன்று; புசம் = தோள்; திரி புசம் = மூன்று தோள் போன்ற அமைப்புடையது. கத்தரிச் செடியின் இலை ஒவ்வொன்றிலும் இதைக் காணலாம். இலையின் முழு விளிம்பிலும் மூன்று பிரிவுகள் இருக்கும். இதை அலை விளிம்பு எனலாம். ஒவ்வோர் அலைக்கும் நடுவே இடைவெளி இருப்பது போல, மூன்று பிரிவுகட்கும் நடுநடுவே இடைவெளி இருக்கும். இந்த அமைப்பை மூன்று தோள்கள் உடையது என்னும் பொருளில் திரிபுசம் என்று கூறியிருக்கலாம். உடற்கூறு.

திரு வஞ்சகன்: சிவனார் வேம்பு இது. சிவன் பெயர்கள் சில, சிவனார் வேம்புக்கு இடப்பட்டுள்ளமை முன்னர் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கும் அவ்வாறே கொள்ளல் வேண்டும். சிவனுக்குத் திருவஞ்சகன் என்னும் பெயர் எவ்வாறு பொருந்தும் என்பது சிக்கலான செய்தியே! ஆனால், சிவனிடத்திலும் ஒருவகை வஞ்சகம் உண்டு. என்பதை மறைப்பதற் கில்லை. சிவன் அழித்தல் கடவுள் என்பது ஒரு புறம் இருக்க, அவர் பலரை வஞ்சித்துள்ளார். சிறுத்தொண்டரைப் பிள்ளைக் கறி படைக்கக் கேட்டுள்ளார்; இயற்பகை நாயனாரிடம் மனைவியையே கேட்டுள்ளார். வீட்டில் ஒன்றும் இல்லாத வறிய நிலையிலுள்ள இளையான்குடி மாற நாயனாரிடம், மழை பெய்யும் இரவில் சென்று உணவு கேட்டுத் தொல்லை தந்துள்ளார். கண்ணப்பரைக் கண்ணைத் தோண்டச் செய்துள்ளார். அன்பை ஆய்தல் (சோதித்தல்) என்னும் பெயரில் இவ்வாறு மக்கள் அன்பர்கள் பலரை வஞ்சித்ததல்லாமல், திருமால் மலர் வழிபாட்டுக்காக வைத்திருந்த ஆயிரம் தாமரை மலர்களுள் ஒன்றை மறைத்து விட்டார். உமாதேவிக்குத் தெரியாமல் கங்கா தேவியைச் சடைக்குள் மறைத்து வைத்துள்ளார். இவ்வாறு ஒவ்வொருவரது ஒவ்வொரு வகையான நலத்தை (திருவை) மறைத்து வஞ்சித்துள்ளதால்,

சிவனுக்குத் திரு வஞ்சகன் என்னும் பெயர் பொருந்தலாம் அல்லவா? இப்பெயர் சொல் விளையாட்டு வேடிக்கையாகச் சிவனார் வேம்புக்கு இடப்பட்டுள்ளது.

திவாகரம்: சூரியகாந்தி இது. திவாகரம் = சூரியன். எனவே, சொல் விளையாட்டாகவும் சார்பினாலும் சூரிய காந்திக்கு இப்பெயர் தரப்பட்டது.

தேர் வாசம்: அரசு (மரம்) இது. தேரைக் கீழே நிழலில் நிறுத்தி வைக்கும் அளவுக்கு அரசமரம் பெரியதாய் விரிந்திருக்கும் என்ற பெயர்க் காரணம் சொல்வதல்லாமல், மற்றொன்றும் கூறலாம். அரசு என்பது இருபொருள் உடையதாக (சிலேடையாக) அரசரையும் குறிக்கும் அல்லவா? இக்காலத்தில் செல்வர்கள் விலையுயர்ந்த சிற்றுந்தில் (Pleasure car) செல்வதுபோல், அக்காலத்தில் அரசர்கள் தேரில் செல்வர். எனவே, இருபொருள் - சொல் விளையாட்டாக, அரசுக்குத் தேர் வாசம் என்னும் பெயர் தரப்பட்டிருக்கலாம் அல்லவா? சார்பு; சொல் விளையாட்டு. தேர் வாசம் செய்பவர் அரசர் (அரசு) அல்லவா?

தேவ புத்திரர்: இது வெந்தயம். தன்னை உண்டவர் உடலை வெந்தயம் தேவ குமாரன்போல் ஆக்கலாம் என்னும் கருத்தில் வெந்தயத்திற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். வெந்தயம் பல நோய்களைப் போக்குவதன்றி, உடம்பை வளமுறச் செய்யுமாம். தேரையர் காண்டப் பாடல் வருமாறு:

"வெந்தயம் தோசையாய் வேண்டி உண்டிட, உடல்
மைந்துடன் பருத்திடும்; வலி,களை ஒழிந்திடும்;
கருணையில் அஃதினைக் கலந்து அயின்றிட, உடல்
உரமெனப் பருத்திடும் உண்மை யிதாகவே" —

கருத்து: வெந்தயத் தோசையை விரும்பி உண்டாலும், வெந்தயத்தைக் கருணைக் கிழங்கோடு கலந்து ஆக்கி உண்டாலும் உடம்பு வளமுறும்—என்பது. வீடுகளில் தோசை செய்வதற்கு, அரிசியுடன் வெந்தயம் கலந்து அரைத்து மாவாக்குவார்கள் என்பது அறிந்த செய்தியே. ஒருவகையில் இப்பெயர்க் காரணம் பொருந்தலாம். பயன்.

தேவர் கோன் = குளிர் நாவல் இது. நாவல் கனி குளிர்ச்சி தருவது; அதிலும், குளிர் நாவல் என்னும் ஒரு வகை நாவல் மிக்க குளிர்ச்சி உண்டாக்கும். குளிர்ச்சியுண்டாக்குவது மழை. இம்மழையைப் பெய்விப்பவன் இந்திரன். இவன் தேவர்களின் கோன் (அரசன்) ஆதலின், தேவர் கோன் எனப்படுகிறான். குளிர்ச்சி தரும் மழை பெய்விக்கும் தேவர் கோனைப் போலக் குளிர்ச்சி தருவதால், இம்மரம் தேவர் கோன் எனப்பட்டது. நாவல் குளிர்ச்சி தரும் என்பதற்கு அ.கு.பா. பாடல் சான்று:—

> "வாய்வும் கடுப்பும் வருங் கொதிப்பும் தாகமும்போம்
> தூய நாவல் பழத்தால் சொல்"—

> "விந்தோடு அதிசீதம் வீறுபலம் வெப்பையம்
> மந்தமிவை உண்டாக்கு மால்"—

> "உதிரமொடு விந்துவையும் உண்டாக்கும் உள்ளே
> அதிர் அழல் தன்னை அகற்றும்"—

கடுப்பு, கொதிப்பு, தாகம், அழல் ஆகியவற்றைப் போக்குவது குளிர்ச்சி தரும் பொருள் தானே. அதிசீதம் என்றால் மிக்க குளிர்ச்சி. பண்பு—ஒப்புமை.

பல்லுக்கு வெளி = இது பாக்கு. பல்லுக்கு வெளியில் உள்ளவை ஈறும் உதடும் ஆகும். பாக்கு ஈறுக்கும் உதடுக்கும் நலம் பயக்கும்; ஈற்று நோய், உதட்டுப் புண் ஆகியவற்றைப்

போக்கும். இதுபற்றிப் பொருட்பண்பு நூலிலுள்ள கருத்து அதிலுள்ளவாறு அப்படியே வருமாறு:

"பாக்கை முறைப்படி குடிநீரிட்டு வாய் கொப்பளித்து வர, பல் ஈறில் உண்டாகும் நோய்கள் தீரும்."

"பாக்குமர வேரைக் குடிநீரிட்டு வாய் கொப்பளித்து வர, உதட்டுப் புண்களும் ஈற்றுப் புண்களும் தீரும்."

இச்செய்தி சித்தர் பாடல்களிலுள்ள செய்தியாகும். போகர்நிகண்டில் இப் பெயர் கூறப்பட்டுள்ளது.

" பாக்கினிட பேர்தனையே பகரக் கேளு ..
பல்லுக்கு வெளியு மாகும் " (766)

என்பது நிகண்டுப் பாடல் பகுதி. எனவே, பல்லுக்கு வெளியேயுள்ள உறுப்புகட்கு நலம் பயப்பதால், பாக்கு, பல்லுக்கு வெளி எனும் பெயர் பெற்றிருக்கலாம். பயன்.

பால புட்பம் = முல்லைப் பூ இது. பாலபுட்பம் என்னும் வடமொழிப் பெயரை, இளம் பூ—சிறு பூ என மொழி பெயர்க்கலாம். இளஞ்சிறார்கள் பாலர்கள் எனப்படுகின் றனரன்றோ? தாமரைப்பூ, பூசனிப்பூ முதலிய பல பூக் களினும் முல்லைப்பூ மிகவும் சிறியது; அவற்றினும் விரைவில் வாடக் கூடியது; இதனால் இதற்குப் பாலபுட்பம் எனும் பெயர் இடப்பட்டிருக்கலாம். பண்பு.

புகழ் புகழ் = மூக்கிரட்டைக் கொடி இது. ஒரு சொல் விளையாட்டுப் பெயராகும் இது. மூக்கில் இரட்டைத் துளையிருப்பது என்னும் பொருள் தரும் மூக்கிரட்டை என்பது இந்த மூலிகைக்குத் தற்செயலாய் ஏற்பட்ட பெயரே. இது மூக்குறட்டை, மூக்கரட்டை எனப்படுதலும் உண்டு. அ. கு. பா. பாடல்;

"பேதி, கொடுக்குமதை உண்டக்கால், கோமளமே!
பித்தம்
அடுக்குமே மூக்குறட்டை ஆய்"

தேரன்வெண்பா:

"மூக்கிரட்டை யினிலை முறையுண வாதநோய்
ஆக்கையில் பெட்டி அரவென அடங்குமே"

அகத்தியர் குண பாடத்தில் மூக்குறட்டை எனவும், தேரன் வெண்பாவில் மூக்கிரட்டை எனவும் இருப்பது காண்க. எனவே, மூக்கிரட்டை என்பது தற்செயலான பெயரே.

இரட்டை என்பதால், 'புகழ் புகழ்' என்னும் இரட்டைச் சொற்பெயர் இதற்குத் தரப்பட்டுள்ளது. இலக்கணத்தில் இது 'இரட்டைக் கிளவி' எனப்படும்.

"இரட்டைக் கிளவி இரட்டில் பிரிந்திசையா"

என்பது நன்னூல் (சொல்லதிகாரம் — பொதுவியல் — 45ஆம்) நூற்பாவாகும். இரட்டைக் கிளவி என்றால், இரட்டைச் சொல்; இரட்டில் பிரிந்திசையா என்றால், இரட்டையிலிருந்து தனித் தனியாய்ப் பிரிந்து நின்று பொருள் தருவதில்லை — என்பது கருத்து. எ. கா.:

அவர் 'கலகல' எனப் பேசுவார்
இவர் 'மளமள' என வேலையை முடிப்பார்

இவற்றில் 'கலகல' — 'மளமள' என்பன இரட்டைக் கிளவியாம். கலகல என இரண்டு சொல்லாமல் 'கல' என ஒன்று மட்டும் சொன்னாலும், 'மளமள' என இரண்டு சொல்லாமல் 'மள' என ஒன்றுமட்டும் சொன்னாலும், கல, மள என்பவற்றிற்குப் பொருள் இல்லை, ஏனவேதான், 'இரட்டில் பிரிந்திசையா' எனப்பட்டது.

அங்ஙனமெனில், 'புகழ் புகழ்' என்பது இரட்டைக் கிளவியாகாதே! 'புகழ்' என ஒரு புகழ் சொன்னாலும், இசை—கீர்த்தி எனப் பொருள் தருமே!—என வினவலாம். இதற்கு விடை: இங்கே புகழ் என்பது இசை—கீர்த்தி என்னும் பொருள் உடையதன்று. புகழ் என்பது ஓர் ஒலிக் குறிப்பாகும். குழந்தை 'வாழ்வாழ்' எனக் கத்திற்று. அவர்கள் 'ஊழ்ஊழ்' என ஊளையிட்டனர் என்பனபோல, அவர்கள் 'புகழ்புகழ்' எனப் பொருமினர் என்பதிலும் 'புகழ்புகழ்' என்பதை ஒருவகை ஒலிக் குறிப்பாகக் கொள்ள வேண்டும். அங்ஙனம் எனில், கல, மள,—என்பனபோலவே, புகழ் என்பதற்கும் தனித்த நிலையில் பொருள் இல்லை.

இரட்டில் பிரிந்திசையா இரட்டைக் கிளவிபோல, மூக்கும் இரட்டை அமைப்பு உடையதாக உள்ளமை ஈண்டு எண்ணத்தக்கது. கண்கள் இரண்டு—காதுகள் இரண்டு—கைகள் இரண்டு—கால்கள் இரண்டு. இவை இரண்டிரண் டாக—இரட்டையாக—இருப்பினும், தனித்தனியே பிரிந் துள்ளன. ஆனால், இரண்டு மூக்குகள் இல்லை; ஒரு மூக்கே, தனித்தனியாக — இரண்டு மூக்காகப் பிரிக்க முடியாதபடி—இரட்டைக்கிளவிபோல், இரண்டு துளைகளை யுடைய ஒரே அமைப்பாக இருக்கிறது. இந்தப் பொருத்த மும் இங்கே சுவை தருகின்ற தன்றோ!

எனவே, மூக்கிரட்டை என்னும் பெயரில் உள்ள இரட்டை என்பதை அடிப்படையாகக் கொண்டு, 'புகழ் புகழ்' என்னும் ஒலிக் குறிப்பாகிய இரட்டைக்கிளவி, சொல் விளையாட்டாக மூக்கிரட்டைக்கு இடப்பட்டது.

புகழ் மங்கை=வெள்ளெருக்கு இது. நம் நாட்டில் மண்ணை நிலமகள் எனவும், நீரைக் கங்காதேவி எனவும், கல்வியைக் கலைமகள் எனவும், செல்வத்தைத் திருமகள் எனவும், வீரத்தை மறமகள் (செயலட்சுமி) எனவும்

பெண்ணாக உருவகித்துச் சொல்வது போலவே, புகழையும் புகழ்மங்கை, புகழ்மகள் எனப் பெண்ணாக உருவகித்துக் கூறுவதுண்டு. இ. சா.:

திவ்வியப் பிரபந்தம்:

" பூமங்கை தங்கிப் புலமங்கை மன்னிப்
புகழ் மங்கை எங்கும் திகழ" – (1162)

**கம்பராமாயணம்:**

" புகழ் மகளைத் தழுவிய" — (இராவணவதை—226)
மேலுள்ள பாடல் பகுதிகளில், புகழ் மங்கை, புகழ் மகள் எனப் புகழ் உருவகிக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

சினத்தின் நிறம் சிவப்பு அல்லது கறுப்பு என்பர்:
" கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள "

என்பது தொல்காப்பிய (சொல்-உரியியல்-75 ஆம்) நூற்பா. இதேபோல் புகழுக்கும் ஒரு நிறம் கூறப்பட்டுள்ளது. புகழின் நிறம், மாசு மறுவற்ற தூய வெண்மை நிறம் என்பது இலக்கிய மரபு. சிவப்பிரகாச அடிகளார், தமது பிரபுலிங்க லீலை எனும் நூலில், இதுபற்றி அழகாகக் கூறியுள்ளார்: சிவனது இருப்பிடம் கைலைமலை. கைலை வெண்மையான வெள்ளி நிறம் உடையது. கைலைக்கு வெள்ளிமலை என்னும் பெயரும் உண்டு. இந்த வெள்ளி மலையாகிய கைலை மலை எவ்வாறு உண்டாயிற்றாம்? சிவனது வெண்மையான புகழ் எல்லாம் ஒருங்கு திரண்டு கைலை மலையாக ஆனதாக அடிகளார் கூறியுள்ளார். அவர் கற்பனைக் களஞ்சியம் என்னும் பட்டப்பெயர் உடையவர் அல்லவா? பாடல்பகுதி:

" கள்ளழிந் தொழுகு செம்பொன்
கடுக்கைவேய்ந் திலகு வேணி

வள்ளல் வெண்புகழ் திரண்ட
வளங்கெழு கைலைக் குன்று ''
(கைலாச கதி: 4 - 2, 3)

கடுக்கை = கொன்றை; கடுக்கை வேய்ந்த வள்ளல் = சிவபெருமான். அவரது வெண்புகழ் — வெண்மையான புகழ் திரண்டு கைலை மலையாயிற்றாம். எனவே, புகழ் வெண்மையானது; வெள்ளைப் பூக்களை உடைய வெள்ளெருக்கு கற்பனையாகப் புகழ் மங்கை எனப்பட்டது. நிறம்.

புகழ் மரம்: அத்திமரம் இது. அத்தி என்பதற்கு யானை என்னும் பொருள் உண்டு. பெரியதும், தெய்வத்தன்மை உடையதும் விநாயகரின் தோற்றம் உடையதுமாகிய யானையின் பெயரைப் பெற்றிருப்பதால் அத்தி மரத்திற்குப் புகழ் உண்டு எனலாம். மற்றுமொரு புகழ்: — முருகனுக்கு மனைவியாகிய தேவயானைக்கும் அத்தி என்னும் பெயர் உண்டு. இதனை, அருணகிரியாரின் திருப்புகழில் உள்ள

'' முத்தைத் தருபத்தித் திருநகை அத்திக்கு இறை ''

என்னும் பாடல் பகுதியாலும் அறியலாம். முத்தையொத்த வரிசையான அழகிய பற்களையுடைய அத்தி தேவயானை. இங்கே அத்தி தேவயானையைக் குறிக்கிறது. எனவே, தெய்வப் பெயரைத் தான் பெற்றுள்ள அத்தி மரம் புகழ் உடைய மரமல்லவா? இத்தகைய சொல்விளையாட்டால், அத்திமரம் புகழ்மரம் என்னும் பெயர் பெற்றது.

அசோக வனம் என்பதிலிருந்து புகழ்மரம் என்பது வரையும் உள்ள பெயர்கள் சா. சி. பி. அகர முதலியில் உள்ளவையாகும்.

இலட்சுமிக் கொடி (சி.வை.அ.): தாலிக் கொடி என்னும் கொடிவகை இது. தாலி பெண்கட்கு மங்கலமான-இலட்சுமி கரமான பொருளாகக் கருதப்படுகிறது. எனவே, தாலிக்

கொடி இப்பெயர் பெற்றது. பண்டு தாலி செய்ய இக் கொடி பயன்பட்டிருக்கலாம்; இதனால் இக்கொடிக்குத் தாலிக் கொடி என்னும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். சார்பு; பயன்.

இலட்சுமி மரம் (சி.வை.அ): சீத்தாமரம் இது. சீத்தா என்பது சீதையைச் சொல் விளையாட்டாகக் குறிக்கும். இலட்சுமியே சீதையாக வந்து தோன்றியதால், சீத்தா மரம் சொல் விளையாட்டாக இப்பெயர் பெற்றது.

கணி (மூ.வை.அ): வேங்கை மரம் இது. கணி என்பது சோதிடனைக் குறிக்கும் பெயர். வேங்கை மரம் ஒரு சோதிடம் (கணிப்பு) சொல்வதால் 'கணி' எனப்பட்டது. வேங்கை மரத்தின் அரும்பு அவிழுங்காலத்தில் தினைப் புனத்தில் தினை முற்றியிருக்குமாம். கானவர்கள், வேங்கையின் அரும்பு அவிழ்வதைக் (விரிவதைக்) கண்டதும், தினை முற்றி விட்டது, இனி அறுவடை செய்யவேண்டும் எனக் கருதி அறுவடை தொடங்குவார்களாம். அதாவது, 'பருவத்தே பயிர் செய்' என்னும் ஔவையின் மொழிக் கேற்ப, ஆண்டுதோறும் குறித்த காலத்தில் தினை விதைப் பார்கள். அது முதிருங் காலம், வேங்கை அரும்பு அவிழும் காலமாக இயற்கையாக அமையும். இதைப் புலவர்கள், வேங்கை கணிப்பு (சோதிடம்) சொல்வதாகக் கற்பனை செய்துவிட்டனர். இலக்கியச் சான்று:- நற்றிணை - 373:

"காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கைப்
பாவமை இதணம் ஏறிப் பாசினம்
வணர்குரல் சிறுதினை கடியப்
புணர்வது கொல்லோ நாளையும் நமக்கே"-

என்பது நற்றிணைப் பாடல் பகுதி. கருத்து:- வேங்கை அரும்பு அவிழ்ந்து விட்டதால், நம்மவர்கள் தினையறுக்க வந்து விடுவர்; இனி நாளைமுதல், தினைப்புனம் காக்கும்

வேலை நமக்கு இராது''- எனத் தோழியும் தலைவியும் பேசிக் கொள்கின்றனர். இப்பாடலால் வேங்கைக்குக் கணி என்னும் பெயர் உள்ளமை புலப்படும். சார்பு - ஒப்புமை.

கோழை அறுக்கும் சூரன்: இது திப்பிலி. கோழையைத் திப்பிலி என்னும் மருந்துச் சரக்கு அறுத்துப் போக்கு வதால், இது கோழை அறுக்கும் சூரன் எனப்பட்டது. இப்பெயர் போகர் நிகண்டில் கூறப்பட்டுள்ளது:-

"கப்பிலியாம் கோழைதனை அறுக்கும் சூரன்
கருதியதோர் திப்பிலியின் பெயரு மாமே''. (701)

என்பது நிகண்டுப் பாடல் பகுதி. இது பற்றிக் கூறும் தேரையர் பாடல் வருமாறு:—

"இருமல் குன்மம் இரைப்புக் கயப்பிணி
ஈளை பாண்டு சந்யாசம் அரோசகம்
பொருமல் ஊதை சிரப்பிணி மூர்ச்சைநோய்
பூரிக்கும் சலதோடம் பீலிகமும்......
பேரும் திப்பிலிப் பேர் அங்கு உரைக்கவே''.

தேரன் வெண்பாப் பாடல்:

"ஈளை இருமல் இரைப்புப் பசப்பிணிகள்
மாள வொழியாமல் வாட்டுமே''.

எனவே, திப்பிலிக்கு (கொடிவகை) இப்பெயர் பொருந்தும். பொருட் பண்பு நூலில் இதற்குக் 'கோழை அறுக்கி' என்னும் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. பயன்.

திரை போக்கி: மிளகு இது. திரை என்பது, உடலில் தோல் சுருங்குதலாகும். மிளகு, திரை வராமல் போக்கிக் காக்குமாம்; அதனால் இப்பெயர்த் தாயிற்று, போகர் நிகண்டில் இப்பெயர் கூறப்பட்டுள்ளது. பாடல்;—

" மிளகினுட பேர்தனையே மொழியக் கேளு
முதிர்ந்து நின்ற திரை போக்கி"- (700)

என்பது நிகண்டுப் பாடல் பகுதி. பயன்.

இவ்வாறு இன்னும் பல்வேறு கலைப் பெயர்கள் மர இனங்கட்கு நம் முன்னோரால் தரப்பட்டுள்ளன. அவற்றை இன்னும் விரிப்பின் பெருகும். மர இனங்கட்குப் புதிய புதிய கலைப்பெயர்கள் வைத்த நம் பெரியோர்களின் பல துறை அறிவு பாராட்டத் தக்கதாகும்.

# ஒப்புமையால் பெற்ற பெயர்கள் சில

அணில்வரிக் கொடுங்காய் = இது வெள்ளரிக்காய். வரி = கோடு. கொடுமை = வளைவு. அணிலின் முதுகின்மேல் உள்ள கோடுகள்போல், வெள்ளரிக்காயின் மேலும் கோடுகள் இருக்கும். வெள்ளரிக்காய் ஓரளவு வளைந்தும் இருக்கும். அதனால் வெள்ளரிக்காய் இப்பெயர் பெற்றது. வடிவம். (சா. சி. பி.)

அணில்வால் = இது ஒருவகைத் தினைக் கதிரைக் குறிக்கும். அந்தத் தினைக் கதிரின் தோற்றம், அணிலின் வால் போன்றிருப்பதால் அணில்வால் எனப்பட்டது. வடிவம். (சா. சி. பி.)

அரிவாள் மூக்குச்செடி = இது மிளிரை என்னும் செடி. அரிவாள்மூக்கு போன்றிருப்பதால் இப்பெயர்த்து. வடிவு. (சி. வை. அ.)

ஆனையடிக் கிழங்கு = இது பெருங்கருணைக் கிழங்கு. சட்டிக் கருணை என்றுங் கூறுவர். ஆனையின் காலடிபோல் பெரிதாயிருத்தலின் இது இப்பெயர்த்து. (சா. சி. பி.). வடிவம். இது சட்டிபோலவும் இருத்தலின் சட்டிக்கருணை எனப்படும். (த. பே. அ.)

இரத்தன்கனி = இது கோவைப்பழம். இரத்தம் (குருதி) போல் சிவந்திருப்பதால் இப்பெயர். வடிவம் – நிறம். (சா. சி. பி.)

எழுத்தாணிப் பூண்டு = எழுத்தாணி போன்ற பூக்களை உடைய ஒருவகைச் செடி இது. எழுத்தாணி என்பது,

முற்காலத்தில் ஓலைச்சுவடியில் எழுதப் பயன்படுத்தப்பட்ட இருப்புக்கம்பி எழுதுகோல் ஆகும். வடிவம். (சா.)

எலி முள்ளு=இராவணன் மீசைப்புல் இது. எலியின் மேலுள்ள மயிர்ப் பகுதியின் இடையிடையே முரட்டுமயிர் இருக்கும். பெருச்சாளியின் முரட்டு மயிர் மிகவும் கூர்மை யாக இருக்கும். கடற்கரையி லுள்ள ஒருவகைப் புல்லின் தொகுதி, இராவணனுக்கு மீசை இருந்தால் எப்படி இருக்குமோ-அதுபோல் தோற்றமளிக்கும். எனவே, இது, இராவணன் மீசைப்புல் எனப் பெயர் பெற்றதன்றி, எலியின் முள்போன்ற மயிர்ப் பகுதியை ஒத்திருப்பதால் எலிமுள்ளு (சா. சி. பி.) எனவும் கூறப்படுகிறது. இதற்கு 'எலிக்குச்சிப் புல்' (த. பே. அ.) என்னும் பெயரும் உண்டு. முரட்டுமயிர் குச்சிபோல் இருப்பதால் எலிக்குச்சி எனப்பட்டது. வடிவம்.

குந்தாணி=மலர்ந்த பெரும்பூக்களைக் குறிக்கும் இது. உரல்மேல் உள்ள குந்தாணிபோல், மலர்ந்த பெரிய மலர் களின் தோற்றம் இருப்பதால் இப்பெயர். வடிவம். (சா. சி. பி.)

மூக்குத்திக் காய்ச்செடி: இது மருதளங்காய்ச் செடி. இதன் காய் மூக்குத்திபோல் இருப்பதால் இப்பெயர்த்து. வடிவம்.

மூக்குத்திப் பூண்டு - இது கூத்தக் குதம்பைச் செடி. இதுவும் மூக்குத்தி ஒப்புமை உடையதாதலின் இப்பெயர்த்து. வடிவம். இவை இரண்டும் சி. வை. அகராதியில் உள்ளவை.

**ஒப்புமைப் பெயர்களும் பொருள்களும்:**

மேலே, ஒப்புமையால் பெறப்பட்ட பெயர்கள் சில, சிறுசிறு விளக்கத்துடன் தரப்பட்டுள்ளன. இனி, பெயர்க் காரண விளக்கம் சிறிதும் இன்றி, ஆடு—மாடு—மான்—

யானை — குதிரை — கழுதை - முயல் — புலி — எலி — மயில்-கிளி-தேள் ஆகியவற்றின் கால் — காலடி — குளம்பு — குளம்படி — வால் — மூக்கு — நாக்கு — செவி — கொம்பு — முகம் — நகம் — கொடுக்கு ஆகிய உறுப்புக்களை ஒத்திருக்கும் மர இனப் பெயர்கள் பின்னும், அவற்றின் ஒப்புமைப் பெயர்கள் முன்னுமாக ஓரளவு தரப்படும். அவை:

### ஆடு

ஆட்டுச் செவி = ஆடு தீண்டாப்பாலை (சா. சி. பி.)
ஆட்டுச் செவிக்கள்ளி = கரித்திராக் கள்ளி (சி. வை. அ.)
ஆட்டுக் கொம்பொதி = ஆத்துக்கொம்பு ஒதியமரம் (சா. சி. பி.)
மேடகக் கோடு = ஆட்டுக்கோட்டுப் பாலை (கோடு = கொம்பு) (சா.)

### மாடு

மாட்டுக் குளம்படி = ஆத கோகம் (சா.)
ஆவின் குளம்படி = ஒருவகைப் பச்சிலை (சா.)
மாட்டுக் குளம்படிக் கொடி = சாகடக் கொடி (சி.)
எருமை நாக்கு = எருமைநாக்குக் கள்ளி (சா.)
எருமை நாக்குப் பூண்டு = நாற்காலிப் பூண்டு (சி.)
எருமை நாக்குச்செடி = இலவதீதச் செடி (சி.)

### மான்

மான் குளம்படிக்கொடி = செங்குளம்படிக் கொடி (சி.)
மான் குளம்படிச்செடி = மான் மாதவச்செடி (சி.)
மான் செவிக்கள்ளி = ஆதி விராகக் கள்ளி (சி.)

### யானை

யானைக்கால் சுவடிக் கொடி = ஆத்தினிச் சுவடிக் கொடி (சி.)

அத்திக்கால் சுவடு=ஆனையடிப் பூண்டு (அத்தி= ஆனை) (சா.)
ஆனைக்கால் மூலி=ஆனையடிப் பச்சிலை (சா.)
ஆனையடி, ஆனைச்சுவடு=ஆனைச் செவியடி (சா.)
ஆனைக்கோடன் புடலை=ஒரு கசப்புப் புடலை (கோடன்=கொம்பன்) (சா.)

### குதிரை

குதிரைக் குளம்படிக் கொடி = தும்பா மாலினிக் கொடி (சி)
குதிரைக் குளம்படி யிலை = நில வேம்பு (மூ)
குதிரைக் குளம்படிச் செடி = சாமரிகச் செடி (சி)
குதிரை வாலித் தட்டை = பரி வாலித் தட்டை (சி)
குதிரை வாலி அரிசி = பரித்தார அரிசி (சி)
குதிரை வாலிப் பூண்டு = மவு வாலிப் பூண்டு (சி)
குதிரைச் செவிப்பூடு = அசுவகர்ணம்—ஒரு பூடு—(சா)
குதிரைச் செவிக் கள்ளி = நாணுகக் கள்ளி இலை (சி)

### கழுதை

கழுதைக் குளம்படி = வட்டக் குளம்படிக் கொடி (சி)

### முயல்

முயல் செவிக் கள்ளி = தெற்றவச் செடி (சி)

### புலி

புலி நகக் கொன்றை = மஞ்சள் கொன்றை (சி)
புலி நகப் பூண்டு = புலி ராகிப் பூண்டு (சி)

### எலி

எலிச் செவிக் கீரை = நிலக் கூந்தல் கீரை (சி)
எலிச் செவிப் பூடு = அத்தி கோவிகப் பூண்டு (சா)

எலிச் செவிக் கள்ளி = ஒரு வகைக் கள்ளி (சா)
வெள்ளெலிச் செவிச் செடி = கத்தரி மணியன் (சி)
சிவப்பெலிச் செவிக்கீரை = நாகதோரணிக் கீரை (சி)
கருப்பெலிச் செவிக் கீரை = இருப்பகக் கீரை (சி)
சிறு எலிச் செவிக் கீரை = ஒரு கீரை வகை (சி)
எலிக்காது = எலிக் காதிலை (சா)
எலிக் கால் = ஒரு பூடு வகை (சா)

### மயில்

மயில் காலடிப் பூண்டு = சிக்காலடிப் பூண்டு (சி)

### கிளி

கிளி முகன் = கற்றாழை (சா);
கிளி மூக்கு = கிளி மூக்கு மாங்காய் (சா)

### தேள்

தேள் கொடுக்குச் செடி = நக்கரிச் செடி (சி)

இவ்வாறு இன்னும் பல்வேறு ஒப்புமைப் பெயர்கள் இடப் பட்டுள்ளன.

# பொன் மாற்றுக் கலைப் பெயர்கள்

பொன் என்றால் உலோகம். ஓர் உலோகத்தை மற்றோர் உலோகமாக மாற்றுவது, பொடி (பஸ்பம், செந்தூரம்) செய்வது, திரித்துப் பல செயல்களுக்குப் பயன் படுத்துவது முதலியன செய்வதைப் 'பொன் மாற்றுக் கலை' எனலாம். இரச வாதம் என்பது இதைச் சார்ந்ததே.

இரசம் என்பது, வெள்ளிபோல் பளபளப்பான ஒரு வகை நீர்ப் (திரவப்) பொருள்; பளு உள்ளது; தொட்டால் கையில் ஒட்டாது; நெருப்பில் பட்டால் ஆவி யாகும்; கீழே கொட்டினால் சிதறிப் போகும். நீர்ப் பொருளான இந்த இரசத்தைக் கட்டச் செய்வது ஓர் அரிய செயல்.

பொன் மாற்று தமிழில் வேதியியல் எனவும், வட மொழியில் இரசாயனம் எனவும், ஆங்கிலத்தில் (Chemistry) எனவும் பெயர் வழங்கப்படுகிறது. வேதியை வேதம் என்றும் கூறுவர். இந்த வேதமே பின்பு இரச வாதம் எனப்பட்டுவிட்டது. இரசாயனம் என்னும் சொல் இரசம் என்பதிலிருந்து தோன்றியதே.

இரும்பு, ஈயம், தாமிரம் போன்ற மட்டமான உலோகங் களைத் தங்கமாக்கிப் பெரும்பொருள் ஈட்டக் கண்டு பிடிக்கப்பட்ட கலை 'தாது வாதம்' (Alchemy) எனப்படும். இது, பிற்காலத்தில் நடந்த பிணி போக்கல், மற்ற மற்ற பொருள்களில் மாறுதல் செய்தல் முதலியவை தொடர் பான ஆராய்ச்சியின் பயனாக, இக்காலத்தில், வேதியியல் (Chemistry), இயற்பியல் (Physics) போன்ற அடிப்படை

அறிவியலின் தோற்றத்திற்குக் காரணமாயிற்று — என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கலை, தொடக்கத்தில், மருந்து செய்து அதனால் உடல்நலம் பேணித் தெய்வ நலம் பெறுதற்காகச் சித்தர்களால் கையாளப்பட்டு வந்ததாம். பின்னர், உலோக மாற்று செய்து பொருள் ஈட்டும் அளவுக்கு வந்துவிட்டது.

இந்தப் பொன் மாற்று வேலையைச் செய்யச் சில மர இனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அயம், இரும்பு, எஃகு, ஈயம், காரீயம், துத்தநாகம், உப்பு, கல்லுப்பு, நவச்சாரம், காயம், காவிக்கல், இரசம், மனோசிலை, காந்தம், கந்தகம், செம்பு, தங்கம் முதலிய ஒன்பது உலோகங்களையும் — உலோகஞ் சார்ந்த அல்லது உலோகம் போன்ற பொருள் களையும் திரித்தும் மாற்றியும் பொடித்தும் பயன் உண்டாக் குகிற சில மர இனங்களின் பட்டியல் வருமாறு: கீழ் வருவனவற்றுள் இரும்பைத் தங்கமாக்கி தவிர, மற்றவை சா.சி.பி. அகர முதலியில் உள்ளன.

அயத்துக்கு உருக்கி = இரத்த மண்டலப் பூண்டு
அயத்தை ஈயமாக்கி = வீழிச் செடி
அயம் உருக்கி = காட்டா மணக்கு (செடி வகை)
இரசம் தாக்கும் மூலிகை = பெரிய முள்ளங்கி (செடி)
இரும்பு அறுப்பி = கல்லி இரும்பிலை
இரும்பு நீற்றி (இரும்பைப் பொடியாக்குவது) = எருக்கிலை
இரும்பைத் தங்கமாக்கி = இரும்பிலிச் செடி (மலையகராதி)
ஈயங் கட்டி = இரும்பிலி இலை
ஈயங் கொல்லி = கரிய போளப் பூடு
ஈயத்தை நாச மாக்கி = கொடிக்கள்ளி (செடிவகை)
ஈயத்தைப் பற்ப மாக்கி = ஆராக்கீரை
ஈயமாக்கி = காட்டாமணக்கு (செடிவகை)

உப்பைத் திரிச்சி = கட்டுக்கொடி

உபரசத்தைத் தயில மாக்கி = சின்னாருகைக்கொடி

உருக்குதனைப் பற்ப மாக்கி = கிளுவை (மரம்)

உருக்குமித்திரன் = (எஃகின் நண்பன்) வெள்ளையாமணக்கு (செடிவகை)

உலோக பந்தனி = (உலோகத்தைக் கட்டுவது) மான் செவிக்கள்ளி (செடி)

கந்தகச் சத்துரு = ஆலமரம்

கல்லுப்பை உறுதியாக்கி = புனம் புளி

கல்லெல்லாம் சத்தாக்கி=பேய்த் தும்பை (செடி)

காயத்தைச் செம்பாக்கி=செந்திராய் (கீரைவகை)

காயத்தைப் பவளமாக்கி=செந்திராய் ,,

காயத்தை வேதிச்சி=கருநொச்சி (மரம்)

காரிகத்தைப் (காவிக்கல்லைப்) போக்கு மூலி=காரிகமூலி

சாரத்தைக் (நவச்சாரத்தைக்) கட்டி=காட்டுத்துளசி (செடி)

சாரத்தைச் சாகப் பண்ணி=செவ்வறளி (மரவகை)

சாரத்தைத் தமனியம் (பொன்) ஆக்கி=வன மிரட்டி

சாறுதனில் நாகம் (துத்தநாகம்) கட்டி = செம்பருத்தி (செடி)

சூதத்தை (பாதரசம்) சணத்தில் கட்டி (வேம்பு—மரம்).

செம்பின் ஊறல் போக்கி = காட்டுக் கருணை (செடி)

செம்புக்குள் காரீயம் கட்டி=திராய் (கீரைவகை)

செம்பு சுத்தியாக்கி=பேய்க் குமட்டி (கொடிவகை)

செம்பைக் குருவாய்ப் (பொன்னாய்ப்) பண்ணி=(மரவகை) கல்லறளி. (குரு என்னும் வியாழனுக்குப் பொன் என்னும் பெயரும் உண்டு)

செம்பைப் பற்பமாக்கி=உச்சிலந்தி (மரவகை)
தங்கத்தைப் பற்பமாக்கி=பனி நாக்கி மூலிகை
நவலோகக் களிம்பு போக்கி=தேவதாளி (செடிவகை)
நவலோக (ஒன்பது உலோகங்களையும்) வேதிச்சி=கரு நெல்லி (மரம்)
நற்காந்தம் பற்பமாக்கி=இடு கொள் (செடி)
நாகத்தைச் சூரண மாக்கி=வெற்றிலை
நாகத்தைச் செந்தூர மாக்கி=நாக செந்தூரி மூலிகை
நாகத்தை நாச மாக்கி=முருங்கை மரம் (நாகம்=துத்த நாகம்)
நாகத்தைப் பற்பமாக்கி=மான் செவிக் கள்ளி (செடி)
பழச் சாற்றில் அயம் செம்பாக்கி=செங்கத்தாரி (செடி)
மனோசிலையை மார்க்க மாக்கி=கருங் கொடி
(மனோசிலை=ஒரு பாஷாணவகை. மார்க்க மாக்குதல்= பாஷாணத்தை ஒழுங்கு செய்தல்
மனோசிலையை மெழுகாக்கி=பருத்தி (செடி)
வேர்ச் சாற்றில் செம்பு சுத்தி—பேய்க்குமட்டி (கொடி)
வேர்ச் சாற்றில் நவலோக சுத்தி=காட்டுக் கொள் (செடி)
வேர்ச் சாற்றில் (துத்த) நாகங் கட்டி=விருத்திச் செடி.

இத்தகைய பெயர்களால், நம் முன்னோரின் பல்வேறு அறிவியல் அறிவு புலப்படும். இச்செல்வத்தை நாம் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

# இந்நூலுக்குக் கருத்து வழங்கிய கருவூலங்கள்

இந்நூலின் பக்க எண்

குறிப்பு:- கீழே, முதலில் இந்நூலின் பக்க எண்ணும், அடுத்து மேற்கோள் நூல் பெயரும் அதன் உட்பிரிவும், இறுதியாக நூலாசிரியர் பெயரும் தரப்பெற்றிருக்கும்:—

10 தேரையர் குணபாடம்—வசம்பு—தேரையர்

11, 12, 13, அகத்தியர் குணபாடம்—கடுக்காய்—அகத்தியர்

15 சீவக சிந்தாமணி—2216—93—திருத்தக்க தேவர்

,, திவாகர நிகண்டு—2-31—திவாகரர்

16 சூடாமணி நிகண்டு — 2-31 — மண்டல புருடர்

17 அ. கு. பா. — கோதுமை — அகத்தியர்

18 தேரையர் குணபாடம் — வல்லாரை — தேரையர்

22 அ. கு. பா. — ஓதியமரம் — அகத்தியர்

25 முத்தொள்ளாயிரம் — சேரர் — ஆசிரியர் தெரியவில்லை.

26 கொன்றை வேந்தன் — காப்பு — ஔவையார்

26, 27 கந்த புராணம் — வள்ளியம்மை திருமணப் படலம் — 113 — கச்சியப்பர்

32 தமிழ்க் கலைக் களஞ்சியம் — காந்தள்

33 தேரையர் வெண்பா — எருக்கு — தேரையர்

35 தேரையர் பாடல் — சுக்கு — தேரையர்
37 பொய்யாமொழிப் புலவர் பாடல் — "பொன்போலும்"
40 தேரையர் பாடல் — அதிமதுரம் — தேரையர்
42 நல்வழி — 23 — ஔவையார்
44 தேரன் வெண்பா — வல்லாரை — தேரன்
45 அப்பர் தேவாரப் பாடல்கள் — பொது & திருவானைக்காப் பதிகம்
48 சுந்தரர் தேவாரம் — திருமழபாடிப் பதிகம்
49 அ. கு. பா. — இலவங்கம் — அகத்தியர்
50 பாரதம் — சம்பவ — 78 — வில்லிபுத்தூரார்
,, திருக்குறள் — 12 — திருவள்ளுவர்
51 புறப் பொருள் வெண்பா மாலை - ஐயனாரிதனார்— சிறப்புப் பாயிரம் — 1, 2
51 கம்பராமாயணம் — ஆரணிய காண்டம் — அகத்தியர் படலம் — 47 — கம்பர்
,, கடம்பவன புராணம்—இலீயா — 18 — வீமநாத பண்டிதர்
53 சீவக சிந்தாமணி—73—திருத்தக்க தேவர்
54 பொருட் பண்பு நூல்—தூதுவளை — க.ச. முருகேச முதலியார்
,, அ.கு.பா. — வல்லாரை—அகத்தியர்
56 கல்வெட்டுப் பகுதி — வெட்டி
58 சிலப்பதிகாரம் — 11-51; 8-1 — இளங்கோவடிகள்
59 தேரன் வெண்பா — வாளம் — தேரன்
,, அ.கு.பா. — நேர் வாளம்—அகத்தியர்

60 தேரன் வெண்பா — சீரகம் — தேரன்
,, தேரையர் குணபாடம் — சீரகம் — தேரையர்
62 அ.கு.பா. — தினை — அகத்தியர்
65 அ.கு.பா. — புளி நரளை — அகத்தியர்
66 குறுந்தொகை — 47-நெடுவெண்ணிலவினார்
67 அகநானூறு — 48-6,7 — தங்கால் முடக்கொற்றனார்
68 அ.கு.பா. — புகையிலை — அகத்தியர்
71 அ.கு.பா. — சுக்கு — அகத்தியர்
,, தேரன் வெண்பா — சுக்கு — தேரன்
72 பணவிடு தூது — 143 — ஆசிரியர் தெரியவில்லை.
77 பரிபாடல் — 14–19,20 — கேசவனார்
,, பரிபாடல் — 17-28 முதல் 31 — நல்லச்சுதனார்
77, 78 பரிபாடல் — 18-51 முதல் 54 — குன்றம் பூதனார் & பரிமேலழகர் உரை
77 திருக்குறள் — 277 — திருவள்ளுவர்
79 தேரையர் குணபாடம் — சீரகம் — தேரையர்
80 தேரையர் குணபாடம் — ஆவாரை — தேரையர்
,, அ.கு.பா. — மேகாரி — அகத்தியர்
83 திருக்குறள் — 941 — திருவள்ளுவர்
85 அ.கு.பா. — மிளகு — அகத்தியர்
,, தேரையர் குணபாடம் — மிளகு — தேரையர்
,, தேரன் வெண்பா — மிளகு — தேரன்
86 திருக்குறள் — 14 — திருவள்ளுவர்
87 அ. கு. பா. — புன்னை — அகத்தியர்
87, 88 அ. கு. பா. — ஆரைக்கீரை — அகத்தியர்

88 தேரன் வெண்பா — அறுகு — தேரன்
91 தேரையர் குணபாடம் — அதி மதுரம் — தேரையர்
,, ஓலைச்சுவடி ஏடுகள் — அதி மதுரம்
93 அ. கு. பா. — யானைத் திப்பிலி — அகத்தியர்
94 அ. கு. பா. — அவுரி — அகத்தியர்
95 திரு மந்திரம் — 252 — திருமூலர்
98 தொல்காப்பியம் — மரபியல் — 86 — தொல்காப்பியர்
,, சிலப்பதிகாரம் — 16-35 — இளங்கோவடிகள்
101 திருப்புகழ் — காப்பு — அருணகிரி நாதர்
102 திவாகரம் — 4-81 — திவாகரர்
103 தேரன் வெண்பா — வல்லாரை — தேரன்
104 அபிதான சிந்தாமணி — தருப்பை — ஆ. சிங்காரவேலு முதலியார்
105 அ. கு. பா. — கற்றாழை — அகத்தியர்
105 அகநானூறு — 2 — கபிலர்
,, பழமொழி நானூறு — 120 — முன்றுறையரையனார்
110 தேரன் வெண்பா — திப்பிலி — தேரன்
111 ஒரு மருத்துவ ஓலைச் சுவடி — ஆடாதோடை
113 தமிழ்க் கலைக் களஞ்சியம் — முதல் தொகுதி
113 அ.கு.பா. — தேற்றான் — அகத்தியர்
115 அ.கு.பா. — கோவை — அகத்தியர்
116 தொல்காப்பியம் — உரியியல் — 76 — தொல்காப்பியர்
117 ஆத்தி சூடி — 26 — ஔவையார்
118 தொல்காப்பியம் — அகத்திணையியல் — 5 — தொல்காப்பியர்
120 தேரையர் குணபாடம் — பெருங்காயம் — தேரையர்

121 அகத்தியர் குணபாடம் — திரிபுரம் – அகத்தியர்

123 குறுந்தொகை — 364-1,2 — ஔவையார்

,, அகநானூறு — 6-18,19 — பரணர்

125 திவ்வியப் பிரபந்தம் — 873 — தொண்டரடிப் பொடியாழ்வார்

,, அகத்தியர் குணபாடம் — வாத மூலி — அகத்தியர்

126 பிங்கல நிகண்டு — பொய் — பிங்கலர்

127 திவாகர நிகண்டு — 9-53 — திவாகரர்

,, மணிமேகலை — விழாவறை காதை — 46-47, — சீத்தலைச் சாத்தனார்

128, 129 — வேலூர் கண்ணப்பர் உரை

130 திருப்புகழ் — 136- (முனிந்துரை) — அருணகிரி நாதர்

,, தனிப்பாடல் திரட்டுச் செய்யுள் —''வெங்காயம்''.

131 திவாகரம் — 4-81 — திவாகரர்

135 ஓர் ஓலைச் சுவடிப் பாடல்

136 சென்னைத் தமிழ்ப் பேரகராதி — சென்னைப் பல்கலைக் கழகம்

137 திருக்குறள் – 16 — திருவள்ளுவர்

139 மணிமேகலை — விழாவறைகாதை — 46,47 — சீத்தலைச் சாத்தனார்

,, போகர் ஆயிரத்திருநூறு — முதல் காண்டம் — 766 — போகர்

140 திருக்குறள் — 9 — திருவள்ளுவர்

143 புறநானூறு — 164-1,2 — பெருந்தலைச் சாத்தனார்

144 அகத்தியர் குணபாடம் — கடுக்காய் — அகத்தியர்

,, அகத்தியர் குணபாடம் — ஊமத்தம் — அகத்தியர்

145 தேரன் வெண்பா — எருக்கு — தேரன்
,, அகத்தியர் குணபாடம் — வேளைக் கீரை
— அகத்தியர்
146 தேரன் வெண்பா — கொன்றை — தேரன்
147 அ.கு.பா. — அருநெல்லி — அகத்தியர்
,, திருநாவுக்கரசர் தேவாரம் — பொது - தனித்திருத் தாண்டகம்—10
,, திருநாவுக்கரசர் தேவாரம் — கோயில் பதிகம் — தனி விருக்தம்—4
152 தேரையர் காண்டம் — வெந்தயம் — தேரையர்
153 அ.கு.பா. — குளிர் நாவல் — அகத்தியர்
154 பொருட் பண்பு நூல் — பாக்கு — க.ச. முருகேச முதலியார்
154 போகர் நிகண்டு — 766 — போகர்
155 அ.கு.பா. — மூக்குறட்டை — அகத்தியர்
,, தேரன் வெண்பா — மூக்கிரட்டை — தேரன்
,, நன்னூல் — பொதுவியல் — 45 — பவணந்தி முனிவர்
157 திவ்வியப் பிரபந்தம் — 1162 — திருமங்கையாழ்வார்
,, தொல்காப்பியம் — உரியியல் — 75 — தொல்காப்பியர்
,, பிரபுலிங்க லீலை — கைலாச கதி — 4-2,3
— சிவப்பிரகாச அடிகளார்
158 திருப்புகழ் — "முத்தைத்தரு" — அருணகிரிநாதர்
159 ஆத்திசூடி — 22 — ஔவையார்
,, நற்றிணை — 373 — கபிலர்
160 போகர் நிகண்டு — 701 — போகர்
,, தேரையர் பாடல் — திப்பிலி — தேரையர்
,, தேரன் வெண்பா — திப்பிலி — தேரன்
161 போகர் நிகண்டு — 700 — போகர்

# பெயர்க்காரண விளக்கம் பெற்றுள்ள அனைத்துப் பெயர்களின் அகரவரிசை

எண் : பக்க எண்


அ

அக்கினிச் சருமன் 18
அக்கினிச் சலம் 32
அக்கினி சாந்தம் 18
அக்கினி சிகை 19
அகத்தி 79, 87, 88
அகண்ட பூண்டு 18
அகண்ட மாரீசன் 21
அகில் 77
அசோகவனம் 138
அத்தன் பாதம் 20
அத்திக்காய் சுவடு 165
அதிக சுர சாந்தினி 21
அதிசாரம் போக்கி 22
அதிதாகம் நீக்கி 91
அடவியில் திருடி 49
அணிமுலை மாது 21
அணியுரி மரம் 91
அணில் வரிக் கொடுங்காய் 162
அணில் வால் 162
அபயன் 11
அமங்கலம் 20
அமலநாயகம் 20
அமலபலம் 20
அமலவர்க்கம் 20
அமலன் 12
அமிர்தபலம் 20
அமிர்தம் 11
அயத்துக்கு உருக்கி 168
அயத்தை ஈயமாக்கி 168
அயம் உருக்கி 168
அர்ச்சனை யாதி 19
அரசு 76
அரன் பூசனை மரம் 19
அரிப்பிரியை 22
அரிவாள் மூக்குச் செடி 162
அருக்கம் 133
அருக்கன் 133
அவசியம் 24
அழகான கருப்பி 21
அழகியாள் 21
அழகுசிவப்பி 21
அழகு வண்ணத்தி 137
அன்னதானக் குருவை 19
அன்னை 145
அனாதி 19

ஆ

ஆகாச கத்தரி 22
ஆகார வேசி 10
ஆசைக்கு உரியாள் 22
ஆட்கொல்லி விதை 146
ஆட்டுக் கொம்பொதி 164
ஆட்டுச் செவி 164
ஆட்டுச் செவிக் கள்ளி 164
ஆடிய கூத்தன் மரம் 92
ஆடைக்கு ஆதி 23
ஆண் உறுப்பு 23
ஆண் மஞ்சள் 138
ஆண் மூங்கில் 138
ஆணாய்ப் பிறந்தோன் 112
ஆதி 23
ஆதிமருந்து 23
ஆயிரங்கச்சி 146
ஆயிரங்கண்ணி 23
ஆரோக்கியக்காரி 24
ஆரோக்கிய மாதா 24

ஆவிபத்திரம் 107
ஆவின்குளம்படி 164
ஆள் மறித்தான் புல் 92
ஆளையடிச்சான் 112
ஆறுமணிப்பூ 136
ஆனந்த கற்பம் 138
ஆனைக்கண்ணன் 24
ஆனைக்கால் மூலி 165
ஆனைக் கோடன் புடலை 165
ஆனைச்சுவடு 165
ஆனையடி 165
ஆனையடிக்கிழங்கு 162

இ

இந்திராணிகை 112
இரச கந்தம் 24
இரச பலம் 81
இரசம் தாக்கும் மூலிகை 168
இரத்தன்கனி 162
இரத்தநதி 24
இராசகனி 81
இராமபத்தினி 92
இராமன்தேவி 92
இராவணன் மீசைப்புல் 91, 163
இருகுரங்கின் கை 25
இருதய கந்தம் 25
இரும்பிலி 136
இரும்பு அறுப்பி 168
இரும்பு நீற்றி 138, 168
இரும்பைத் தங்கமாக்கி 168
இருளகற்றி 146
இலட்சுமிக்கொடி 158
இலட்சுமிமரம் 159
இலட்சுமி விலாசம் 138
இருமுலை மாது 26
இலௌகிகம் 82
இளநீர் 81
இளிந்தகாய் 146

இறைவர்மலர் 25
இறைவன் 107

ஈ

ஈசனார் அணி 26
ஈசுரமூலி 65
ஈயங்கட்டி 168
ஈயங்கொல்லி 168
ஈயத்தை நாசமாக்கி 168
ஈயத்தைப் பற்பமாக்கி 168
ஈயமாக்கி 168

உ

உச்சதரு 112
உடல்தேற்றி 89
உத்தமாதி 28
உதிரும்பழம் 28
உப்பைத்திரிச்சி 169
உபரசத்தைத் தயிலமாக்கி 169
உமிழ்நீர்ப்பெருக்கி 28
உயர் வண்ணத்தி 28
உயிர்காத்தி 28
உயிர்காப்பாற்றி 28
உயிர்காப்பாற்று மூலி 92
உரககன்னி 29
உரமாக்கி 89
உருக்குதனைப் பற்பமாக்கி 169
உருக்குமித்திரன் 169
உருத்திரகோபம் 28
உருத்திரம் 82
உருமாம்பழம் 29
உருமாறிமூலி 29
உறைப்பான் 10
உரோகிப்பண்டிதன் 11
உலக்கைக்கனி 29
உலகம் காத்தான் 113
உலக மாதா 29

உலர்ந்த இஞ்சி 29
உலோகபந்தனி 169

எ

எண்ணான் 140
எண்ணெய்போக்கி 27
எமநாசம் 27
எருதுகன்னிமரம் 91
எருமை நாக்கிக் கிழங்கு 132
எருமை நாக்கு 164
எருமை நாக்குச்செடி 162
எருமைநாக்குப்பூண்டு 162
எல்லிநாயகி 27
எலிக்காது 166
எலிக்கால் 166
எலிக்குச்சிப்புல் 163
எலிச்செவிக்கள்ளி 166
எலிச்செவிக்கீரை 165
எலிச்செவிப்பூடு 165
எலிமுள்ளு 163
எழுத்தாணிப்பூண்டு 162

ஐ

ஐமுகி 30

ஒ

ஒட்டுக்கண்ணாள் 30
ஒடியல் கிழங்கு 30
ஒண்டிப்பார்ப்பான் 30
ஒருமுலை மாதர் 30
ஒன்றல்காரி 30

ஓ

ஓலைச் சக்கரம் 31

க

கங்குல் சிறை 31
கங்கை நிருபம் 16
கசாங்கு கண்ணி 31
கசப்பு 31
கடல்விசிறி 142
கடலடைத்தான் 113
கடலிச்சி 142
கடவுள் 142
கடிச்சவாய்துடைச்சான் 146
கடினபலம் 31
கண்டகபலம் 113
கண்டால் மயங்கி 31
கண்ணழுகுக்கொடி 32
கண்ணனிட மூலி 32
கண்ணாடிக்கள்ளி 32
கண்ணுக்கேற்றாள் 140
கண்ணொளிமூலி 140
கண்ணோவுப்பூண்டு 32
கண்வலி போக்கி 32
கணபதி பத்திரம் 88
கணி 105,159
கதலி தனம் 33
கதிர்விடு தானியம் 140
கதிரவன் 33
கந்தகச் சத்துரு 169
கந்த குடம் 33
கந்த நிலையம் 141
கந்த பந்து 141
கந்த மோகினி 141
கந்த வசீகரம் 141
கப்படி 141
கபநாசனி 113
கபமகற்றி 33
கபமறுக்கும் குடோரி 42,92
கபவாதநாசனி 33
கபவாத மறியான் 33
கபால பாணியோன் 34
கபாலி 34

கம்பளிப் பூச்சிமரம் 141
கமண்டலம் 141
கயந்தலை 141
கர்ப்பபாதகம் 36
கர்ப்பாக்கினி 38
கரபத்திரம் 34
கரித்தோல் 36
கரியமணி 36
கருநிறமலச்சி 36
கருநேத்திரத்தார் மாலை 36
கருப்பு வில் 142
கருப்பெலிச் செவிக்கீரை 166
கல்லுப்பை உறுதியாக்கி. 169
கல்லெல்லாம் சத்தாக்கி 169
கலப்பை 32
கழுதைக்குளம்படி 165
கன்னிகுமரி 142
கன்னி நாகு 142
கனிந்த பழம் 36
கனல் பாலி 142

கா

காசிக் கிருஷ்ணன் 36
காட்டெரி 36
காமன் 110
காமன் ரதி 143
காமாலை அத்திசுர நாசனி 37
காமலை நிவர்த்தி 37
காய் தெரியான் 143
காயத்தைச் செம்பாக்கி 169
காயத்தைப் பவளமாக்கி 169
காயத்தை வேதிச்சி 169
காயின் பனை 37
கார்காய் 37
கார்த்திகைப்பூ 32
காரிகத்தைப் போக்கு மூலி 169
காலனை உதைத்தோன் 34
காலனை வென்றோன் 34
கானக் குதிரை 38
கானக்குதிரை மேல் தோல் 38
கானகத்துக் கதிபதி 37
கானக விருத்தி 38
கான விந்திரன் 105
காஸ் மீரம் 114

கி

கிராணித் திரவியம் 9
கிருட்டிண நயனம் 17
கிருட்டிண பாணம் 114
கிருஷ்ணப் பிரியம் 38
கிருஷ்ண மாது 38
கிருஷ்ணா 38
கிளிமுகன் 166
கிளிமூக்கு 166
கிழவன் தாடிப்பூண்டு 93

கீ

கீரைச் சிறுமி 93

கு

குகன் 38
குஞ்சரமயக்கி 93
குஞ்சரி 38
குட்டப்பாண்டுநாசனி 39
குட்டம் போக்கி 39
குட்டம்விரணம்போக்கி 39
குட புட்பம் 39
குடல் பற்றாப் பிஞ்சு 114
குடி கேடன் 42
குடி வருணி 39

குடை 105
குடைச்சி 39
குணத்தி 39
குணம்பாழ் 39
குதிரைக் குளம்படிக் கொடி 165
குதிரைக் குளம்படிச் செடி 165
குதிரைக் குளம்படியிலை 165
குதிரைக் குளம்பு 114
குதிரைச் செவிக்கள்ளி 165
குதிரைச் செவிப்பூடு 165
குதிரைப் பல்லன் 105
குதிரை வாலி அரிசி 165
குதிரை வாலித்தட்டை 165
குதிரை வாலிப்பூண்டு 165
குந்தாணி 163
குப்பைக் குடையான் 39
குமரகன் பெண்டிர் 39
குமரனுட மனைவிமூலம் 40
குயில் மொழி 40
குரங்கிலை 40
குரங்கு மூஞ்சிப்பூ 40
குரு வுபதேசம் 114
குலவலி 115
குழவித்தாய் 11
குளிர் காந்திச்செடி 93
குளிர்ந்து கொல்லி 115
குறுக்கன் 40

கூ

கூட்டாளி 41
கூத்தவாதி 41
கூத்தனம் 41
கூத்தானம் 41
கூந்தலழகி 41
கூர்ச்ச சேகரம் 115
கூர்ச்சேகரம் 115
கூரிய சேகரம் 41
கூவு சுணங்கன் 41
கூனி 41

கெ

கெருடாதிபதி 42

கே

கேரளி 42

கை

கைப்பாகன் 43
கைப்பான் 43
கையிருப்பு 43
கையில் கனி 42

கொ

கொக்குக் காலி 43
கொக்கு மரம் 43
கொடிக்கால் கீரை 43
கொடிக்கால் மரம் 43
கொடியோன் 105
கொண்டல் மேனி 43
கொழுக்கட்டை 115
கொறடா 115
கொன்றை சூடி 43

கோ

கோகில நயனம் 44
கோடல் 32
கோடை 32
கோடைக்கு வாடன் 116
கோதை மாதவி 44
கோபி 116
கோமூத்திரிகை 143
கோரக்கர் மூலிகை 44
கோழையறுக்கி 160

கோழையறுக்கும் சூரன் 160

ச

சக்களத்தி 44
சகாதேவம் 147
சட்டிவட்டு 116
சடாதரன் 147
சடைக்கந்தம் 116
சடைச்சி 73
சத்தபர்ணி 116
சதாமூர்க்கம் 116
சந்திரகாந்திப்பூ 93
சந்திரன் தங்கச்சி 148
சந்து நடந்தான் 37
சமணம் 148
சரசுவதி 44
சவுபாக்கியம் 93
சவுரி 116
சனார்த்தனம் 149

சா

சாந்தி 106
சாதக சித்தி 45
சாதனகற்பமூலி 45
சாம்பசதாசிவம் 149
சாரத்தைக்கட்டி 169
சாரத்தைச் சாகப் பண்ணி 169
சாரத்தைத் தமனியாக்கி 169
சாறுதனில் நாகம் கட்டி 169

சி

சிங்கப்பெருமான் 106
சிங்காரம் 149
சிஞ்சைவித்துரி 117
சிஞுங்கி 45
சிதம்பரம் 46
சிநேகபலம் 117
சிநேகம் 46
சிரஞ்சீவி 117
சிருங்காரம் 117
சில்லி 86
சிவசக்தி 13
சிவப்பெலிச் சிறுகீரை 166
சிவசிவாமரம் 45
சிவாலயம் 117
சிறுஎலிச்செவிக்கீரை 166
சிறுநீர்ப் பெருக்கி 79

சீ

சீவசாதனம் 118

சு

சுகுமாரம் 149
சுகப்பிரியை 118
சுடலைதனில்நிர்த்தன் 47
சுடலையாடி 47
சுடுவான் 10
சுண்ண அரிசி 18
சுந்தர நங்கை 47
சுப்பிரமணியம் 118
சுரசாந்தினி 47
சுராகாரம் 118
சுருங்கி 119
சுவர்தாங்கி 143
சுவர்ணவர்ணன் 119
சுவாச காசகி 47
சுவாசம் போக்கி 47
சுவேதம் ஆடிய கூத்தன் 47
சுள்ளிவேகன் 119

சூ

சூதத்தைச்சணத்தில் சுட்டி 169

சூதவைரி 119
சூரனுடகனி 47
சூரியகாந்தி 76
சூரிய மணி 119

### செ

செத்தல் 119
செந்தீவண்ணன் 47
செந்தீவண்ணன் செடி 94
செந்துநாசனம் 119
செம்பின் ஊறல் போக்கி 169
செம்புக்குள் காரீயம் கட்டி 169
செம்பு சுத்தியாக்கி 169
செம்பைக் குருவாய்ப் பண்ணி 169
செம்பைப்பற்பமாக்கி 170

### சே

சேவகன் 106
சேஷையரிசி 120

### சோ

சோகம்நீக்கி 48

### த

தங்கத்தைப் பற்பமாக்கி 170
தபனமணி 120
தருசீவநம் 120
தருவிராசன் 106
தலைக்கணி, தலைக்கணை 48
தலைச்சூடி 48
தலைவலி போக்கி 48
தவளம் 106
தளைப்படான் 48
தன்மராசா 107
தனவஞ்சன் 149
தனவான் 150
தனுத்திருமரம் 94
தனுவிருக்கம் 106
தனைமயக்குமூலி 48

### தா

தாகசாந்தி 48
தாகசுர வினாசி 48
தாகநாசனி 49
தாதி 49
தாமிரபல்லவம் 150
தாய்க்கீழ்ப் பிள்ளை 49
தால பத்திரம் 120
தாலிக் கொடி 158

### தி

திசைப் பூண்டு 39
திரிதேகி 107
திரிபுசம் 150
திரிபுரம் 120
திரிபுரமெரித்தான் 148
திரியட்சி 121
திருடபலம் 49
திருகுபலை 121
திருட மூலம் 107
திருடன் 107
திருடி 49
திருடிநாயகன் 49
திருநீலகண்டன் 50
திருமால் மூலிகை 50
திருவஞ்சகன் 151
திரை போக்கி 160
திவாகரம் 152

தீ

தீத்தெய்வம் 50
தீபம் 121

து

துகில்பீசம் 50
துகிலி 50
துண்டு 121
துப்புநெல்லி 50
துரங்கப்பிரியம் 16
துரியோதனன் பூ ூ0

தூ

தூய்மை 51

தெ

தெட்சணாமூர்த்தி 51
தெண்டபாணி 52
தென் 107

தே

தேர்வாசம் 52, 152
தேவபுத்திரர் 152
தேவபூசைப் பூ 52
தேவர்கோன் 153
தேவி 108
தேள் கொடுக்கிச் செடி 166

தொ

தொங்கி 121
தொட்டக்கால் வாடி 52
தொட்டால் சிணுங்கி 52
தொட்டால் சுருங்கி 119

தோ

தோகைமுக பூஷ்ணம் 52
தோப்பி 52
தோழி 53
தோன்றி 32
தோன்றியடி 53

ந

நஞ்சு முறித்தான் 144
நட்சத்திரக் கண்டகி 122
நட்சத்திரக் காட்சி 53
நடக்கையறிவான் 53
நடமிடு மீசன் 53
நண்பன் 108
நமனை விரட்டி 53
நயன சஞ்சீவி 54
நயன வல்லி 54
நரம்பன் 122
நரைதிரை மாறப்பண்ணி 54
நரை நாசனி 54
நவக்கிரகத தும்பை 55
நவலோகக் களிம்பு போக்கி 170
நவலோக வேதிச்சி 170
நற்காந்தம் பற்பமாக்கி 170
நற்சேவகன் 55

நா

நாக்கறுத்தான் 55
நாகத்தைச் சூரண மாக்கி 170
நாகத்தைச் செந்தூர மாக்கி 170
நாகத்தை நாசமாக்கி 170
நாகத்தைப் பற்பமாக்கி 170
நாகேசுரம் 122
நாமதாரி 55

நாமம் 108
நாம வைகுண்டம் 108
நாய்க்கடி போக்கி 55
நாய்நாக்குப் பூடு 94
நாய் வணங்கி 55
நாராயணி 57
நாறுகட்டி 94
நான்முகப்புல் 122

நி

நிதி நாயகன் 56
நின்றால் சிணுங்கி 57
நின்றால் மேனி 57

நீ

நீர்க்குடத்தி 57
நீர்நாய் 123
நீர்வாளி 57
நீராடல் 122
நீலப்புடவி 124
நீல பத்திரம் 124
நீல புட்பம் 124
நீலபுட்பிகை 124
நீறணிந்தோன் 58

நெ

நெடியோன் 58
நெடுமி 124
நெய்ச்சிக்குப் போக்கி 58
நெய்யாத ஆடை 94
நெருப்பு மரம் 58
நெற்றிக்கண்ணன் 58

நே

நேரங்காட்டி 119

நை

நைமாமிசப் பூண்டு 94

நோ

நோவு 108
நோவு போக்கி 58

ப

பச்சை போல் வெள்ளை யாவான் 59
பசும்பிடிப்புல் 95
பஞ்ச பாண்டவர் முல்லை 60
பஞ்சம் தாங்கி 59
பஞ்சாக்கினி 60
பத்தியக்காரிக்கீரை 96
பத்தியம் முரிச்சான் 60
பத்திர யௌவனம் 124
பயித்திய நாசனி 61
பரப்பிரம்மசைலம் 124
பரமாணு கூலி 61
பல் கேசரம் 62
பல்லிணர் 109
பல்லுக்கு வெளி 153
பலசாலியரிசி 14
பலதேசிகக் கனி 96
பலவிளக்கு 125
பலினி 125
பழச்சாற்றில் அயம்செம் பாக்கி 170
பழம்பேசி 96
பற்றை 32
பறவை வேந்தன் கொடி 96
பன்றி குறும்புக் கிழங்கு 96
பன்றி தோன்றிப்பூடு 96
பனிப்பகைச் செடி 96

பா

பாஞ்சாலை 64
பாண்டு நாசனி 62
பாண்டு போசனம் 62
பாணி விருக்கம் 62
பாதமலர் 108
பாதம் 125
பாப்பாரக்கனி 63
பாம்பு கொல்லிப் பூண்டு 96
பார்வதி மரம் 97
பால்மரம் 97
பாலகனைக் காத்தான் 63
பாலடி 63
பாலபுட்பம் 154
பாவநாசனி 63

பி

பிசாசக்கரும்பு 97
பிசாசுபோக்கி 63
பிடுங்குகீரை 136
பிண்டபுட்பம் 109
பித்தசமனாக்கி 63, 84
பித்த சிலேட்டும அக்கினி 63
பித்த சுரசமனி 64
பித்த சுரநாசனி 64
பித்தநாசம் 64
பித்தநாசனி 64
பித்தபத்திரம் 64
பித்தமுறிமாதர் 64
பிரமபத்திரச்செடி 97
பிராணதாது 11
பிராமண இஷ்டம் 64
பிரியதரிசினி 97
பிரியை 65
பிள்ளைதாய்ச்சிக்கொடி 97
பிள்ளை மகன் 98
பிள்ளைமகன் இளையோன் 98
பிள்ளை மரம் 98
பிள்ளை மருந்து 9
பிள்ளை வளர்த்தி 9
பிள்ளை வளர்ப்பான் 9
பிளவை கொல்லி 97
பிறைமலர் 98

பீ

பீநாறிச்செடி 98

பு

புகழ் புகழ் 154
புகழ் மங்கை 156
புகழ்மரம் 158
புட்பகாதம் 109
புண்ணியத்தாரு 65
புண்ணியம் 65
புணைவி 65
புத்தகம் 66
புராணம் 144
புல்மரம் 98
புலிநகக்கொன்றை 165
புலிநகப்பூண்டு 165
புலிமரம் 66
புலியடிக்குலை 125
புழுக்கை 67
புழுக்கொல்லிப்பாளை 98
புறம்பணை 109

பூ

பூச்சிகொல்லி 10
பூதகி 126
பூந்துகில் மரம் 99
பூப்படை 136
பூப்பருத்தி 126

பூப்பலி 136
பூப்பனை 67
பூமடை 136

பெ

பெண்துடரி 99
பெண்மூங்கில் 67
பெயர் சொல்லாதது 9
பெயர் சொல்லா மருந்து 9
பெயர் சொல்லான் 9

பே

பேசுங்கனிமாதர் 68
பேதியைக் கட்டு மூலிகை 9
பேதிவாளம் 99
பேய்த்துயர்போக்கி 67
பேயோட்டாடி 68

பை

பைங்கதை 69
பைத்தியங்காரி 67

பொ

பொய் 126
பொய்சொன்னான் 67
பொற்காசு 109
பொற்றாது 109
பொன்னம்பலம் 69

போ

போக்குமுலைச்சி 68
போகா நிழலி 68
போகி 126
போசனக்குடாரி 60
போசனக்குறடாச் செடி 66

ம

மகா அமிழ்தம் 69
மகா அவுஷதநாசனி 69
மகா பித்தம் 69
மகாபேதை 144
மகோந்நதம் 69
மங்கலாகரம் 69
மங்கலி 70
மச்சங்கொல்லி 70
மச்சங்கொல்லிச்செடி 99
மட்டம் 126
மடவை மயக்கி 70
மடியுண்டடிப்பான் 70
மண்ணரசுமரம் 100
மண்ணில் வேந்தன் 100
மண்ணில் வேந்தன் பழம் 100
மண்ணில் வேந்தன் மரம் 100
மணக்கோலம் 70
மணவலி 127
மணிவித்தையுள்ளோன் 70
மதகரித்திப்பிலி 100
மதகுஞ்சரம் 70
மதப்புட்பி 69
மதிமயக்கிப்பூடு 39
மது திருமணம் 127
மது ரசப் பீலி 128
மந்தவைரி 71
மந்தைப்பெருச்சாளி 100
மயில் காலடி 75
மயில் காலடிப்பூண்டு 166
மருந்தீடு முறியப்பண்ணி 71
மலத்தை அறுப்போன் 72
மலத்தைத் தள்ளிச்சி 71
மலைத்திருக்கல் 72
மலை முனிமரம் 72
மலையரசன் 71
மலையரசி மரம் 100

மலையாளம் 71
மலையில் வைரவன் 72
மலைவெட்டு 72
மழுவேந்தும் கோபன் 73
மறுமொழி பேசாதான் 73
மன்று 72
மன்னன் மரம் 72
மனமயக்கிப்பூண்டு 39
மனோசிலையை மார்க்க மாக்கி 170
மனோசிலையை மெழு காக்கி 73,170
மனோதயம் 145

மா

மாகாளி 72
மாங்காளி 145
மாசுகி 73
மாட்டுக் குளம்படி 164
மாட்டுக் குளம் படிக் கொடி 164
மாதர் அழகி 73
மாதர் காய் 73
மாதவப்பிரியம் 128
மாதவன் நிறம் 73
மாதேசி 72
மாதேவிச்செடி 100
மாதோஷம் நீக்கி 74
மாமறையோன் 74
மாமிசபலா 74
மாமுநி 128
மாயன்மாலை 75
மாயன் மூலி 75
மாயன் வித்து 75
மாயோன் பூடு 137
மாருசி 74
மாருதத்தைப்போக்கி 74
மால் 129
மால்கொடை 76
மால்தாயம் 74
மால்மைத்துனன் 76
மாலலங்கல் 75
மாலூர்திக்கொடி 100
மாவணங்கி 129
மான் குளம்படிக் கொடி 164
மான் குளம்படிச்செடி 164
மான் செவிக்கள்ளி 164
மானேந்து மூலி 74

மி

மிகுபல அரிசி 14
மிகுபலம் 14
மிருது புட்பி 74
மிலேச்ச அரிசி 14
மிலேச்சசாகம் 14
மிலேச்சாசம் 14
மிலேச்சை 14

மு

முக்கடுகம் 23,76
முக்கண் 75
முக்கண்கனி 75
முக்கண்டகி 129
முக்கண்ணன் 75
முக்கண்ணனிளையோன் 101
முக்கண்ணி 75
முக்கண் பிரான் 75
முகதானியம் 74
முகப்பிரியம் 75
முகிழ் அரும்பு 76
முசல் மூலி 75
முட்கொடிச்சி 75
முட் செவ்வந்தி 137
முட்டை 129
முடிமேல் முடி 101
முடிமேலழகி 110
முடியில் தரித்தான் 76

முடிவேர் 76
முண்டக நாயகம் 76
முதலியார் 75
முப்புரமாலி 78
முப்புரமெரித்தான் 129
முயல் செவிக்கள்ளி 165
முருகன் வாகனம் 77
முருகா 77
முலைச்சி 68
முலைத்தாசி 79
முனிதளம் 79
முனிந்துரை 129
முனி பத்திரி 79
மூனிப் பூண்டு 79

**மூ**

மூக்கிற்கரியார் 78
மூக்குத்திக் காய்ச்செடி 163
மூக்குத்திப் பூண்டு 163
மூட்டைக் கொல்லி 79
மூத்திரதோஷ நாசனி 79
மூதேவிமூலி 79
மூவட்சி 137
மூவிலைச்சி 80
மூவிலைப்பயறு 102
மூவிலைமின்னி 80
மூவிலைமுன்னை 102

**மே**

மேகசத்துரு 80
மேகநிறத்தி 80
மேகராணிக் குருந்து மரம் 102
மேகவர்ணனை 81
மேகவருணை 81
மேகாரி 80
மேடகக்கோடு 164

**மை**

மையுடை 130

**மோ**

மோகினி 81

**ய**

யவனப்பிரியம் 81

**யா**

யானைக் கன்று 81
யானைக்கால் சுவடிக்கொடி 164
யானைத்தடிக்கா 131
யானைத்தடிச்சல் 131
யானைத் தலை 81

**யு**

யுகபத்திரிகை 131

**யோ**

யோகத்தை வளர்க்கு மூலி 81
யோகம் வளர்த்திடு ஞானி 81

**வ**

வக்கிர புட்பம் 131
வச்சிர சரீரம் 131
வசந்தபுட்பம் 82
வசியக்கனி 82
வஞ்சியர் மயக்கி 82
வடமாது 82
வண்டிபுட்பம் 83
வண்டுகொல்லி 131
வண்டுணாமரம் 102
வண்ணான் குறி 83
வம்புக்காய் 137

வயிரவிச்சாரணை 102
வர்ணப்பிரசாதம் 132
வருடபுட்பம் 132
வள்ளல் 132
வள்ளல் கீரை 102
வற்கலப்பட்டை 103
வனசந்திரிகை 132

வா

வாசனைக் கன்னி 83
வாசிபோசனம் 83
வாடாப்பூ 103
வாதகப சமனி 83
வாதகப விருத்தி 84
வாதகுன்ம நாசனி 84
வாதசுர நாசனி 85
வாதம் அறுக்கின்றோன் 85
வாதமூலி 125
வாதாடுகாளி 85
வாந்திசுர நாசனி 85
வாந்திசோதினி 86
வாரிகேசம் 86
வாருசி 86
வாலைப்பெண் 86
வாழைப்பழத்தி 132
வான்முட்டிமரம் 103
வானமுட்டிமரம் 103
வானம்பார்த்தபிறவி 137

வி

விசயன் 11
விசித்திரம் 86
விசுவநாதன் 86
விசுவாசன் 86
விசுவாமித்திரன்புல் 104
விசுவௌடதம் 132
விசோகம் 133
விஷ்ணுபத்திரம் 87
விஷக்கடிப்பிரியன் 87
விஷத்துக்கரசன் 87
விட்டுணுப்பிரியம் 133
விட்டுணுப்பிரியை 22
விடம்போக்கி 87
விடமரக்கனி 133
விடையூர்திச்செடி 103
விண்டு பத்திரம் 87
விண்மணிச்செடி 103
விந்தை 87
விரணங்கள் குட்டம் போக்கி 87
விரணத்தின் நீரைக் கொல்லி 87
விரணநீக்கி 88
விரல் நொடி 133
விருக்கநாதன் 134
விழை 134
விள்ளோடன் 134
விளக்கம் 88
விளிம்பு 88

வீ

வீட்டில் நெருப்பு 88
வீட்டுத்தீ 88
வீரச்செல்வி 89
வீரியதேசு 89

வெ

வெகுகாமி 89
வெகுரசத்தட்டை 104
வெகுவாசமுடையோகி 10
வெட்டிவேர் 86
வெண்ணீர்த்தெளிவு 89
வெந்த நெல்லரிசி 104
வெந்தயம் 129

வெள்ளெலிச் செவிச் செடி 166
வெளித்தாமரை 104

**வே**

வேகி 89
வேசி 10,89
வேசி நங்கை 89
வேசிப்பழம் 90
வேணுபலம் 104
வேந்தன் 90
வேர்க்கட்டை 90
வேர்ச்சாற்றில் செம்பு சுத்தி 90,170
வேர்ச்சாற்றில் நவலோக சுத்தி 90,170
வேர்ச்சாற்றில் நாகங் சுட்டி 170
வேல் விழிமாது 90
வேல்விழியாள் 90

**வை**

வைகுண்டம் 108
வைணவம் 90
வைத்தி 110
வைத்தியமாதா 111
வைரவன் 134

## சுந்தர சண்முகனாரின் உழைப்புகளுள் சில

| | | ரூ. கா. |
|---|---|---|
| மலர் மணம் (புதினம்) | .... | 20—00 |
| தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் பரிசு பெற்றது) | .... | 40—00 |
| தமிழ் இலக்கியப் பாலம் | .... | 20—00 |
| கெடிலக்கரை நாகரிகம் | .... | 50—00 |
| பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசு பெற்றது) | .... | 5—00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | .... | 20—00 |
| History of Tamil Lexicography | .... | 5—00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் (புதுவை அரசின் ஐயாயிரம் உரூபா பரிசு பெற்றது) | .... | 30—00 |
| பாரதிதாசரொடு பல ஆண்டுகள் | .... | 12—00 |
| கருத்துக் கண்காட்சி | .... | 20—00 |
| உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு | .... | 15—00 |
| தமிழ்க் காவிரி | .... | 12—00 |
| கடவுள் வழிபாட்டு வரலாறு | .... | 15—00 |
| தொல் திராவிடமொழி - கண்டுபிடிப்பு | .... | 20—00 |
| சுந்தரகாண்டச் சுரங்கம் | .... | 18—00 |
| மக்கள்குழு ஒப்பந்தம் | .... | 15—00 |